உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்

கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் முக்கிய வேத சத்தியங்கள்

R.ஸ்டான்லி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்

R. ஸ்டான்லி, B.E., M.TECH.,
மிஷனரி
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

வெளியிடுவோர்:
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
அஞ்சல் பை 609, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-242943, 248943
E-Mail : bym@vsnl.com

HIGHER WAYS HIGHER THOUGHTS (Tamil)

Copyright 1991 R. STANLEY

First Edition : July 1991

Second Edition : October 1993

This Edition : November 2000

Printed at

Bapuji Printers, Chennai 600 002.

என்னையும்

என் தம்பியையும்

கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில்

வளர்த்த

என் பெற்றோரின் நினைவுக்கு

அர்ப்பணம்!

பொருளடக்கம்

1.	சோதனையில் வெற்றி பெறுவது எப்படி ?	...	6
2.	பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி ?	...	15
3.	எழுப்புதல் என்றால் என்ன ?	...	25
4.	தேவனைத் தொழுவதென்றால் என்ன ?	...	32
5.	எனக்காக ஜெபிப்பது எப்படி ?	...	42
6.	மிஷனரிப் பணிக்காக ஜெபிப்பது எப்படி ?	...	49
7.	இக்காலத்துக்கு உபவாசம் தேவையா ?	...	58
8.	இயேசுபோல் ஊழியம் செய்வது எப்படி ?	...	66
9.	இன்று அற்புதங்கள் அவசியந்தானா ?	...	76
10.	எழுப்புதல் அணைவது ஏன் ?	...	86
11.	உபதேசங்களைச் சோதித்துப் பார்ப்பது எப்படி ?	...	97
12.	பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி ?	...	107

"என் நினைவுகள்
உங்கள் நினைவுகள் அல்ல;
உங்கள் வழிகள்
என் வழிகளும் அல்ல
என்று கர்த்தர் சொல்லுகிறார்.
பூமியைவிட வானங்கள்
எப்படி உயர்ந்திருக்கின்றனவோ,
அப்படியே
உங்கள் வழிகளைவிட
என் வழிகளும்
உங்கள் நினைவுகளைவிட
என் நினைவுகளும்
உயர்ந்திருக்கின்றன!"

(ஏசாயா 55:8,9).

1

சோதனையில் வெற்றி பெறுவது எப்படி?

பரிபூரண வெற்றியே தமது மக்களைக் குறித்த தேவ சித்தமாம். ஆனால் போரின்றி வெற்றியேது ? சோதனைகள்தான் எனக்கு D.D. பட்டங்களைத் தந்தன என்றார் மார்டின் லூத்தர்! பரிசுத்தவான்களில் பிரதானமானவனும் பாவங்களில் பிரதானமானதால் சோதிக்கப்படமுடியும் என்றார் அந்த வேத வியாக்கியானி மத்தேயு ஹென்றி! சீர்திருத்த விடிவெள்ளியெனப்படும் ஜான் விக்ளிப் இப்படிச் சொன்னார்: "மலையுச்சிக்குச் செல்லச் செல்ல காற்றின் விசை அதிகரிக்கும்; அப்படியே வாழ்வில் உன்னதம் ஏக ஏக சத்துருவின் சோதனையும் பலக்கும்!"

கிறிஸ்தவ வாழ்வில் மிகச் சாதாரணமான, அதே வேளையில் மிகச் சங்கடமான, பிரச்னையாகிய சோதனை என்பதைக் கண்டும் காணாமலும் இருக்கமுடியாது. விழிப்பாயிருக்கும் விசுவாசிகள் வெகு சிலரே; அவர்களே வெற்றியாயிருப்பவர்கள். சோதனை வருவது பாவமல்ல, அதில் விழுவது பாவம். விழுந்தவுடன் பிறர்மீது குற்றஞ்சாட்டி, ஏதாவதொன்றின் மீது பழி சுமத்துவது இயல்பு. இதனாலேயே தோல்வி தொடர்கிறது. ஆதாமுக்கும், கிறிஸ்துவுக்கும் வந்த சோதனைகளை முறையே ஆதியாகமம் 2, 3 மற்றும் மத்தேயு 4இலிருந்து ஒப்பிட்டுப் படித்தேன். நான் பெற்ற பத்து படிப்பினைகளை இங்கு தருகிறேன்.

1. சூழ்நிலையைப் பழிசாட்டக் கூடாது!

பிசாசின் சோதனையின்போது இயேசு "வனாந்தரத்தில்" இருந்தார். அது வெறும் பாறைகளும், மணலும் நிறைந்த பாலைவனம். ஆதாமோ மனிதன் இதுவரை கண்டிராத வளம், வனம் நிறைந்த "தோட்டத்தில்" இருந்தான். அங்கு எல்லாமே ஏராளம். வனாந்தரத்தில் இயேசுவுக்கு ஒன்றுமேயில்லை; தோட்டத்தில் ஆதாமுக்கு ஒன்றுமேயில்லாமலில்லை. இயேசு சோதனையை வென்றார்; ஆதாமோ அதில் விழுந்தான். நந்தவனத்திலிருந்தாலும் பாலைவனத்திலிருந்தாலும், நிறைவிலிருந்தாலும் குறைவிலிருந்தாலும் தேவன் நம்மிடம் வெற்றியையே எதிர்பார்க்கிறார். சூழ்நிலைகளுக்குக் "கீழ்" அல்ல, "மேல்" இருக்கவே அழைக்கப்பட்டுள்ளோம்.

இதோ அப்போஸ்தலன் பவுலின் வெற்றி முழக்கம்: "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும் ஜீவனானாலும்... தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோ 8:35-39). இங்கு மணமுடிப்பின் சித்திரமொன்றைக் காண்கிறோம். ஒருவரையொருவர் காதலித்தபின் பிற காரியங்களைப் பற்றி என்ன கவலை? "வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும்" பிரியாது நிற்க வாக்குக் கொடுத்துவிட்டார்களே! அறாத பாசக் கயிறல்லவோ அவர்கள் கட்டிய தாலி! வானத்திலும் பூமியிலும் நமக்கெதிராகச் செயல்படும் எல்லாச் சக்திகளைவிட இயேசுவின் அன்பு பெரியது. சூழ்நிலைகளின் அழுத்தத்திற்கும் இழுப்புக்கும் நாம் இணங்க மாட்டோம். அனுமதியில்லாது சோதனைகள் உள்ளே பிரவேசியாது!

2. ஐக்கியமின்மையைப் பழிசாட்டக் கூடாது!

உதவிக்கோ, ஐக்கியத்திற்கோ இயேசுவுக்கு அங்கு யாருமில்லை. காட்டு மிருகத்துணை மட்டுமேயிருந்தது. தனியாகவே சோதனையை மேற்கொள்ள வேண்டியதிருந்தது. ஆனால் ஆதாமுக்கு ஏவாளும், ஏவாளுக்கு ஆதாமும் நட்புக்கும், உறவுக்கும் இருந்தனர். சத்துருவுக்கெதிராக இருவராய் எதிர்த்து நின்றிருக்கலாம். ஆனால் தோற்றனர். இயேசுவோ வென்றார்.

படித்து முடித்து கல்லூரி ஜெபக்குழுக்களை விட்டுச் செல்லும் மாணவ மாணவியர் பலர் பின்வாங்கிக் குளிர்ந்து போகின்றனர். ஐக்கியமின்மையே காரணமெனச் சாக்குச் சொல்லுகின்றனர். விசுவாசிகளின் ஐக்கிய அனலில்

பாதுகாப்பும் பலமும் அதிகம்தான். அதனால் நமது தனிப் பொறுப்பு இல்லாது போகாது. "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோ 14:12). ஐக்கியம் பேராசீர்வாதம்; ஆனால் தனிமையில் விழுவதை தேவன் காணாதிரார். ஏதோவொரு காரணத்தினால் விசுவாசிகளேயில்லாத ஓரிடத்தில் நாமிருக்க நேர்ந்தால் கூடுதல் கவனம், விழிப்புடன் இருப்பது நமது பொறுப்பாகும். ஐக்கியத்தில் அறிந்த யாவும் தனிமையில் அப்பியாசிக்கப்பட வேண்டும்.

சோதனை வேளையில் யோசேப்பு தனியாகவே இருந்தான். சிறையோ, சிம்மாசனமோ, அவனுக்கு ஐக்கியமேது? தனித்தே நிற்கவேண்டிய திருந்தது. ஆனால் தேவன் பக்கம் நின்றதால் வெற்றியாய் வெளிவந்தான்.

தமது பரிசுத்தரின் தசைகளை வலுப்படுத்த சிலவேளைகளில் தேவன் அவர்களைத் தமது தீர்மானத்தின்படி தனிமையில் வைக்கிறார். மறுரூப மலையனுபவத்தில் எப்போதும் மயங்கிக்கிடக்க முடியாது. அங்குக் கூடாரம் போட்டு இருந்துவிட முடியாது. சோதனையின் பள்ளத்தாக்குக்கு இறங்கி வந்து வாழ்க்கையின் சவாலைச் சந்திக்க வேண்டும்; தப்ப முடியாது.

3. சோதனைகளின் தொடர்ச்சியைப் பழிசாட்டக் கூடாது!

அலையலையாய்ச் சோதனை வந்தும் இயேசு மேற்கொண்டார். மத்தேயு 4இல் மூன்றே சோதனைகள்தான் குறிப்பிடப்பட்டிருந்தாலும் பிசாசு "சில காலம்" மட்டுமே அவரை விட்டுச் சென்றான் என நாமறிவோம் (லூக் 4:13). நாம் இடங்கொடுத்தவுடன் அச்சோதனையின் வலு குறையும் அல்லது அது முடியும். இயேசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காததால் பிசாசு அவரை விடாமல், தனது தந்திரங்களை மாற்றிக்கொண்டு, தனது கோபத்தைப் பெருக்கிக்கொண்டேயிருந்தான். எனவேதான் "எல்லா விதத்திலும்" நம்மைப்போல் அவர் சோதிக்கப்பட்டார் என வாசிக்கிறோம். சோதனை ஒன்றன்பின் ஒன்று வந்தும் இயேசு வென்றார்; ஆதாமோ வந்த ஒரே சோதனையில் தோற்றான்.

"இப்படி அடுத்தடுத்து சோதனை வந்தால் நான் தாங்குவதெப்படி?" எனப் பொதுவாக மக்கள் புலம்புவதுண்டு. இயேசுவுக்கடுத்து யோபுவைத் தவிர இக்கேள்விக்கு வேறு யாரும் பதில் தரமுடியாது. ஒருவன் யோபுவிடம் வந்து, வேலையாட்களை சபேயர் வெட்டிப் போட்டனர் என அறிவித்தான். *"இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில்"* வேறொருவன் வந்து, தேவ அக்கினி மந்தைகளைச் சுட்டெரித்துப் போட்டது என்றான். *"இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில்"* வேறொருவன் வந்து, கல்தேயர் ஒட்டகங்களை

யெல்லாம் ஓட்டிக்கொண்டு போய்விட்டனர் என்றான். *"இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில்"* வேறொருவன் வந்து, வீடு விழுந்ததால் அவன் பிள்ளைகள் இறந்துபோனார்கள் என்றான். இவ்விதம் பயங்கரமாய், அலையலையாய் நம்மில் எவருக்கும் சோதனையோ, பரீட்சையோ வந்த துண்டோ? "இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவில்லை" (nahò 1:13-22). துக்கத்தைத் துதியாக்கினான். இழந்தவற்றிற்காய்ப் புலம்பாது இம்மானுவேலரைப் புகழ்ந்தான். சோதனையின் அகோரம் பாவத்தின் அலங்கோலத்திற்குச் சாக்குபோக்கல்ல!

"சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு ஜீவகிரீடத்தைப் பெறுவான்!" (யாக் 1:12).

4. இடத்தைப் பழிசாட்டக் கூடாது!

இயேசுவை வனாந்தரத்திற்கு வழி நடத்தியவர் ஆவியானவர்; அப்படியே ஆதாமைத் தோட்டத்தில் வைத்தவர் தேவன் (மத் 4:1; ஆதி 2:15). இயேசு மேற்கொண்டார்; ஆதாம் மேற்கொள்ளப்பட்டான். நமது தோல்விக்கு நாமிருக்கும் இடத்தின் நிலையையும், தன்மையையும் சாக்காக்க முடியாது.

அவனை எகிப்துக்கு விற்றது அவனது சகோதரரெனினும், "தேவனே" யோசேப்பை அங்கு அனுப்பினார் (ஆதி 45:4,5). எகிப்தின் மார்க்கமே துன்மார்க்கம்தான். ஒருவனைக் கொன்றாகிலும் அவனது மனைவியை எடுத்துக்கொள்ளத் தயங்கார் எகிப்தியர் (ஆதி 12:12). நாட்டின் எல்லா மட்டத்திலும் மட்டரக நடக்கையே. போத்திபார் என்பவன் பார்வோனின் ஓர் அதிகாரி. அவனது மனைவி வீட்டுக்காரியங்களைக் கவனிக்க வைக்கப் பட்டவன் மீது மோகங்கொண்டாளென்றால் பாருங்கள் (ஆதி 39:5-7). விபச்சாரம் விளையாட்டாயிருந்த ஒரு நாட்டில் யோசேப்பு இச்சைக்கு இல்லையென்றான்!

நமக்குச் சவால்விட தானியேல் இன்னொரு வாலிபன். பாபிலோனுக்குச் சிறையாக்கப்பட்டுச் சென்றான். அங்கும் அக்கிரமத்தின் பாத்திரம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. விக்கிரகாராதனை, குடிவெறி, இன்னும் அத்தனை பாவங்களும் அங்கு சாதாரணம். ஆனால் தானியேல் வேறுபட்டு நிற்க வீறுகொண்டான். அரசனின் அறுசுவையான ஆனால் அசுத்தமான ஆகாரத்தை அகற்றினான்.

"ஒரு கிறிஸ்தவ நிறுவனத்தில் மட்டும் எனக்கு வேலை கிடைத்து விட்டால்..." என ஏங்கும் கிறிஸ்தவர் பலரை நான் கண்டதுண்டு. பிரிய

மானவரே, அது எப்படிப்பட்ட இடமாயிருந்தாலும், அங்கு உங்களை வைத்திருப்பது தேவனானால் சாக்குச் சொல்ல உங்களுக்கு இடமில்லை.

5. உங்கள் அறியாமையைப் பழிசாட்டக் கூடாது!

ஆதாம் ஏவாளுக்கு தேவ கட்டளை மிகவும் தெளிவானது. அதற்கு வியாக்கியானம் தேவையில்லை. அது எளியது, குறிப்பானது (ஆதி 2:16,17); என்றாலும் தவறினர். ஆனால், கல்லை அப்பமாக்கக்கூடா தென்றோ, கோபுரத்திலிருந்து குதிக்கக்கூடாதென்றோ பிதாவானவர் இயேசுவுக்குச் சொல்லியிருந்ததாகத் தகவல் இல்லை. அப்படியானால் இக்காரியங்களைச் செய்யத் தூண்டிய பிசாசை இயேசு வென்றது எவ்வாறு ? அவர் தேவப் பிரமாணத்தின் "தத்துவங்கள்" மீது செயல்பட்டார். அவர் தேவ நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்திருந்தபடியால் தேவ திட்டங் களைச் சிதறடிக்கச் சத்துரு விரிக்கும் வலையை எளிதாய் அடையாளங் கண்டுகொண்டார்.

கல்லுகளை அப்பமாக்க வந்த முதல் சோதனையில், அவரது குமாரத்துவத்திற்கும் வசனத்தின் குறைவின்மைக்கும் சவால் வந்தது. மேலிருந்து குதிக்கச் சொன்ன இரண்டாம் சோதனையில் பகட்டுக்கும், தேவனைப் பரீட்சிக்கவும் அழைப்பு வந்தது. தேவ வல்லமையைச் சந்தே கிக்கும்படி பிசாசு இயேசுவைச் சோதித்துக்கொண்டிருந்தான். மூன்றாவது சோதனையில் மேன்மைக்குக் குறுக்கு வழியைப் பிசாசு சொல்லிக்கொண்டி ருந்தான். இதில் எந்தவொன்றிற்கு விட்டுக்கொடுப்பதும் தேவனது தத்துவங்களை விலை பேசுவதாகும்.

"ஐயோ, எனக்குத் தெரியாது; எனவேதான் விழுந்தேன்" என்று ஒருநாளும் சொல்லவேண்டாம். தேவன் தமது சத்தியத்தை நமது இருதயங்களில் வைத்துள்ளார். தமது பிரமாணத்தை நமது மனதில் எழுதியுள்ளார். போதுமான வேதத்தைக் கரங்களில் தந்துள்ளார். மட்டுமல்ல, நம்மிலிருக்கும் ஆவியானவர் எதை ஏற்க வேண்டும், எதை எதிர்க்க வேண்டுமென போதித்தவண்ணமிருக்கிறார். ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு கட்டளை தேவையில்லை. "புகை பிடியாதிருப்பாயாக" என்று வேதத்தில் கட்டளை கிடையாது! ஆனால் அதற்குரிய தத்துவம் உண்டே. ஆவியானவரின் ஆலயமாம் நமது உடலைக் கெடுக்கக்கூடாது; ஒன்றிற் கும் அடிமைப்படக்கூடாது; இப்படிப் பல.

6. பிறரைப் பழிசாட்டக்கூடாது!

விலக்கிய கனியைப் புசித்தாயோவென தேவன் ஆதாமைக் கேட்ட போது அவன் பழியைத் தன் மனைவி மீது போட்டுவிட்டான். "என்னுடனே

இருக்கும்படி தேவரீர் தந்த பெண்ணானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்" (ஆதி 3:12). இயேசுவுக்கு மிக வலுவான சோதனையொன்று பேதுரு மூலம் வந்தது. எருசலேமில் தாம் எவ்விதமாய்ப் பாடுபட்டுக் கொல்லப்படுவாரென்று இயேசு முன்னறிவித்துக்கொண்டிருக்கையில், பேதுரு, "ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே" என்று அவரைக் கடிந்துகொண்டான். சிலுவையைத் தவிர்க்க சத்துருவின் தந்திரத்தை இதில் அடையாளங்கண்ட இயேசு பேதுருவை நோக்கி, "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே!" என்றார் (மத் 16:21-23). தமக்கு மிகவும் நெருங்கியதொரு சீடன் சொன்னான் என்பதால் நொடிப்பொழுதும் இயேசு அதை மதித்தாரில்லை. ஏவாள் அக்கனியை ஆதாமிடம் கொடுக்கையில் இதைத்தான் அவன் செய்திருக்க வேண்டும். "அப்பாலே போ, சாத்தானே" என்று சொல்லவேண்டியவன், "அருகில் வா, சாமந்தியே" என்றானோ? அந்தோ மனுக்குலம் விழுந்தது!

நாம் உயிருக்குயிராய் நேசிப்பவரிடமிருந்தும் நமக்குச் சோதனை வரலாம். சற்றும் எதிர்பாராத இடத்திலிருந்தும் சோதனை நம்மைச் சந்திக்கலாம். பிசாசு கருப்பாக கொம்போடும் வாலோடுமா வருவான்? மிக அழகானதொரு மிருகமாய் அவன் தோட்டத்திற்குள் வந்தான். "சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேடத்தைத் தரித்துக்கொள்வானே" (2 கொரி 11:14). சோதிப்பவர் உங்கள் நண்பராயிருந்தாலும் மறுக்கத் தயங்கவேண்டாம். மனிதனை மகிழ்வித்து தேவனை மனமடிவாக்குவதைவிட மனிதனை மனமடிவாக்கி தேவனை மகிழ்விப்பதே மேல். நம்மைச் சோதனைக்குள் நடத்திச் செல்லத் தலைவர்கள் ஏராளம்; ஆனால் அவர்களைப் பின்பற்றுவது நமது தவறுதான் என்றார் ஒரு பக்தன். "என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே" (நீதி 1:10). சேர்ந்து செய்யும் பாவத்திற்குத் தனித்துக் கணக்குக் கொடுக்கவேண்டும், மறக்கவேண்டாம்!

7. கடவுளைப் பழிசாட்டக் கூடாது!

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கடவுள் ஆவிக்குரிய அளவிற்கும் மேலாக தனிப்பட்ட, வெளிப்படையான நண்பராகவும், ஆலோசகராகவும், போஷகராகவும் இருந்தார். அவர் தோட்டத்தில் உலாவுகிற "சத்தத்தை" அவர் கள் "கேட்க" முடிந்தது (ஆதி 3:8). அவர் அவர்களோடு முகமுகமாய்ப் பேசினார். தேவனை இவ்வளவு அருகில் வெளிப்படையாகப் பெற்றிருந்தும் அவர்கள் தோல்வியடைந்தனர். மாறாக, பிசாசு புறப்பட்டுச் சென்ற பின்னரே தூதர்கள் இயேசுவுக்குப் பணிவிடை செய்ய வந்தார்கள் (மத் 4:11).

"அந்த வேளையில் மட்டும் தேவன் எனக்கு உதவி அனுப்பியிருந்தால்..." என்று ஒரு போதும் சொல்லவேண்டாம். "தேவன் என்னைக் கைவிட்டு

விட்டார்'' என்ற வார்த்தையே கூடாது. நாம் ''உணருகிறோமோ'' இல்லையோ, அவர் இம்மானுவேலாகையால் எப்பொழுதும் நம்மோடுதான் இருக்கிறார். கிருபாசனம் இராப்பகலாய்த் திறந்துதானிருக்கிறது. நமது வாழ்வின் மிகச் சிறிய காரியம் என்பதால் அதில் அக்கறை காட்ட முடியாதளவு தேவனுக்கு வேலையில்லை. ''ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்'' (எபி 4:16). நாம் சோதிக்கப்படுகையில் அவர் சும்மா நின்று பார்த்துக்கொண்டிருப்பவரல்ல; பரிதபித்துப் பாதுகாக்கும் பாவமில்லா ஆசாரியரவர்.

சத்துரு நம்மீது அலைமோதச் செய்கையில் தேவன் அமைதியாயிரார். ''வெள்ளம் போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்'' (ஏசா 59:19).

8. உங்கள் சுபாவத்தைப் பழிசாட்டக் கூடாது!

பாவமறியா நிலையிலிருக்கும் போதே (state of innocence) ஆதாமும் ஏவாளும் தவறினர் (ஆதி 2:25). இயேசு இவ்வுலகிற்கு வருகையில் நன்மை தீமை பற்றிய அறிவு அவருக்கிருந்தது. அவர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தார் என்று வாசிக்கிறோம் (எபி 1:19). நம்மைப் போன்ற சுபாவம் அல்லது தன்மை (nature) அவருக்கிருந்தது. ''பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத் தையும் இரத்தத்தையும் உடையவரானார்... அவர் எவ்விதத்திலும் தமது சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது'' (எபி 2:14,17). நம்மைப் போன்ற உடலிலிருக்கும்போதே அவர் பூரண வெற்றியாளராயிருந்தார்!

''அது எனது சுபாவம்; நான் அதை எப்படி மாற்றமுடியும் ?'' பாவத்தில் விழுவதற்கு இது ஒரு பொதுவான சாக்குப்போக்கு. இங்கு இவ்வுலகில் தானே வெற்றியாய் வாழ தேவன் நமக்குப் போதுமான வாக்குகளையும், வல்லமையையும் கொடுத்துள்ளார். ''நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவரது திவ்விய **வல்லமையானது** நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்துக்குண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள் ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் **அருமையுமான வாக்குத் தத்தங்களும்** அவைகளினால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன'' (2 பேது 1:3,4). யானையை வாக்குப்பண்ணிப் பூனையைக்கூடத் தாமுடியாத இக்கால அரசியல்வாதிகள் போன்றவரல்ல நமது தேவன். அவர்களுக்கு வசனிப்பு உண்டு, வசதி குறைவு. தேவனோ சொல்வதைச் செய்ய

அனைத்துக்கும் சொந்தக்காரர். நமது சுபாவத்தை மாற்ற இவ்வளவு வாக்குகளையும், வல்லமையையும் அவர் தரும்போது நமக்குச் சாக்குச் சொல்ல இடமேது?

9. உங்கள் உடலின் ஆசைகளைப் பழிசாட்டக் கூடாது!

நாற்பது நாள் உபவாசித்த பின் உண்மையாகவே பசியெடுத்தபோதும் இயேசு சோதனையை மேற்கொண்டார். ஆதாமோ எல்லா காய்கறி கனி வகைகளும் நிரம்ப இருக்கும்போதே தோல்வியடைந்தான் (மத் 4:2; ஆதி 2:16).

தேவன் நமக்குப் போதுமான அளவுக்கும் அதிகமாகக் கொடுத்திருக் கிறார். திருப்தியாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மனைவிமீது திருப்தி, கணவன்மீது திருப்தி, உடைகள்மீது திருப்தி, இவை போன்றவை கட்டாயம் தேவை. "வயிற்றுக்கு உணவும் உணவுக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். உடலோ வேசித்தனதிற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் உடலுக்கு உரியவர்" (1 கொரி 6:13).

தனது உடலின் இச்சைகளுக்கு உடன்பட்டு இன்னொருவரின் மனைவியை எடுத்துக்கொண்ட தாவீதின் மீது தேவன் கோபங்கொண்டார். தமது துக்கத்தையும், ஏமாற்றத்தையும் தீர்க்கன் நாத்தான் மூலம் இவ்விதம் தெரிவித்தார்: "உன் ஆண்டவனுடைய பெண்களையும் உன் மடியில் தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன். கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன?" (2 சாமு 12:8,9).

மாம்சம் பலவீனமுள்ளதுதானே என்று சொல்லி உங்கள் உடல்மீது பழி போடாதிருங்கள். அதற்காகத்தான் தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்திருக்கிறார். நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொண்டால் மாம்ச இச்சையை நிறைவேற்றமாட்டோம். கிறிஸ்துவின் சிலுவையானது உயிர்த்தெழுதலின் வல்லமையால் நமக்கு மாம்சத்தின் மீதும் அதின் ஆசை இச்சைகள் மீதும் வெற்றி தருகிறது (கலா 5:16,24).

மீனுக்கு விருப்பமான புழுவையே சாத்தான் தனது தூண்டிலில் வைப்பான். மனிதர் விரும்பாத ஒன்றை அவன் ஒரு போதும் அவர்களுக்குப் பரிமாற

மாட்டான். எச்சரிக்கை! நாம் யார் என்பதைக் கண்டுபிடிப்பது நமக்கு வரும் சோதனைகளே என்றார் பக்தன் தாமஸ் கெம்பிஸ். உண்மையல்லவா?

10. சாத்தானைப் பழிசாட்டக் கூடாது!

சர்ப்பத்தின் மீது ஏவாள் பழியைப் போட்டுவிட்டாள் (ஆதி 3:13). மறுக்கமுடியாத சோதனையது, எனவேதான் விழுந்தேன் என்று சொல்லிக் கொண்டாளோ? "புசிப்புக்கு நல்லது... பார்வைக்கு இன்பம்... புத்தியைத் தெளிவிக்க இச்சிக்கப்படத்தக்கது!" (ஆதி 3:6). இயேசுவுக்கு வனாந்தரத்தில் வந்த சோதனைகளும் இவ்விதம் முப்பலமானவை (மத் 4:4,7,10). கவர்ச்சிக்குக் குறைவில்லை. ஆனால் அவர் மறுத்தார். ஏனெனில், "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல; அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" என்று இயேசுவுக்குத் தெரியும் (1 யோ 2:16).

பிசாசு வல்லவன்தான்; ஆனால் நம்மிலிருப்பவர் உலகத்திலிருக்கும் அவனிலும் வல்லவராச்சுதே (1 யோ 4:4). நாம் வெற்றியாகத்தான் இருக்க வேண்டும்! பிசாசு தோற்கடிக்கப்பட்ட சத்துருதானே. கிறிஸ்து வெற்றி வேந்தர். கிறிஸ்தோரும் வெற்றி வீரராயிருக்க வேண்டுமே ஒழிய தேவனது எதிரிக்குமுன் சரணடைந்துவிடக்கூடாது.

மறுக்கமுடியாத அளவு எச்சோதனையும் பெரியதல்ல. ஏனென்றால், "மனிதருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்குமேல் நீங்கள் சோதிக்கப்பட அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரி 10:13).

முடிவுரை

நமது கடைசி மூச்சுவரை சோதனைகள் நம்மைத் தொடரும். அடக்கம் செய்யப்பட்ட மனிதனே இப்பொழுது சோதிக்கப்படாத மனிதன் என்றார் ஒருவர்! எந்த நிலையிலும், எந்த இடத்திலும் நாம் சோதிக்கப்படலாம். "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று இரட்சித்துக்கொள்ளும்" என்று ஜெபிக்க இயேசு நமக்குப் போதித்துள்ளார். பத்திரமாய்ப் போய்ச் சேருவோம் என்பதே தேவ வாக்கன்றி பாதை எளிதாயிருக்கும் என்பதல்ல!

2

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி?

"பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்!" (யோ 20:22).

உயிர்த்தெழுந்த கர்த்தர் தந்த கட்டளையும் வாக்குத்தத்தமும் இது! சீடர்களது எதிர்கால வாழ்வும் ஊழியமும் இதையே சார்ந்திருந்தன. ஆவியானவரின்றி அவர்கள் அனாதைகள் போல்தான் (யோ 14:16-18). திக்கற்றவர்கள்!

"நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?" (அப் 19:1,2). சீடர் குழு ஒன்றிடம் பவுல் கேட்ட முதல் கேள்வி இதுதான். காரணமின்றியல்ல. இன்றும் கிறிஸ்தவர் ஒவ்வொருவருக்குமுரிய அதி முக்கிய கேள்வி இதுதான்.

ஆவியானவர் வெறும் சக்தியோ விசையோ அல்ல. அவர் கடவுள். பிதாவாகிய கடவுள், குமாரனாகிய கடவுள், ஆவியானவராகிய கடவுள் என வேதத்தில் காண்கிறோம். தேவத்துவ நபர்களில் பரிசுத்த ஆவியானவர் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவதால் அவர் முக்கியமற்ற "மூன்றாம்" நபர்தான் என ஒருபோதும் எண்ணிவிடக் கூடாது.

பிதாவானவர் பரத்திலிருக்கிறார். அங்கு அவரது வலது பக்கத்தில் குமாரனானவர் வீற்றிருக்கிறார். முழு ஆள்தத்துவத்தில் இன்று இகத்திலிருப்பது ஆவியானவர் ஒருவரே. அவரோடுள்ள நமது ஐக்கியமே நமது வாழ்வின் தரத்தை நிர்ணயிக்கும். நாமிருப்பது ஆவியானவரின் காலமாம்.

கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துமஸ், ஈஸ்டர் எல்லாம் தெரியும்; ஆனால் போதுமான அளவு பெந்தெகொஸ்தே பண்டிகையைத் தெரியாது. துக்கம்! பெந்தெகொஸ்தே அன்று ஆவியானவர் வந்தார். அது ஈஸ்டருக்குப் பிறகு ஏழு வாரங்களுக்கு அடுத்தது. பெந்தெகொஸ்தே எனும் கிரேக்கச் சொல்லுக்கு ஐம்பதாவது நாளென்று பொருள். பழைய ஏற்பாட்டுப் பண்டிகை ஒன்று இதற்கு நிழல் (யாத் 34:22; லேவி 23:15,16; 1 கொரி 15:23).

ஆசீர்வாதங்கள்

ஆவியானவருக்கு வேதம் பல பெயர்களைத் தருகிறது. அவை ஒவ்வொன்றும் ஓர் ஆசீர்வாதத்தைக் குறிக்கும்.

m t ® **பரிசுத்தமுள்ள** ஆவி என்றழைக்கப்படுகிறார் (ரோ 1:5). நமது பரிசுத்தமே அவரது குறி. "பரிசுத்த" ஆவியானவர் என்பதே அவரது முக்கிய பெயர். அவர் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார். அவரது "அக்கினி" நமது வாழ்விலுள்ள அசுத்தமான அத்தனையையும் சுட்டெரிக்கிறது (மத் 3:11,12). அவருக்கு முழு விடுதலை தந்தால் முழுமையாய் அவர் நம்மில் ஈடுபடுவார்.

அவர் **சத்திய** ஆவியானவர் (யோ 14:17). அவரே வேதத்தின் ஆக்கியோனும் வியாக்கியானியுமாம் (2 பேது 1:20,21; யோ 14:26). தேவனது ஆழங்களை அவர் நமக்குப் போதிக்கிறார். தேவனிடமிருந்து நாம் சுதந்தரிப்பவைகளை அவர் நமக்கு விளக்குகிறார் (2 கொரி 2:9-14). அவரே ஞானம், உணர்வு, ஆலோசனை, அறிவு எல்லாம் அருளுபவர் (ஏசா 11:2).

ஆவியானவர் **மன்றாட்டின்** ஆவி என்றழைக்கப்படுகிறார் (சக 12:10). ஜெபத்தில் யாருக்குத்தான் வல்லமைக் குறைவில்லை? என்ன, எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதைப் பூரணமாய் அறியோம். ஆவியானவர் இங்கு நமக்கு உதவுகிறார். அவரே நமக்காகவும் விண்ணப்பம் பண்ணுகிறார் (ரோ 8:26,27). ஆவிக்குள் ஜெபிக்கும்போது நமது விசுவாசம் உறுதியாய்க் கட்டப்படுகிறது (யூதா 20).

அவர் **பலமுள்ள** ஆவியானவர். அவர்கள் மீது ஆவியின் வல்லமை வந்திறங்கும்வரை காத்திருக்கும்படி கிறிஸ்து தமது சீடர்களுக்குக் கட்டளையிட்டார் (2 தீமோ 1:7; லூக் 21:49). ஆவியானவர் அவர்கள் மீது வந்தபின்புதான் எங்கும் தைரிய சாட்சிகளாய் அவர்களால் புறப்பட்டுச் செல்ல முடிந்தது (அப் 1:8). அதுவரை கோழைகளும் பயங்காளிகளுமாய்த்தானிருந்தனர்.

பெந்தகொஸ்தேக்கு முன் சோதனை வேளையில் பேதுரு இயேசுவை மறுதலித்தான்; சீடரனைவரும் அவரை விட்டோடினர். பெந்தெகொஸ் தேக்குப் பின்னரே கேலியும் எதிர்ப்பும் நிறைந்த திரள்களுக்கு முன்பும் சிங்கம்போல் நிமிர்ந்து நின்றனர், "இரத்த" சாட்சிகளாயினர். இயேசு தாமே ஆவியானவரின் வல்லமையினாலேயே ஊழியம் செய்து நமக்கோர் மாதிரியை வைத்துச் சென்றார் (அப் 10:38).

பரிசுத்த ஆவியானவரை இயேசு **தேற்றரவாளன்** அல்லது **உதவி யாளன்** என அறிமுகம் செய்தார் (யோ 14:16-18). பிரச்னைகளும் கண்ணீர்களும் இல்லாதோர் உண்டோ? மனிதன் நம்மை எவ்வளவுதான் தேற்ற முடியும்? அடித்து அடைக்கப்பட்டபோதும் சீடர் ஆனந்தமாய்ப் பாடினர் (அப் 16:24,25). அதுதான் ஆவியானவரின் மகிழ்ச்சியாம் (அப் 13:50,52). எவரும் பாடுகளுக்குத் தப்பமுடியாது. ஆனால் பாடுகளை நமது நன்மைக்காகவும் தேவனது மகிமைக்காகவும் மாற்ற உதவுபவர் ஆவியானவரே.

ஆவியானவர் கிறிஸ்துவின் சாயலை நம்மில் உருவாக்குகிறார் (2 கொரி 3:18).தெய்வீகக் குணங்களை தமது கனியாக நம்மில் வெளிப் படுத்துகிறார். "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், நம்பகம், சாந்தம், இச்சையடக்கம்" என்பவையே அவரது கனி (கலா 5:22,23). ஆவியானவர் தேவ அன்பினால் நம்மை நிரப்பும்போது தான் நமது விரோதிகளையும் அயலாரையும் நம்மால் தன்னலமின்றி நேசிக்க முடியும் (ரோ 5:5).

தேவ சித்தம் செய்வது இகத்தில் நமது முக்கிய வேலையாகும் (மத் 7:21). ஆனால் ஆவியானவரின்றி தேவ சித்தத்தை அறியவும் முடியாது, செய்யவும் முடியாது (ரோ 8:14).

தேவனை ஆராதிப்பது நமது அதிவுன்னத அழைப்பும் சிலாக்கியமுமாகும். உண்மையாய் ஆராதிப்போரையே பிதாவானவர் தேடுகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும் (யோ 4:22-24). ஆவியில் நிறையும்போது நமது இருதயத்தில் தேவனைக் கீர்த்தனம் பண்ணும் பாடல் ஆர்ப்பரித்தெழும்பு கிறது (எபே 5:18-20). நமது ஆவியில் ஒரு விடுதலையை உணருகிறோம்.

ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் அனுபவத்தை வேதம் பல பெயர்களால் அழைக்கிறது. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் (மத்

3:11; அப் 1:4). உன்னதத்திலிருந்து வரும் பலத்தினால் தரிப்பிக்கப்படுதல் (லூக் 24:4). நிரப்பப்படுதல் (அப் 2:4). பெற்றுக்கொள்ளுதல் (அப் 2:38; 8:15). அபிஷேகம் (அப் 10:38). ஆம், "பரிசுத்த ஆவியின் வரத்தைப்" பெற்றுக்கொள்ளும்போது, நாம் அபிஷேகிக்கப்படுகிறோம், நிரப்பப் படுகிறோம், தரிப்பிக்கப்படுகிறோம்! "பிதாவின் வாக்குத்தத்தத்தின்" மகிமைதான் என்னே! (அப் 1:5). தேவப்பிள்ளைகளின் பிறப்புரிமை!

ஆயத்தம்

வேதத்தில் மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட சம்பவம் ஒவ்வொன்றும் பயனுள்ள படிப்பினைகளைத் தருகிறது.

❒ மேலறையில் கூடியிருந்த சீடர் நடுவில் ஓர் **எதிர்பார்ப்பின்** சிந்தை இருந்தது. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற ஒரே காரியத்திற்காய்த் தங்கள் இருதயங்களை இணைத்தனர் (அப் 1:13,14; 2:1). அவர்களுக்குள் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்தாள் (அப் 1:14). ஒருவேளை இவ்வனுபவம் தேவையில்லாத ஒருவருண்டானால் அது மரியாள்தான். அவள் கருத்தரித்ததே ஆவியானவரால்தான். அவளது கருவறையிலிருந்தவர்தான் அபிஷேக நாதர். அவளது வாழ்த்துதலைக் கேட்ட மாத்திரத்தில் எலிசபெத்து ஆவியால் நிறைந்தாள். இவையெல்லாம் இருப்பினும், ஆவியின் அபிஷேகம் பெறத் தாகத்தோடு மற்றவர்களோடு மரியாளும் தாழ்மையாய்க் காத்திருந்தாள். "பசியுள்ளவர்களை நன்மை யினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்" என்று பாடினாள் அல்லவா? (லூக் 1:53).

❒ எருசலேமிலுள்ள கிறிஸ்தவரை உபத்திரவம் சிதறடித்தது. எங்கும் திரிந்து நற்செய்தியைப் பறைசாற்றினர். பிலிப்பு ஓர் உதவிக்காரன்தான்; ஆனால் அவனது நற்செய்தி ஊழிய வாஞ்சை அவனைச் சமாரியப் பட்டணம் ஒன்றிற்கு துரத்திச் சென்றது. அங்கு அவன் பிரசங்கித்தான், நோயுற்றோரைச் சுகமாக்கினான், பிசாசுகளைத் துரத்தினான். கிறிஸ்துவை விசுவாசித்தோருக்கு திருமுழுக்கு கொடுத்தான். நகரில் பேரானந்தம் உண்டாயிற்று. இச்செய்தி எருசலேமை எட்டியது. உடனே பேதுருவும் யோவானும் இப்புது விசுவாசிகளைச் சந்திக்கச் சென்றனர். அவர்கள் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை எனக் கண்டனர். எனவே அப்போஸ்தலர் ஜெபித்து அவர்கள் மீது கைகளை வைத்தனர். அப்பொழுது அவர்கள் ஆவியைப் பெற்றனர். பணம் கொடுத்தாவது ஆவியருளும் வரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென பிரபல வித்தைக்காரன் சீமோன்

விரும்புமளவு அருமையான அனுபவமாயிருந்தது அது (அப் 8:1-19). சமாரியா விசுவாசிகளின் திறந்த மனதைக் கவனியுங்கள். ஏராளம் அற்புதங்களைக் கண்டும் அனுபவித்துமிருந்தனர். ஆனால் மற்ற ஊழியர் மூலம் தேவனிடமிருந்து இன்னும் கூடுதலாகப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தனர். அவர்களைக் கிறிஸ்துவிடம் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்த ஊழியனோடு நின்றுவிடவில்லை. பிலிப்புவைக் கதாநாயகனாய் வணங்காது வெளியேயிருந்து வரும் இன்னும் விரிவான ஊழியத்தையும் பயன்படுத்திக்கொண்டனர்.

❒ பவுலின் அனுபவமும் அருமையானது. தமஸ்கு செல்லும் சாலையில் கிறிஸ்துவைச் சந்தித்தான். உடனே அவரது ஆளுகைக்கு அடிபணிந்தான். உலகுக்கு மூன்று நாள் குருடனானான். அந்நாட்களை முழு உபவாசத்திலும் ஜெபத்திலும் செலவிட்டான். கடந்த காலத்திற்காய் மனந்திரும்பி எதிர்காலத்திற்காய்த் தேவனைத் தேடிக்கொண்டிருந்தான். எழுந்து வரப்போகிற இப்பெரிய அப்போஸ்தலனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் அவனை அபிஷேகத்திற்குள் வழிநடத்தவும் தேவன் வேடிக்கையாக எருசலேமிலிருந்த ஓர் அப்போஸ்தலனையல்ல, தமஸ்குவிலிருந்த ஒரு சாதா சீடனையே தெரிந்துகொண்டார் (அப் 9:1-18). எப்படி, யார் மூலம் தேவன் நம்மை அபிஷேகிக்க வேண்டுமென்று சொல்ல நமக்குரிமையில்லை. அவரது வழிகளுக்கு அர்ப்பணித்து, அடிபணிய வேண்டும்.

❒ இத்தாலிய இராணுவ அதிகாரியாகிய கொர்நேலியுவுக்குப் பிரசங்கிக்க ஆவியானவர் பேதுருவைப் பணித்தார். கொர்நேலியு யூதனல்லாத புறவினத்தானாயிருந்ததால் பேதுரு மிகவும் தயங்கினான். முடிவில் சென்றான். அங்கு தனது இல்லத்தில் இனத்தாரனைவரோடு கொர்நேலியு மிகுந்த ஆவலோடு காத்துக்கொண்டிருந்தான். பேதுரு தனது பிரசங்கத்தை முடிக்கு முன்னரே ஆவியானவர் குழுமியிருந்தோர் மீது இறங்கினார். இதனால் பேதுருவுக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் உண்டான வியப்பு கொஞ்சமல்ல. ஆம், "தேவன் பாரபட்சமுள்ளவரல்ல!" கொர்நேலியு மிகுந்த தேவபக்தியுள்ளவன். குடும்பம் முழுவதும் கர்த்தருக்குப் பயப்பட்டது. தருமங்களை மிகுதியாகச் செய்தான். அவன் வாழ்வே ஜெபமாகத்தானிருந்தது. சமுதாயத்திலும் அவனுக்கு நல்ல செல்வாக்கு. ஆனால் தேவனோடு ஆழ்ந்த, உன்னத அனுபவங்'களுக்குக் கடந்து செல்ல அவனுக்கிருந்த தாகத்தை இவையொன்றும் தடுக்க முடியவில்லை (அப் 10).

❒ எபேசுவிலிருந்த சீடர் ஆவியானவரைப் பற்றிய தங்கள் அறியாமையை உண்மையாய் ஒப்புக்கொண்டனர். யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை ஏற்கனவே பெற்றிருந்தனர். இப்பொழுது விசுவாசிகளுக்குரிய ஞானஸ்

நானத்தைப் பெற்றுக்கொண்டனர். அதற்குப்பின் பவுல் கரங்களை வைத்ததும் ஆவியானவர் அவர்கள் மீது வந்தார். எல்லாம் தெரியுமென்றிருப் போரைத் தேவன் கடந்துசெல்வார். சிறு குழந்தைகள்போல் தம்மிடம் வருவோரோ அவருக்குப் பிரியம் (ஏசா 28:9).

எதிர்ப்புகள்

ஆவியின் அபிஷேகத்தைக் குறித்த இப்போதனைக்கு மக்கள் பல எதிர்ப்புகளைத் தெரிவிப்பர். அவற்றில் முக்கியமானவை மூன்று.

இது ஒரு குறிப்பிட்ட **சபைப்பிரிவின்** (denominational) அனுபவம் என்பர். நீதிமானாக்கப்படுதலைக் குறித்து லுத்தரன் சபையார் அதிகம் பேசுவதால் அது அச்சபைப் பிரிவுக்குத்தானோ? பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்து மெதடிஸ்டு சபையார் அதிகம் பேசுவதால் அது அவர்களுக்கு மட்டுமுரியதோ? இல்லவே இல்லை! நீதிமான்களாக்கப்படுதலும் பரிசுத்தமாக்கப்படுதலும் வேதம் போதிக்கும் சத்தியங்களானதால் அவை எச்சபைப் பிரிவினருக்கும் உரியவை. ஆவியின் அபிஷேகமும் அப்படியே. பெந்தெகொஸ்தே சபையினர் அதை அதிகம் வலியுறுத்துவதால் அது அச்சபைப்பிரிவினருக்கே உரிய அனுபவமாகிவிடாது. "முழுச்" சத்தியத்தின் ஏதாவது ஒரு "பகுதி" ஒவ்வொரு சபையாலும் வற்புறுத்தப்படுகிறது; நாம் அனைத்தையும் எடுத்துக்கொள்வோம்.

இன்னும் சிலர் இதை வெறும் **உணர்ச்சிவச** (emotional) அனுபவ மென்பர். உணர்ச்சிகள் தவறோ? அன்பு, மகிழ்ச்சி, கோபம், கவலை, இவை யாவுமே உணர்ச்சிகள்தானே. செத்தவனைத் தவிர யாருக்குத்தான் உணர்ச்சி கிடையாது? அன்பால் நிறைந்தால் அணைக்கிறேன். ஆனந்தம் பொங்கினால் ஆடுகிறேன். கோபப்பட்டால் அலறுகிறேன். கவலை நிறைந் தால் அழுகிறேன். இப்படித்தான் நாம் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். நிறைவை வெளிப்படுத்துகிறோம். உள்ளனுபவம் ஒவ்வொன்றுக்கும் வெளிக்காட்டுதல் உண்டு. நிரம்புதலுக்கு அடையாளம் வழிந்தோடுதலே. அதே வேளையில் ஆவியின் வெளிப்பாடு எனக்கூறி அலங்கோலமான செயல்களைப் புரிவதையும் நாம் ஒத்துக்கொள்ள முடியாது. ஆனால், துர்ப்பிர யோகத்திற்கு மாற்று மருந்து நற்பிரயோகமா, பிரயோகிக்காதிருப்பதா? கிரிக்கெட்டும் டென்னிஸும் மக்களை அப்படியே உலுக்கி விடுகிறதே. யாரோ ஒருவர் விளையாடுவதைப் பார்த்ததும் இவர்கள் தங்களையே மறந்து துள்ளிவிடுகிறார்களே. பரலோகத் திராட்சரசத்தால் நாம் நிறையும்போது ஆடிப்பாடி கைதட்டி மகிழக்கூடாதா என்ன? தவறோ? நாம் ஒரு ஜடமா?

மூன்றாவது எதிர்ப்பு — இது பாரம்பரியத்திற்கு முரணானது (anti-traditional) என்பர். ஆவியின் அபிஷேகத்தைப் பற்றிய போதனை சபையைப் பிரிக்கிறது என்று குற்றஞ்சாட்டுவர். ஏதோ பெரிய ஒற்றுமை இருப்பது போல்! சத்தியம் பிரிக்கும் என்பது உண்மைதான். அது பட்டயம் அல்லவா? எல்லாப் பிரிவினைகளையும் தவறு என்று சொல்லிவிட முடியாது. ஆவியானவர் போலி ஒற்றுமையைத் தகர்த்து ஆவிக்குரிய ஒருமைப் பாட்டை உருவாக்குவார். அவர் கோதுமையைச் சேர்ப்பார், பதரையோ எரிப்பார். இதோ ஓர் எடுத்துக்காட்டு: இயேசு யூதருடைய கூடாரப் பண்டிகையில் கலந்துகொண்டார். பாதிப் பண்டிகையின்போது தேவாலயத் திற்குப் போய் உடதேசம் பண்ணினார். பண்டிகையின் கடைசி நாளில் அவர் சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" என்று கூறினார். பரிசுத்த ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். மக்கள் இதைக் கேட்டபோது அவர்களுக்குள்ளே வாக்கு வாதமும் பிரிவினையும் உண்டாயிற்று! (யோ 7:2,14,37-43). பாரம்பரிய யூதரே ஆண்டவரைச் சிலுவையிலறைந்தனர். பொதுவாக பாரம்பரியக் கிறிஸ்தவரே ஆவியானவருக்கு எதிர்த்து நிற்பர். சரித்திரம் திரும்புகிறது.

பிரச்னைகள்

ஆவியின் அபிஷேகத்தை நாடுகையில் மக்கள் சில பிரச்னைகளைச் சந்திப்பதுண்டு.

முதலாவது, **பயம்** எனும் பிரச்னை. வேறே ஆவி எதையும் பெற்றுவிடக் கூடாதே என அஞ்சுவர். இது அடித்தளமற்றது. பரிசுத்த ஆவிக்காக ஜெபிக் கையில் இவ்வித பயம் மக்களுக்கு வரக்கூடுமென இயேசு அறிந்ததால்தான் இப்படிச் சொன்னார்: "உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பம் கேட்டால் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானா? முட்டையைக் கேட்டால் தேளைக் கொடுப்பானா? பொல் லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடம் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (லூக் 11:11-13). இதற்கு விளக்கம் தேவையோ?

அடுத்து, **விசுவாசம்** குறித்த பிரச்னை. இயேசுவை ஏற்றுக் கொள்வதற்குத் தேவையாயிருந்ததைவிடக் கூடுதலான, அசாதாரண விசுவாசம் இருந்தால்தான் ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பலர் கருதுகின்றனர். அப்படியல்ல. கிறிஸ்துவானவரும், ஆவியானவரும்

பிதாவானவரின் இணையான ஈவுகளாவர். மேலறையில் காத்துக் கொண்டிருந்தபோது சீடருக்கு அபூர்வ விசுவாசம் ஒன்றுமில்லை (மத் 28:16,17; மாற் 16:14; லூக் 24:41). அடிப்படை விசுவாசமே தேவையானது (யோ 7:39). ஆவியானவர் நம்மீது வந்தபின்னரே நாம் விசுவாசத்தில் வளருகிறோம்.

அடுத்து, **உணர்ச்சி** பற்றிய பிரச்னை. உணர்ச்சிகள் எல்லோருக்கும் ஒன்று போலிராது. ஆவியானவர் அவர்கள் மீது வரும்போது சிலர் துள்ளுவர், அசைவர், விழுவர். எல்லாரையும் அப்படிச்செய்ய எதிர்பார்ப்பது தவறு. அபிஷேகத்தின்போது மின்விசை உடலில் சென்றதுபோல் உணர்ந்ததாக சிலர் சாட்சியிடுகின்றனர். வேறு சிலருக்கோ அது திட்டமான ஆனால் மிதமான அனுபவமாயிருக்கும். முதலாவது சத்தியம், அடுத்து விசுவாசம், இறுதிதான் உணர்வுகள். இந்த வரிசை முக்கியம்.

நவநாவுகள்

தனக்குத் தெரியாத மொழியில் விசுவாசியொருவன் ஆவியின் வரத்தினால் தேவனோடு பேசுவதே அந்நியபாஷையாகும். நமக்குத் தெரிந்த மொழியில் பேசுகையில் நமது "மனது" வார்த்தைகளைத் தருகிறது; ஆனால் நவநாவுகளில் பேசுகையில் ஆவியானவரின் உந்துதலால் நமது "ஆவி" வார்த்தைகளைத் தருகிறது (1 கொரி 14:14). இது தேவனுக்குப் புரியும்; பேசுபவருக்கும் கேட்போருக்கும் புரியாது (வச 2). ஏசாயா இதைத் தீர்க்கதரிசனமாய் உரைத்தான் (ஏசா 28:11,12). இது நற்செய்தியின் காலத்துக்குரியதென இயேசு முன்னறிவித்தார் (மாற் 16:15-17). ஆதிச் சபையினர் இதை அனுபவித்தனர். மற்ற எத்தனையோ சத்தியங்கள், அனுபவங்கள், வரங்களைப் போல் இதையும் இருண்ட காலத்திற்குள் நுழைந்த பின்வாங்கிய சபை இழந்தது. இன்று தேவன் இவற்றைத் திரும்பத் தருகிறார்.

ஆவியின் அபிஷேகத்தோடு நவநாவுகள் பேசப்பட்ட சம்பவங்கள் பலவுண்டு. பெந்தெகொஸ்தேயன்று 120 சீடரும் நவநாவுகளில் பேசினர் (அப் 2:4). பவுல் நவநாவுகளில் பேசினான் (அப் 9:17; 1 கொரி 14:18). கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் நவநாவுகளில் பேசினர் (அப் 10:46). எபேசுவிலிருந்த சீடர் நவநாவுகளில் பேசினர் (அப் 19:6). தேவன் இந்த வரத்தை இவ்வளவு குறிப்பாகத் தெரிந்தெடுத்து ஓர் அடையாளமாகப் பயன்படுத்தியதற்குக் காரணங்கள் உண்டு.

1 கொரி 12:7-10இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஆவியின் ஒன்பது வரங்களில், நவநாவுகளே பிரதானமாக ஜெபத்தில் தேவனை நோக்கிப் பயன்படுத்தப்படுவதாகும் (1 கொரி 14:2,14). பிற வரங்களெல்லாம் பெரும்பாலும் மனிதரை நோக்கிச் செயல்படுபவை. இரண்டாவது, அந்நிய பாஷையில் பேசுவது சுய பக்திவிருத்திக்கான ஓர் ஏதுவாகும் (1 கொரி 14:4). பிறரைப் பக்திவிருத்தியடையச் செய்யுமுன் நாம் பக்திவிருத்தியடைய வேண்டும் (1 கொரி 14:18,19). மூன்றாவது, வெளிக்காட்டுவதில் நமது அவயவங்களில் நாவுதான் பிரதானமானது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நாவு அடக்கப்படும்வரை பூரணம் சாத்தியமில்லை (யாக் 1:26; 3:2). ஒருவேளை தேவன் தமது ஞானத்தின்படி முதலாவதாகவே நமது நாவைப் பிடித்துக்கொள்ளுகிறார் போலும்! பரத்தின் அக்கினி ஏசாயாவின் நாவில் வந்ததல்லவா? நவநாவுகளில் பேசுகிறார்களா இல்லையா என வைத்து அவர்கள் அபிஷேகம் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்று நியாயந்தீர்க்காமல், பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்கும்போது ஆசீர்வாதமான இந்த வரத்தை நாடும்படி விசுவாசிகளை ஊக்கு விக்கிறோம். நாம் பூரண நிலைக்கு வரும்வரை அந்நிய பாஷைகள் ஓய்ந்துபோகாது (1 கொரி 13:8-12).

சில கிறிஸ்தவருக்குத் தங்கள் அவயவங்களை ஆவியானவரின் உந்து தலுக்கு இசைவாய்த் தளர்த்திக் கொடுப்பதில் பிரச்னையுண்டு. ஆவி யானவர் கண்ணியமானவர். எவர்மீதும் எதையும் திணிக்கமாட்டார். புறாவைப்போல ஆட்டுக்குட்டியின் மீது வந்தவரல்லவா அவர்? பெந்தெ கொஸ்தேயன்று "ஆவியானவர்" சீடர்களுக்கு வரமருளினார்; ஆனால் "அவர்கள்தான்" பேசத் துவங்கினர் (அப் 2:4). விசுவாசிக்கிறவர்கள் பிசாசுகளைத் துரத்துவார்களென்றார் இயேசு. இருக்குமிடத்திலேயே உட்கார்ந்து விசுவாசித்துக் கொண்டேயிருந்தால் பிசாசு போய்விடுமா? நாம் செயல்பட வேண்டும். அதே மூச்சில்தான் விசுவாசிக்கிறவர்கள் நவ மான மொழிகளைப் பேசுவார்கள் என்றும் இயேசு சொன்னார். ஆவியானவர் உந்துகிறார்; நாம்தான் பேசவேண்டும் (மாற் 16:17,18).

உலகெங்கும் ஓர் அருள்மாரியைக் காண்கிறோம். ஆவியின் வெள்ளம் சபைப் பிரிவுச் சுவர்களைத் தாண்டிச் செல்கிறது. கிறிஸ்தவர்களுக்குள் அபிஷேகம் பெற்றோரின் எண்ணிக்கை விரைவாய் வளர்ந்துவருகிறது. ஒரு காலத்தில் இவ்வனுபவத்தை கண்டும் காணாதிருந்த தலைவர் சிலர் சமீப நாட்களில் இவ்வனுபவத்திற்குள் வந்துவிட்டனர். ஆவியின் அசை வாட்டத்தை இன்னும் எதிர்த்து நிற்போருக்குத் தோல்விதான். நீட்டப்பட்ட தேவக்கரத்தை மடக்க யாரால் முடியும்?

நீங்கள் பெறுவதெப்படி ?

பாவங்களைவிட்டு **மனந்திரும்புங்கள்**. உலக இச்சைகளைவிட்டு எழுந்துவாருங்கள். பிதாவின் மடிக்கு வந்து சேருங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை **விசுவாசியுங்கள்**. அவரே உங்களுக்குப் பதிலாக பலியான இரட்சகர். உங்களுக்காகவே மரித் துயிர்த்தெழுந்தார்.

ஆவியின் வரத்தைத் தரும்படி தேவனிடம் **கேளுங்கள்**. ஏற்கனவே அபிஷேகம் பெற்ற ஒருவரோடு ஜெபியுங்கள். தேவமனிதன் ஒருவர் உங்கள் மீது கைகளை வைத்து ஜெபிக்கட்டும். உங்கள் விருப்பு வெறுப்புகளை விட்டு வெளிவாருங்கள். பாரம்பரிய மனநிலையை உடைத்தெறியுங்கள். தயக்கங்கள் வேண்டாம்.

விசுவாசத்தினால் ஆவியைப் **பெற்றுக்கொள்ளுங்கள்**. வழிந்தோடு மளவு நிரப்பப்படும்படி உங்களை முழுவதுமாய் விட்டுக்கொடுங்கள். நீங்கள் நிரப்பப்பட்டுவிட்டால், அது "உங்களுக்கே" தெரியும். வாயைத் திறந்து ஆவியானவரின் உந்துதலின்படி பேசுங்கள்.

ஆவியின் வரத்திற்காய்த் தேவனைத் துதியுங்கள். அவரில் மகிழுங்கள். உங்கள் பாத்திரம் நிரம்பி வழியட்டும்!

3

எழுப்புதல் என்றால் என்ன?

இன்றையச் சபையின் இன்றியமையா தேவை எழுப்புதல், சீர்திருத்தம், ஆதிநிலையேகுதல் ஆகும். எழுப்புதல் கொண்டுவருவது உயிர்மீட்சி; சீர்திருத்தம் கொண்டுவருவது உபதேசத் தெளிவு; ஆதிநிலையேகுதல் கொண்டுவருவது உருவமைப்பு. இவை ஒவ்வொன்றும் அடுத்ததோடு இணைந்தது. ஆனால் எல்லாவற்றிற்கும் மையமும் அடித்தளமுமானது V-ழு-ப்-பு-த-ல் ஆகும். உயிரில்லாது உபதேசமும் உருவமைப்பும் இருந்து என்ன பயன் ?

தேவனது கவலையெல்லாம் கம்யூனிசமோ, கத்தோலிக்க மார்க்கமோ அல்ல; குளிர்ந்து போன கிறிஸ்தவமே! நாம் லுத்தரன் சபையினர் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளுகிறோம்; ஆனால் நம்மிடம் லுத்தரின் விசுவாசமோ தைரியமோ இல்லையே! நாம் மெதடிஸ்டுகள் என உரிமை பாராட்டுகிறோம்; ஆனால் ஜான் வெஸ்லியின் அபிஷேகம் நம்மீது இல்லையே! நாம் "பிரதரன்" சபையினர் என்கிறோம்; சகோதர சிநேகம் எங்கே ? நாம் பாப்திஸ்து சபையினர் என்பதில் பெருமை; ஆனால் வெறும் தண்ணீர் ஞானஸ்நானம் நம்மைக் குளிராக்கிவிட்டது — ஆவியின் அக்கினி யில்லையே! நாம் பெந்தெகொஸ்தே சபையினர் என்று கத்துகிறோம்; ஆனால் பெந்தெகொஸ்தேயின் வல்லமையும் பரிசுத்தமும் எங்கே ? "நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" என்று சர்தை சபைக்குக் கிறிஸ்து எழுதினார் (வெளி 3:1). எழுப்புதல் இல்லையேல் எடுத்தல்தான்—கல்லறைத் தோட்டத்திற்கு!

சில ஆண்டுகட்குமுன் பிரசங்கி நண்பரொருவர் எனக்கு இப்படி எழுதினார்: "தம்பி, எழுப்புதலுக்காக ஜெபி, எழுப்புதலைப் பிரசங்கி, எழுப்புதலுக்காக ஆயத்தப்படு, தூங்கும்போது எழுப்புதலைக் கனவாக்கு, அப்பொழுது எழுப்புதல் வரும்!" இந்த ஆலோசனை எனக்கு அதிகப் பிரியம். ஆனால் எழுப்புதலென்றால் என்ன, எழுப்புதல் வந்தால் என்ன நடக்கும் என்றெல்லாம் நாம் அறிந்திருக்கவேண்டும். வேதம் முழுவதிலும் எழுப்புதல் சரிதைகள் உண்டு. எசேக்கியா ராஜா காலத்து எழுப்புதல், சீர்திருத்தவாதி எஸ்றா, திரும்பக்கட்டுவோன் நெகேமியா ஆகியோர் காலத்து எழுப்புதல், பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து அப்போஸ்தல காலத்து எழுப்புதல், இப்படி ஏராளம். இவற்றையெல்லாம் கவனமாய்ப் படிக்க வேண்டும். சபைச் சரித்திரத்தின் பிற எழுப்புதல்களையும் ஆராய வேண்டும். எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் ஜான் வெஸ்லி காலத்து எழுப்புதல், அமெரிக்காவில் சார்லஸ் பின்னி, சீனாவில் யோனத்தான் கோபோர்த், வேல்ஸ் நாட்டில் இவான் ராபர்ட்ஸ், இப்படிப் பல. ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட இவ்வித சம்பவங்களிலிருந்து கிடைக்கும் படிப்பினைகள் அருமையானவை. சரித்திரத்திலிருந்து நாம் எதையும் கற்றுக்கொள்வதில்லை என்பதுதான் சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்றார் ஒருவர்! இந்நிலை வேண்டாம்.

எழுப்புதலைக் குறித்த தெளிவான விளக்கத்தை தீர்க்கதரிசி ஏசாயா தனது 64ஆம் அத்தியாயத்தில் அழகாய்த் தருகிறான். எத்தனை தடவை வேண்டுமானாலும் முழங்காலில் நின்று இவ்வத்தியாயத்தை வாசியுங்கள். அதில் ஊறிவிடுங்கள். எழுப்புதலைக் குறித்த ஏழு படிப்பினைகளை இவ்வத்தியாயத்தில் நான் கண்டேன்.

1. தேவனிடமிருந்துதான் எழுப்புதல் வருகிறது.

"தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி..." (வச 1)

மனித முயற்சிகள் எழுப்புதலை உருவாக்கிவிடாது. எழுப்புதலுக்கு நிகழ்ச்சி நிரல் தயாரிக்க முடியாது. நற்செய்திப் பெருவிழாவுக்கு நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தமுடியும். எழுப்புதலுக்கு அது சாத்தியமல்ல. சபையை எழுப்புதலடையச் செய்ய தேவன் மனிதரைப் பயன்படுத்துகிறாரென்பது உண்மைதான். ஆனால் எந்தப் பிரசங்கியும் எழுப்புதலைக் "கொண்டுவர" முடியாது. பிரசங்கியார் கொண்டுவரும் எழுப்புதல் அவரோடு திரும்பிப் போய்விடும்! "வேல்ஸ் நாட்டு எழுப்புதலின் காரணர் இவான் ராபர்ட்ஸ் அல்ல, ஆவியானவரே" என்று அவ்வெழுப்புதல் சரிதையை எழுதிய பண்டிதர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட் முதல் வரியிலேயே குறிப்பிடுகிறார். வெறும் மாமிச உற்சாகம் ஈசாக்கையல்ல, இஸ்மவேலையே பிறப்பிக்கும். மட்டுமல்ல,

பரத்திலிருந்து வருவது பொதுவாக திடீரென்று இருக்கும்! "பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று" (அப் 2:2). எழுப்புதல் வரும்போது நமது நிகழ்ச்சி நிரலெல்லாம் ஆவியானவரால் மாற்றப்படும். திடீரென அவர் புகுந்து அசைவாடுவார். இன்னும் அப் போஸ்தலன் பேதுரு தனது பிரசங்கத்தை முடிக்கவில்லை; அவன் "பேசிக் கொண்டிருக்கையிலேயே" மக்கள் மீது ஆவியானவர் இறங்கினார்! (அப் 10:44). எழுப்புதலில் ஆவியானவர் மாரியாய் இறங்குகிறார். பெந்தெ கொஸ்தேயன்று கடைசிக்கால அருள்மாறி துவங்கிற்று. நாம் இன்று கடைசி நாட்களிலல்ல, கடைசி நிமிடங்களில் இருக்கிறோம்! எப்படியாவது இன்னொரு பெந்தெகொஸ்தே நமக்கு வேண்டும்! ஆவினாவர் "வர" அல்ல, "**ஊற்றப்பட!**"

2. எழுப்புதலானது தேவப்பிரசன்னத்தை வெளிப்படையாக்குகிறது.

"உம்முடைய **சந்நிதிக்குமுன்**... உமக்கு முன்பாக... உமது **சந்நி தியில்...**" (வச 1-3).

வேல்ஸ் நாட்டு எழுப்புதலைக் குறித்துக் கேள்விப்பட்ட ஒரு தம்பதியர் நெடுந்தூரம் பயணமாகி இவான் ராபர்ட்ஸ் அன்று மாலை பேசவிருக்கும் நகருக்கு வந்து சேர்ந்தனர். நகரின் நுழைவாயிலில் நின்ற காவலதி காரியிடம், "ஐயா, எழுப்புதல் எங்கே நடக்கிறது?" என்றனர். உடனே அவ்வதிகாரி, தான் நின்றுகொண்டிருந்த இடத்தையே சுட்டிக்காட்டி, "இங்கேதான்!" என்றார். அவரது நாமத்தில் கூடும்போதெல்லாம் கர்த்தர் நம் நடுவிலுண்டு என்பது உண்மைதான். ஆனால் எழுப்புதல் காலங்களில் ஆவியானவர் தேவப் பிரசன்னத்தை இன்னும் வெளிப்படையாக்குகிறார். பெந்தெகொஸ்தேயன்று 120 சீடர் மீதிறங்கிய அக்கினி நாவுகள் இதற்கோர் எடுத்துக்காட்டு. "நீங்கள் காண்கிறதும் கேட்கிறதுமாகிய இது" என்று பேதுரு குறிப்பிட்டான் (அப் 2:33). கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்பியதால் நின்று ஊழியம் செய்யக்கூடாமற்போன 120 ஆசாரியரை இங்கு நான் நினைக்கிறேன் (2 நாளா 5:12-14). எழுப்புதலின்போது தேவமகிமை திரும்பிவருகிறது! சிலவேளை வெளிப்படையான அடை யாளங்களும் தோன்றும். "நாங்கள் எதிர்பார்த்திராத பயங்கரமான காரியங்களை நீர் செய்தபோது, நீர் இறங்கினீர், உமது சந்நிதியில் பர்வதங்கள் உருகிப்போயின" (வச 3). "அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது" (அப் 4:31). இன்றோ நாம் கூடி வரும் இடங்கள் அபகரிக்கப்படுகின்றன! நமக்கு எழுப்புதல் தேவை. அசைவே இல்லாத நமது ஆராதனைகளைப் பார்க்கும்போது இது சபையா அல்லது சவக்கிடங்கா எனக் கேட்கத் தோன்றுகிறது.

3. தற்பரிசோதனையையும் பாவ அறிக்கையையும் தொடர்ந்தே பொதுவாக எழுப்புதல் வரும்.

"மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும் சந்திக்கிறீர்; நாங்களோ, அவைகளுக்கு விரோதமாக எப்பொழுதும் பாவஞ்செய்தபடியால், தேவரீர் கடுங்கோபங்கொண்டீர்... நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல் இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல் இருக்கிறது... கர்த்தாவே, அதிகமாய்க் கடுங்கோபங்கொள்ளாமலும், என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக்கொள்ளாமலும் இருப்பீராக; இதோ, பாரும், நாங்கள் அனைவரும் உம்முடைய ஜனங்களே!" (வச 5,6,9).

"என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி... தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால்..." என்பதே பிரபலமான எழுப்புதல் வசனமாகிய 2 நாளா 7:14இலுள்ள நிபந்தனையாகும். எழுப்புதலை தேவனிடம் கெஞ்சி நிற்கும் எஸ்றாவைக் கவனியுங்கள்: "என் வஸ்திரத்தையும் என் சால்வை யையும் நான் கிழித்து, என் தலையிலும் என் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கி திகைத்தவனாய் உட்கார்ந்திருந்தேன்... எங்கள் தேவன் எங்கள் கண்களைப் பிரகாசிப்பித்து, எங்கள் அடிமைத்தனத்திலே எங்களுக்குக் கொஞ்சம் உயிர் கொடுக்கவும்... இப்படி விண்ணப்பம்பண்ணி, அறிக்கை யிட்டு அழுது..." (எஸ்றா 9:3; 10:1). இந்நூற்றாண்டின் துவக்க எழுப்பு தலுக்குமுன், "தேவனே, சபையைச் செம்மையாக்கி, சமுதாயத்தைச் சேமப்படுத்தும்!" என்று இவான் ராபர்ட்ஸ் ஜெபித்தார். தீர்க்கன் யோவேல் மூலம் வாக்கருளப்பட்ட எழுப்புதலுக்கு நிபந்தனை— "உபவாசம், அழுகை, புலம்பல், கிழித்தல், திரும்புதல்" இவைதான்! (யோவேல் 2:12-14,23). அப்பொழுது தேவன் "முன்மாரியையும் பின்மாரியையும்" பொழிவார். நொறுங்கிய இதயங்களையே தேவன் உயிர்ப்பிக்கிறார் (ஏசா 57:15). 1949இல் நியூ ஹெப்ரைட்ஸ் தீவுகளில் உருவான எழுப்புதலில் சிறந்ததோர் படிப்பினை உண்டு. "எருசலேமைப் பூமியெங்கும் புகழ்ச்சியாக்கும்வரை உம்மை அமர்ந்திருக்க விடோம்" என உறுதிபூண்டு ஜெபிக்க சிலர் கூடினர். மாதங்கள், ஆண்டுகள் கடந்தன. ஒன்றும் நடக்கவில்லை. ஒரு நாள் வாலிபனொருவன் சங் 24:3-5ஐச் சுட்டிக்காட்டி யாவரையும் பாவ அறிக்கைக்கும் சுத்திகரிப்புக்கும் வழிநடத்தினான். அதோ, எழுப்புதல் வந்தது! ஆயிரங்கள் கிறிஸ்துவிடம் வந்தனர். இது அத்தீவுகள் காணா சரித்திரமாயிற்று. "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் (உயிரூட்டும்) காலங்கள் வரும்படிக்கு... மனந்திரும்பிக் குணப்படுங்கள்" என்று பின்வாங்கிய யூதரைப் பேதுரு கூவியழைத்தான் (அப் 3:19).

4. விடாப்பிடியான ஜெபத்தினால் எழுப்புதல் வருகிறது.

"தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகள்... உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக் கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை... கர்த்தாவே, இவைகள் இப்படியிருந்தும் அடக்கிக்கொண்டிருப்பீரோ ?" (வச 4,7,12).

சொல்லப்போனால் இந்த அத்தியாயம் முழுவதுமே ஒரு ஜெபம்தான். பெந்தெகொஸ்தேக்கு சீடர்களின் ஆயத்தம் பத்துநாள் ஜெபமும் துதியும்தான் (லூக் 24:52,53; அப் 1:14; 2:1). பெந்தெகொஸ்தேக்குப்பின், மறுபடியும் அவர்கள் ஜெபித்தபோது ஆவியால் மறுபடியும் நிரப்பப்பட்டார்கள் (அப் 4:31). கொர்நேலியு இன்னொரு எடுத்துக்காட்டு. அவன் எப்பொழுதும் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தவன். ஒருமுறை உபவாச ஜெபத்திலிருக்கையில் தூதன் அவனைச் சந்தித்தான். தூதன் சொன்ன முதல் செய்தி— "உன் ஜெபம் கேட்கப்பட்டது!" அவனும் அவன் இனத்தாரும் நெருங்கிய நண்பரும் எழுப்புதலைப் பெற்றானந்தித்தனர் (அப் 10:2,4,24,30,31). நாம் ஜெபிக்கிறோம்; ஆனால் எலியாவைப்போல் "மறுபடியும்" ஜெபிப்பதில்லை (யாக் 5:17,18). நாம் எதுவரை ஜெபிக்கவேண்டும் தெரியுமா ? "கர்த்தர் வந்து நீதியைப் பொழியுமட்டும்!" (ஓசி 10:12). நிலைமை மோசமாகிக்கொண்டுதான் போகிறதென்று ஜெபத்தில் தளரவேண்டாம். தேவன் இன்னும் நம்மைக் கைவிட்டுவிடவில்லை. அவரது மக்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. பிரியமானவர்களே, சாதக சிந்தையுடனிருப்போம். எழுப்புதலின் முதல் இரகசியம் ஜெபம், இரண்டாம் இரகசியம் ஜெபம், மூன்றாவதும் ஜெபம்தான்!

5. எழுப்புதல் வரும்போது தேவ மக்களிடம் ஆரவாரமும் ஆராதனையும் பெருகும்.

"உமது பரிசுத்த பட்டணங்கள் வனாந்தரமாயின; சீயோன் வனாந்தரமாயிற்று; எருசலேம் பாழாய்கிடக்கிறது. எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த பரிசுத்தமும் மகிமையுமான எங்கள் ஆலயம் அக்கினிக்கு இரையாகி, இன்பமான எங்கள் ஸ்தலங்களெல்லாம் பாழாயின" (வச 10,11).

தாவீது ஆரவாரமாய் ஆராதிப்பவன். "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள்" என்று யாராவது சொல்லிவிட்டால் துள்ளிக் குதிப்பான்! (சங் 122:1). மக்கள் பின்வாங்கியபோதோ மகிமை விலகியது. ஆலயத்தைவிட்டு மகிழ்ச்சி அறுந்துபோயிற்று. எனவே அவன் கதறினான்: "உமது மக்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப

உயிர்ப்பிக்கமாட்டீரோ?'' (சங் 85:6). தம் மக்களோடு தேவன் இடைப்பட்ட விதத்தைக் குறித்துத் தீர்க்கன் ஆபகூக்குக்கு ஏராளம் கேள்விகள். முடிவாய், "கர்த்தாவே, ஆண்டுகளின் நடுவிலே உமது செயலை உயிர்ப்பியும்'' என்று ஜெபித்தான். புத்தகத்தின் முடிவுக்குள் வரும்போது துதியின் ஆவி அவனைப் பற்றிக்கொண்டது. மரத்தில் பழமோ, மந்தையில் பெருக்கமோ இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒன்றுதான் என்று கம்பீரித்தான்! (ஆப 3:2,17,18). ஆதிக்கிறிஸ்தவரை ஆவியானவர் நிரப் பியபோது அவர்கள் நவநாவுகளில் தேவனைப் புகழ்ந்தனர் (அப் 2:4,11). தேவ சமூகத்தின் "நிறைவான சந்தோஷத்தால்'' தாவீதைப்போல அவர்கள் இருதயம் "மகிழ்ந்தது,'' நாவு "களிகூர்ந்தது!'' (அப் 2:25-28). சமுதாயத்தில் அவர்கள் அல்லேலூயா கும்பலாயினர்! (2:47). சிறைச்சாலையிலும் எழுப்புதல்! (16:25). கைத்தாளத்திற்கு இரும்புச் சங்கிலிகள் போதும்! "புலம்பலை ஆனந்தக் களிப்பாய்'' மாற்றுவது எழுப்புதலே (சங் 30:11). முதலாவது அழவேண்டிய, புலம்பவேண்டிய காலம் — இதுதான் எழுப்பு தலுக்கான ஆயத்தம். அடுத்தது நகைக்க வேண்டிய, நடனமாட வேண்டிய காலம் — இதுதான் எழுப்புதலின் விளைவு! (பிர 3:4). நமது சில ஆராதனை களைப் பார்த்தால் நாம் உயிருள்ள தேவனைத்தான் ஆராதிக்கிறோமா எனக் கேட்கத் தோன்றுகிறது. ஆங்கிலிக்கன் சபையினர் ஒருவர் இன் னொரு கிறிஸ்தவரை முதல்முறையாகத் தனது ஆலய ஆராதனைக்கு அழைத்துச் சென்றார். ஆராதனை முடிந்ததும் எப்படியிருந்தது என்று கேட்டார். "கிறிஸ்துவுக்காக யாவையும் சகித்தேன்'' என்று பதில் வந்தது!

6. எழுப்புதல் வரும்போது நற்செய்திப்பணி வெடித்துக் கிளம்பும்.

"ஆ, உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்குமுன் தத்தளிப்பதற்கும், தேவரீர் வானங் களைக் கிழித்திறங்கி...'' (வச 1,2).

நற்செய்திப் பணியைத் தொடர்ந்து எழுப்புதல் வரலாம், வராமல் போக லாம்; ஆனால் உண்மையான எழுப்புதலைத் தொடர்ந்து எப்பொழுதும் நற்செய்திப் பணி இருக்கும். நற்செய்திப்பணியில் பிரசங்கியார் அழைப்பு கொடுப்பார்; எழுப்புதலின்போதோ மக்கள் கூப்பிட்டுக் கேட்பார்! "**நாங்கள் என்ன செய்யவேண்டும்?**'' (அப் 2:37). பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து பல்லாயிரங்கள் கர்த்தரிடம் திரும்பினர். மூவாயிரம், ஐயாயிரம்! ஆயிரங்கள் ஒரே நாளில் ஞானஸ்நானம் பெறுவதைப் பார்த்திருக்கிறோமா? பல சபைகளில் ஒரு முழு வருடத்திற்கு நமக்குக் கிடைப்பதெல்லாம் பத்து பன்னிரண்டு ஆத்துமாக்கள்தான். அடுத்த கன்வென்ஷனில் ஞானஸ்நானம் கொடுக்க இவர்களைப் பத்திரமாக வைத்துக்கொள்வோம்! ஆதிச் சபையைப்போல் அவ்வப்போது இரவாயிருந்தாலும் பரவாயில்லையென்று,

ஆத்துமாக்களுக்கு நாம் ஞானஸ்நானம் கொடுத்துவிட்டால் கன்வென் ஷனுக்குப் பணம் கொடுத்தவர் முன்பாகக் காட்டுவதற்கு ஒன்றும் இருக் காதே! நமக்கு எழுப்புதல் தேவை! பாவிகளைத் துரத்திப்பிடிக்கப் பரிசுத்த வான்களைத் துரத்திவிடும் எழுப்புதல்! (சங் 51:12,13). உலர்ந்த எலும்புகள் திடீரென உயிர்பெற்று எழும்பும்! (எசே 37:1-10). நடபடிகள் புத்தகத்தில் ஒவ்வொரு விசுவாசியும், ஒவ்வொரு இடத்திற்கும், ஒவ்வொருவரையும் ஆதாயப்படுத்தச் சென்றனர் என்று வாசிக்கிறோம். ஆதிச் சீடருக்குப் பட்டப்பெயர் என்ன தெரியுமா? "உலகத்தைத் தலைகீழாய் மாற்றுகிற வர்கள்!" நாமோ "உலகத்தை மேற்கும் கிழக்குமாய் சுற்றுகிறவர்கள்!" எழுப்புதலில்தான் மிஷனரி இயக்கங்கள் பிறக்கும் (அப் 13:2-4). சபைச் சரித்திரம் இதைத்தான் சொல்லுகிறது. எழுப்புதல் வீரன் ஜான் வெஸ்லியின் கோஷம்— "உலகமே எனது சபை!" சாதாரண சுவிசேஷ ஊழியத்தில் 40 ஆண்டுகளில் சாதிப்பதை எழுப்புதல் சூழலில் 40 நாட்களில் முடித்து விடலாம்! எழுப்புதலானது நரகத்தைச் சூறையாடிப் பரலோகத்தை நிரப்பிவிடும்!

7. எழுப்புதலானது சபையை முதிர்ச்சிக்கும் முழு அர்ப்பணிப்புக்கும் நடத்திச் செல்லும்.

"இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் **களிமண்.** நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் செயல்" (வச 8).

பரத்திலிருந்து எழுப்புதல் வரும்போது தேவமக்கள் பிதாவுக்குக் கீழ்படிதலுள்ள பிள்ளைகளாகவும், குயவன் கையில் அடங்கியிருப்போராக வும் மாறுவர். தேவனை நேசிப்பதே அவர்களுக்குப் பிரதானமாகிறது. உலகக் காரியங்களில் பற்று அற்றுப்போகிறது. யாரும் கேட்காமல், கட்டளையிடாமல் ஆதி விசுவாசிகள் தங்களுடையவைகளை விற்று அப்போஸ்தலர் பாதம் சமர்ப்பித்தனர் (அப் 2:44,45; 4:32-35). மனிதரைப் பிரியப்படுத்தி அலைந் தோர் தேவனை மட்டுமே பிரியப்படுத்தத் துணிந்தனர் (5:29). எழுப்புதல் வரும்போது வசன வாஞ்சை பெருகும். மணிக்கணக்காக தொலைக்காட்சிப் பெட்டிமுன் உட்கார்ந்திருந்தோருக்கு வேதமே இரவும் பகலும் பிரியமான தியானமாகும். உலகத்தாரோடு களித்துண்ணுவதைவிட தேவ மக்களோடு ஐக்கியம் கொள்வதே பிரியமாகிவிடும். வாழ்க்கைமுறை எளிமையாகி கர்த்தருக்குக் கொடுப்பது பெருகும். இப்படி ஏராளம் சொல்லிக்கொண்டே போகலாம்!

"தேவா, எழுப்புதலை அனுப்பித்தாரும் — **இப்பொழுதே!"**

4

தேவனைத் தொழுவதென்றால் என்ன?

பூவுலகப் பணிகளிலெல்லாம் தொழுகையே மிகப் புனிதமானது. அதற்கும் மேலானது வேறில்லை. "துதித்தலே... நல்லதும்... இன்பமும்... ஏற்றதுமாயிருக்கிறது" (சங் 147:1).

தொழுகையென்றால் தேவன் நம்மை ஏன் உண்டாக்கினாரென்று உணர்வதாம். "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்" (ஏசா 43:21). ஏன் தெரிந்தெடுத்தாரெனத் தெரிந்துகொள்ளுவதும் அதில்தான். அவரது "புண்ணியங்களை (துதிகளை) அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி" (1 பேது 2:9).

பத்துக் கட்டளைகளில் முதல் இரண்டும் தொழுகையைப் பற்றியவையே (யாத் 20:1-6). வேதத்தின் இறுதியான நேரடிக் கட்டளையும் அதுதான். "தேவனைத் தொழுதுகொள்" (வெளி 22:9).

துதியே தகுதி!

தேவனைத் துதிப்பதென்றால் அவரது தகுதியைப் போற்றுவதாம். அது அவரது அருங்குணங்களைப் பாராட்டி, அவரது அருஞ்செயல்களில்

பரவசமடைவதாம். Worship எனும் ஆங்கிலச் சொல் முன்பு Worthship என்றிருந்திருக்கிறது.

தேவனது பரிசுத்தத்தால் மனச்சாட்சி உயிரடைவதும், அவரது சத்தியத்தால் சிந்தை ஊட்டப்படுவதும், அவரது அலங்காரத்தால் கற்பனை தூய்மையடைவதும், அவரது அன்புக்கு இதயம் திறக்கப்படுவதும், அவரது திட்டத்திற்குச் சித்தம் அடிபணிவதுமே தொழுகை என்று பக்தன் ஒருவர் விமர்சித்தார். இவ்விதம் தொழுகையில் வெளிப்பாட்டுடன் துதிப்பாட்டு இணைகிறது.

தொழுகையில் தேவனை அவர் இருக்க வேண்டிய இடத்துக்கு உயர்த்துகிறோம். "துதிக்குப் பாத்திரராகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன்" (2 சாமு 22:4). "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரர்" (வெளி 4:11).

தேவனது தகுதியின் உணர்வு எப்பொழுதும் நமது தகுதியின்மையின் உணர்வுக்கு வழிநடத்துகிறது. இதோ இரு எடுத்துக்காட்டுகள் — தாவீது: "கர்த்தாவே, உமது நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது!... மனிதனை நீர் நினைக்கிறதற்கு அவன் எம்மாத்திரம்?" (சங் 8:14). ஏசாயா: "ஆண்டவர் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கக் கண்டேன்... சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்... ஐயோ! அதமானேன்" (ஏசா 6:1-5).

தொழுகையும் ஜெபமும்

தேவனிடமிருந்து வாங்க ஜெபிக்கிறோம்; அவருக்கு கொடுக்க துதிக்கிறோம். "வாங்குவதைவிட கொடுப்பதே பாக்கியம்!" தேவன் நமது ஜெபத்திற்குப் பதிலளிக்கையில் நாம் மகிழ்வடைகிறோம்; அவர் நமது துதியில் பரவசப்படுகையில் மகிமையடைகிறார் (சங் 50:23).

ஜெபிக்கையில் மனிதர் போலவும், துதிக்கையில் தூதர் போலவும் செயல்படுகிறோமாம்! ஜெபம் நம்மைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிறது, துதியோ பரலோகத்தை நமக்குக் கொண்டுவருகிறது. பரலோகில் தேவை என்று எதுவுமே இராதாகையால் அங்கு ஜெபம் தேவையிராது. துதியோ எந்நாளும் இருக்கும். பரலோக மொழியே துதிதான்; இப்போதே அதைப் படித்துக்கொள்ளுவோம்!

ஜெபிக்கையில் நமது கரிசனையெல்லாம் நமது "தேவை" மீதிருக்கிறது; துதிக்கையில் நமது கவனமெல்லாம் நமது "தேவன்" மீதிருக்கிறது. "அவரே

உன் புகழ்ச்சி'' (உபா 10:21). ''கர்த்தராகிய யேகோவா என் கீதமானவர்'' (ஏசா 12:2). தொழுகையானது நன்றிசொல்லுவதையும் மிஞ்சுகிறது. தொழுகையில் தேவனது அருங்குணத்தைப் பாடுகிறோம்; நன்றி செலுத்துகையில் அவரது அருங்கொடையைப் பாராட்டுகிறோம்.

இனி சுகமல்ல, சுகமளிக்கிறவரே. இரட்சிப்பல்ல, இரட்சகரே. விடுதலையல்ல, விடுவிக்கிறவரே. ஆசீர்வாதமல்ல, ஆசீர்வதிக்கிறவரே. தேவையும் கேட்டதும் கிடைத்ததோ இல்லையோ அதைக்குறித்து தொழுகைக்கு கவலையில்லை. ''அத்தி மரம் துளிர்விடாமல்போனாலும்... என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்'' (ஆப 3:17,18).

தொழுகையில் பக்தன் யோபு கைதேர்ந்தவன். நிறைவோ குறைவோ அது அவனை மாற்றாது. எல்லாம் இழந்தபோதும் ''தரையில் விழுந்து பணிந்து... கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்'' என்றான் (யோபு 1:20,21).

தாவீது தினமும் மூன்று முறை ஜெபித்தான் (சங் 55:17). ஆனால் ஏழு முறை துதித்தான்! (119:164).

ஜெபத்திற்கு ஆயத்தமே துதிதான். ''அவர் வாசல்களில் துதியோடு நுழையுங்கள்'' (சங் 100:4). ''உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்'' (ஏசா 60:18). துதி ஜெபத்தைத் தூக்குகிறது. தேவன் நமது துதிகளில் வாசம்பண்ணுகிறார் (சங் 22:3).

ஜெபத்தைத் துதியால் நிரப்பவேண்டும். கர்த்தருடைய ஜெபம் துதியில் துவங்கி துதியில் முடிகிறது (மத் 6:9,13). ஆதிச்சபை இந்த இரகசியத்தை அறிந்திருந்தது. படைத்தவராக தேவனைப் புகழ்ந்து ஜெபிக்கத் துவங்கினர் (அப் 4:24). ஜெபமானது துதியில் ஊறியிருக்கவேண்டுமெனப் போதிக்கப் பட்டிருக்கிறோம் (பிலி 4:6; கொலோ 4:2).

வசனமும் தொழுகையும்

வேத ஆராய்ச்சி யாவும் தேவ ஆராதனைக்கு வழிநடத்த வேண்டும். வெறும் அறிவு இறுமாப்பை உண்டாக்கும் (1 கொரி 8:1). தலை வீங்கும், இதயம் சுருங்கும். இவ்வளவு வேத அறிவு இருந்தும் இக்காலத்தின் சோக நிலை இதுதான்.

வேதப்புத்தகத்தை எஸ்றா திறந்தவுடன் யாவரும் கண்ணியமாய் எழுந்தனர். ''மக்களெல்லாரும் குனிந்து, முகங்குப்புற விழுந்து, கர்த்தரைப்

பணிந்து கொண்டார்கள்" (நெகே 8:5,6). நாளின் கால் பங்கு நேரத்தை வசனம் வாசிப்பதில் செலவிட்டனர். அது அவர்களை அடுத்த கால் பங்கு நேரம் தொழுகைக்கு வழிநடத்திற்று (நெகே 9:3).

வறட்டு இறையியல் அறிவுக்குக் காரணமே தொழுகையில்லா ஆராய்ச்சிதான். பவுலைவிட மேலான இறையியல் நிபுணர் யார்? உபதேச நிருபம் ஒன்றை எழுதும்போதுகூடக் குதித்துத் துதித்தான் (ரோ 9:5; 11:33-36; 16:27). அப்படியே தாவீதின் தியானமெல்லாம் அவனைத் தொழுகைக்குத் துரத்திற்று. "நான் பணிந்து... உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பேர்ப்புகழைவிட உமது வார்த்தையை மகிமைப்படுத்தியிருக்கிறீர்" (சங் 138:2).

கிறிஸ்துவே வேதத்தின் மையம். ஆதியாகமத்தில் அவர் பெண்ணின் வித்து. யாத்திராகமத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி. லேவியராகமத்தில் ஆசாரியன். எண்ணாகமத்தில் பிள்க்கப்பட்ட கன்மலை. இப்படி. தீர்க்க தரிசனப் புத்தகங்களில் அவர் சமாதானப் பிரபு. மத்தேயுவில் இராஜா. மாற்குவில் ஊழியன். லூக்காவில் மனுமகன். யோவானில் இறைமகன். நடபடிகளில் அறுவடையின் ஆண்டவர். நிருபங்களில் சபையின் ஆண்டவர். வெளிப்படுத்துதலில் நாடுகளின் ஆண்டவர். இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா! புனித நூலின் பக்கம்தோறும் தொழுகைக்கு நிறைய கருத்துக் களுண்டு. எனவேதான் பக்தர் பலர் முழங்காலிலேயே வேதத்தைத் தியானித்தனர்.

வேதத்தின் மையக்கருத்து மீட்பாகும். தேவனது மீட்பின் நாமங்கள் ஏழும் தொழுகைக்கு வானவில்லின் ஏழு நிறங்கள் போல்! யேகோவா-யீரே (ஆதி 22:14). யேகோவா-ரப்பா (யாத் 15:26). யேகோவா-நிசி (யாத் 17:15). யேகோவா-ஷாலோம் (நியா 6:24). யேகோவா-ரோஹி (சங் 23:1). யேகோவா-சிட்கெனு (எரே 23:6). யேகோவா-ஷம்மா (எசேக் 48:35).

தொழுகையே தொழில்!

தொழிலே தொழுகை என்பது உலகின் தத்துவம். ஆனால் தொழுகையே நமது பிரதான தொழில் என வேதம் போதிக்கிறது இயேசுவுக்காகத்தானே மார்த்தாள் சமைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் இயேசு சொன்னதென்ன? "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப் பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னைவிட்டெ டுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்" (லூக் 10:38-42). ஆம், தொழுகையைத் தவிர நித்தியமானது ஒன்றுமில்லை.

இந்தியாவில் ஆயுத பூஜை கொண்டாடுகிறார்கள். கருவிகளையும் இயந்திரங்களையும் அந்நாளில் கும்பிடுவார்கள். "அவன் தன் வலைக்குப் பலியிட்டுத் தன் பறிக்குத் தூபங்காட்டுகிறான்" (ஆப 1:16). கிறிஸ்தோ ராகிய நாம் தொழிலைத் தொழுகைக்குப் பதிலாக்குவோமானால் அதே பாவத்தைச் செய்வோராவோம்.

தேவன் முதலாவது தேடுவது ஆராதிப்போரையே. அடுத்துதான் அறுவடையாட்கள் (யோ 4:23,35). "கர்த்தருக்காக" ஊழியம் செய்யுமுன் "கர்த்தருக்கு" ஆராதனை செய்யவேண்டும். கர்த்தருக்கு ஆராதனை செய்து கொண்டிருக்கும்போதுதான் முதல் மிஷனரி அழைப்பு வந்தது (அப் 13:2). ஆராதிக்கையில் "அவர்முன்" அவர் புகழ் பாடுகிறோம்; அறுவடைப்பணியில் "மக்கள்முன்" அவர் புகழ் பறைசாற்றுகிறோம். ஒன்றைத் தொடர்ந்து, இந்த வரிசையில், அடுத்தது வருகிறது. தொழு வோரே சிறந்த ஊழியராகுவர். ஏனெனில், "முழங்கால் யாவும் அவர்முன் முடங்குவதே" நற்செய்திப்பணியின் முடிவாகும் (பிலி 2:10,11).

தொழுகையும் போராட்டமும்

மோவாபியருக்கும் அம்மோனியருக்கும் எதிரான யுத்தத்திற்கு யோச பாத்தின் ஆயத்தமே தொழுகைதான் (2 நாளா 20:18). படையினருக்கு முன்னர் பாடுவோரை நிறுத்தினான்! (வச 21,22). தடைகளெனும் எரிகோ மதில்களைத் தகர்க்கக் கர்த்தரின் முறை துதியே (யோசு 6:15,16,20).

சோர்பு, தளர்வு எனும் சங்கிலிகளால் சத்துரு நம்மை விலங்கிடும் போது "தேவனைத் துதித்துப் பாடுவோம்!" சத்துருவின் அடித்தளமே அசையும், சங்கிலிகள் சங்காரமாகும்! (அப் 16:25,26). துதியின் உடையைத் தரித்ததும் ஒடுங்கிய ஆவி பறக்கும் (ஏசா 61:3). துதியெழும்பும்போது "நமது சத்துருக்களுக்குமுன்" நமது தலைகள் மீது தைலம் ஊற்றப்படும் (சங் 23:5).

நாம் தேவனது "குழந்தைகள், பாலகர்." "பகைஞனையும் பழிகார னையும் அடக்கிப்போட" தேவன் நமது வாயினால் துதி உண்டுபண்ணு கிறார் (சங் 8:2).

உடற்பாவனைகள்

தொழுகையென மொழிபெயர்க்கப்பட்டுள்ள முக்கிய எபிரெயச் சொல்லுக்கு "குனிந்து பணிதல்" என்று பொருள். அவ்வித கிரேக்கச் சொல்லுக்கு "முகங்குப்புற விழுதல்" என்று பொருள்.

முழங்காலிடுதல், பணிந்து குனிதல், எழுந்து நிற்றல், கரங்களை அசைத்தல், முகங்குப்புற விழுதல், இதுபோன்ற பல பாவனைகளை வேதம் குறிப்பிடுகிறது (95:6; எபே 3:14; பிலி 2:10; வெளி 7:9; 13:4; வெளி 11:16). இவை யாவும் எல்லாக் கலாச்சாரத்திற்கும் உரியவை. உள்ளான பணிவுக்கு இவையெல்லாம் வெளியான அடையாளங்களாகும்.

இஸ்ரவேலரின் தொன்றுதொட்ட ஆசரிப்புகளில் நடனம் முக்கியமான தொரு இடம் பெற்றிருந்தது. மிரியாமும் எல்லாப் பெண்களும் தம்புருகளோடு நடனமாடினர் (யாத் 15:20). தாவீது தன் முழுபலத்தோடும் கர்த்தருக்குமுன் நடனமாடினான் (2 சாமு 6:14,16). பிறர் என்ன நினைப்பார்களென்பது அவனுக்குக் கவலையில்லை. தேவனுக்குமுன் இழக்க ஏதும் அந்தஸ்து உண்டோ? (வச 21,22). மக்கள் நினைப்பதெதுவோவென நினைப்பதே தொழுகையின் ஆவியைக் கொல்லும்.

பாடுவதைப் போலவே ஆடுவதும் பயிற்சியினாலும் வரலாம், தானாகவும் வரலாம். கர்த்தரிடமிருந்தே கலை வருகிறது. அவர் தரும் வரம் கலைத் திறனை வெளிப்படுத்த உதவுகிறது (யாத் 31:3-5).

இசையும் பாடலும்

ஆரோனின் அங்கியின் கீழோரங்களில் தொங்கிய பொன்மணிகளே ஆராதனையில் இசை என்பதற்கு முதற்குறிப்பாயிருக்கலாம் (யாத் 28:33-35). *ஜிங்கிள் பெல்ஸ்!*

1000 பேர் பாடகர் குழு என்று பேசுகிறோம். தாவீதோ 4000 பேர் பாடகர் குழுவை வைத்திருந்தான். ஒவ்வொருவர் கையிலும் ஒரு வாத்தியமும்! (1 நாளா 23:5). மூச்சு நின்றுவிடும் போலிருக்கிறது! எலக்ட்ரானிக் வாத்தியங்கள் நிறைந்துள்ள இன்றும் நாம் தாவீதைவிடப் பல்லாயிரமாண்டுகள் பின்தங்கித்தானிருக்கிறோம்!

அர்ப்பணித்தோர் இசைத்தால் தேவன் இசையை அபிஷேகிப்பார். சவுலிடமிருந்த பொல்லாத ஆவியைத் தாவீதின் இசை துரத்திற்று (1 சாமு 16:23). இசை தேவனுடையது. சாத்தானோ அதைக் கறைப்படுத்தி வியாபாரமாக்கிவிட்டான்.

மனந்திரும்பாத இசைக்குழுவினரையும் பாடகரையும் நமது கூட்டங்களில் பார்த்துப் பிசாசு பரவசமடைகிறான். தேவனோ இருதயத்தைத் தூரமாக்கிய உதடுகளின் துதியை உதறித் தள்ளுகிறார் (மத் 15:7-9).

அபிஷேகத்துடன் பாடுவது பாவிகளைச் சிலுவைநோக்கி இழுக்கும். தாவீதுக்கோர் ஆசாப் இருந்தான் (1 நாளா 16:5). மூடிப் பிரசங்கியாருக்கு சாங்கி எனும் பாடகர் இருந்தார். ஜான் வெஸ்லிக்கு சார்லஸ் வெஸ்லி இருந்தார். பில்லி கிரஹாமுக்கு பெவர்லி ஷா எனும் பழம் பாடகர் இருக்கிறார். திறமையல்ல, தன்மையே முக்கியம்.

சங்கீதப் புத்தகமே ஒரு பாடல் புத்தகம்தான். அதில் ஆமென், அல்லேலூயாக்கள் நிறைந்துள்ளன. நாமும் "ஆமென்-அல்லேலூயா கிறிஸ்தவர்" எனப் பெயர் பெறுவோம்! பரலோக மொழியே அதுதான் (வெளி 19:4). பழமையாகாத புதுப்பாடலும் அதுவே (சங் 33:3; 40:3).

சப்தமா, நிசப்தமா ?

"கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்!" (100:1; 98:4). கர்த்தர் "ஆரவாரத்தோடும்... சத்தத்தோடும்" இறங்கிவருகிறார் (1 தெச 4:16). பரலோகம் சத்தம் நிறைந்த இடமாம்! (வெளி 5:12). இப்பொழுதே அதற்குப் பழகிக்கொள்வது நல்லது! அமைதி அங்கு அபூர்வம் (வெளி 8:1).

வானத்திலிருந்து உண்டான சத்தம், பூமியிலிருந்து உருவான சத்தம், இவையிரண்டுக்கும் நடுவில்தான் சபை பிறந்தது (அப் 2:2,6). சபையானது துதியின் சத்தத்தால் அறியப்படவேண்டும். "நீதிமான்களின் கூடாரங் களில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டு" (118:15). இல்லாவிடில் அது கல்லறைத் தோட்டம் போலல்லவா இருக்கும்! ஏனெனில், "பாதாளம் தேவனைத் துதியாது, மரணம் அவரைப் போற்றாது" (ஏசா 38:18).

சீடர்களின் துதியின் ஆரவாரத்தைப் பரிசேயர் தடுத்து நிறுத்த முயன்றனர். அவர்கள் அமர்ந்தால் "உடனே" கல்லுகள் கூப்பிடும் என்றார் இயேசு! (லூக் 19:37-40). ஒருவருக்கொருவர் சண்டையிட்டு சத்தத்தை உயர்த்துவதைக் குறித்துக் கவலைப்படாது, ஆனால் தேவ மக்கள் துதிக்கத் துவங்கிவிட்டால் சீறியெழும் பரிசேயர் இன்றும் இல்லாமலில்லை. இயேசுவோ வாக்குவாதம் பண்ண சத்தத்தை உயர்த்தமாட்டார்! (ஏசா 42:2).

இப்படிச் சொல்வதால், அமைதியாய் ஆராதிக்கவே முடியாது என்று பொருளல்ல. அமைதியிலும் அலங்காரமாய் ஆராதிக்கலாம். "கர்த்தருக்கு முன் மவுனமாயிருங்கள்" (சக 2:13). "அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்... பூமியிலே உயர்ந்திருப்பேன்" (சங் 46:10).

உதவும் ஆவியானவர்

"பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது" (1 கொரி 12:3).

"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு... வெவ்வேறு பாஷைகளில்... தேவனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள் (அப் 2:4,11).

"வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மீதும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்" அங்கு வந்திருந்த விசுவாசிகள் கேட்டார்கள் (அப் 10:44,46).

"ஆவியினால் நிறைந்து... இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்" (எபே 5:18,19).

தேவன் சபையில் ஆவியின் நிறைவைப் பெற்ற ஊழியர்கள் மூலம் தொழுகையின் ஆவியைத் திரும்பக் கொண்டுவந்துகொண்டிருக்கிறார். சபை துலைத்த முத்து கண்டுபிடிக்கப்படுகிறது. தென்றல் வீசுகிறது. உலகெங்கும் விசுவாசிகள் நடுவில் துதியின் சத்தம் கேட்கத் துவங்கியுள்ளது. சும்மா வேடிக்கை பார்த்து நின்றுவிடாதீர்கள்.

1 கொரி 12இல் தரப்பட்ட ஆவியின் ஒன்பது வரங்களில் நவநாவுகள் மட்டுமே பிரதானமாக, துதிக்கவும் ஜெபிக்கவும், தேவனை நோக்கிச் செயல்படுவதாகும் (1 கொரி 14:2, 13-16). மற்ற எட்டு வரங்களும் பெரும்பாலும் மனிதனை நோக்கிச் செயல்படுபவை. இந்த மேல் நோக்கிய பரிமாணமே நவநாவுகளின் முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது.

வணங்க வேண்டாம்!

கட்டிடங்களை வணங்க வேண்டாம். தேவன் இன்று கூடத்தையல்ல, கூட்டத்தையே பரிசுத்தப்படுகிறார் (1 பேது 2:5). "எங்கே" ஆராதிப்பது எனச் சமாரியப்பெண் இயேசுவிடம் பேசிக்கொண்டிருக்கையில், அவரோ "எப்படி" ஆராதிப்பது எனப் பதில் தந்தார் (யோ 4:20-24). தேவன் தமது மகிமையை ஓரிடத்தில் வெளிப்படுத்தினால் அதற்காக அந்த இடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துவிடக்கூடாது (மாற் 9:5-8). மனிதன் கட்டியதிலல்ல, மனிதனிலேயே தேவன் வாசம்பண்ணுகிறாரென்று சபையின் முதல் இரத்தசாட்சியும், மிகப் பெரிய அப்போஸ்தலனும் அழுத்திச் சொன்னார்கள் (அப் 7:48; 17:24; 1 கொரி 3:16).

படங்கள், சிலைகள் அல்லது சிலுவையை வணங்கவேண்டாம். இது விக்கிரகாராதனை. சிலுவைக்கு முன்னடையாளமான வெண்கல சர்ப்பமே மக்களுக்குப் பிற்காலத்தில் கண்ணியாயிற்று. எசேக்கியா இராஜா அதை சுக்கு நூறாய் நொறுக்கினான் (2 இரா 18:4). படங்கள், உருவங்களெல்லாம் வேண்டாம் (அப் 17:29). தேவன் ஒருபோதும் ஒரு "ரூபத்தில்" காட்சியளிப்பதில்லை (உபா 4:15,16). "நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி அவரை மாம்சத்தின்படி அறியோம்" என்று இயேசுவை நேரடியாகப் பார்த்திருந்த அப்போஸ்தலரும் சொன்னார்கள் (2 கொரி 5:16). தேவன் ஆவியாயிருக்கிறார். நாம் அவரை ஆவியில் தொழுதுகொள்ள வேண்டும் (யோ 4:24).

தேவன் பயன்படுத்தும் மனிதரை வணங்க வேண்டாம். தேவன் தமது மகிமையை ஒருவரோடும் பகிர்ந்துகொள்ளமாட்டார் (அப் 10:25,26; 14:11-15).

தூதர்களை வணங்க வேண்டாம் (கொலோ 2:18). அவ்வளவு பரலோக வெளிப்பாடுகளுக்கும் பின்னும் யோவான் இப்பெருந்தவற்றை, அதுவும் இருமுறை செய்தான் (வெளி 19:10; 22:8,9). தரிசனங்களும், சொப்பனங்களும், வெளிப்பாடுகளும் நிறையப் பெறுவோர் இங்கு அதிகக் கவனமாயிருக்க வேண்டும்.

தங்கனுக்குத் தங்கம்

ஆதி 22:5இல்தான் "தொழுகை" எனும் பதம் முதலாவது வருகிறது. அவனது ஒரே குமாரனைப் பலியிட தேவன் ஆபிரகாமைப் பணித்தார். அவன் அப்படியே, உடனே, கீழ்ப்படிந்தான். தன் வேலைக்காரரிடம் "நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம் மட்டும் போய்த் தொழுதுகொண்டு திரும்பிவருவோம்" என்றான். தொழுகையென்றால் ஆபிரகாமுக்குத் தனது செல்லத் தங்கத்தை தேவனுக்குக் கொடுத்துவிடுவதாம்.

விலையுயர்ந்த அத்தைலத்தை அப்பெண் இயேசுவின் தலையில் ஊற்றுகையில் பார்த்தோரெல்லாம் விசனமடைந்து "இந்த வீண்செலவு என்னத்திற்கு?" என்றனர். அவளுக்கோ அதுதான் ஆராதனை! (மத் 26:6-13).

குழந்தை இயேசுவைத் தொழுதுகொள்ள வந்த ஞானிகள் விலையுயர்ந்தவற்றைக் காணிக்கையாகக் கொண்டுவந்தனர். பொன், வெள்ளைப்

போளம், தூபவர்க்கம்! ஏனெனில், அந்தக் குழந்தைதான் இராஜா என்ற றிந்திருந்தனர்! இவர்கள்தான் "ஞானிகள்" (மத் 2:1,2,11).

சொல்லப்போனால், தசமபாகம் செலுத்துவதைத் தொழுகையென்று கூறமுடியாது. அது நமது நன்றிக்கடன்தான். அள்ளி வீசுவதுதான் ஆராதனை. சேபா நாட்டு இராணி சாலொமோன் இராஜாவுக்குப் பொன் கொண்டுவந்தாள். சாலொமோனிலும் பெரியவரைப் பொன் கொடுத்துப் போற்றுவோமா?

5

எனக்காக ஜெபிப்பது எப்படி?

(ஒரு மாதிரி ஜெபம்)

''பரம பிதாவே,

''திறக்கிறவராக உம்மை ஆராதிக்கிறேன்! நீர் திறக்கும்பொழுது யார் மூடவோ தடுக்கவோ முடியும்? நீரே திறவுகோலை உடையவர். எல்லாம் உமது ஆதிக்கத்திலேயே உள்ளன. நீர் சொன்னால் வானங்கள் திறக்கும். உமது அற்புதத்தினால் கர்ப்பங்கள் திறக்கும். உமது வல்லமையினால் சிறைச்சாலைக் கதவுகள் திறக்கும். உமது அதிகாரத்தினால் முத்திரைகள் திறக்கப்படும். நீர் ஒருவரே பாத்திரர்.

''எனது கண்கள், உதடுகள், செவிகள், இதயம், கரங்களை நீர் திறக்கும்படி இதோ உம்மிடம் வருகிறேன். உமது திருக்குமாரனின் இரத்தத்தினால் அவைகளைக் கிரயமாய்க் கொண்டு உமக்குச் சொந்தமாக்கிக் கொண்டீரல்லவோ?

"ஆண்டவரே, என் கண்களைத் திறந்தருளும்!

''உமது தொடுதலின்றி நான் குருடனாயிருந்தேன் (2 கொரி 4:4). இன்னொருமுறை என் கண்களைத் தொடும் (மாற் 8:25). என் கண்களிலிருந்து விழவேண்டிய செதில்கள் இன்னும் எத்தனை எத்தனையோ? (அப் 9:18).

“உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் (சங் 119:18). எனக்குக் கரையின் கூழாங் கற்களல்ல, ஆழத்தின் முத்துக்கள் வேண்டும். கண்களுக்குத் தெரியாத மறைவான புதையல்களைக் கண்டெடுக்கக் கிருபையருளும் (நீதி 2:4). கண்களை ஏறிட்டுப் பார்த்து எதிர்காலத்திற்கான உமது தீர்க்கதரிசனங் களைப் புரிந்துகொள்ளும் தூர தரிசனத்தைத் தாரும். உமது ஞானத்தின் ஆழங்களை ஆராயும்படி நுண்ணோக்கிய தரிசனத்தைத் தாரும். உமது முழு ஆலோசனையையும் நான் பற்றிக்கொள்ளும்படியாக என் கண் களுக்கு விரிவாக்கக் கண்ணாடிகளைப் பொருத்தும்.

“ஆண்டவரே, என்னைச் சுற்றிலும் பாளையமிறங்கியிருக்கும் உமது தூதர் சேனையைக் காணும்படி என் கண்களைத் திறந்தருளும் (சங் 34:7). பன்முறை அன்றையத் தீர்க்கனின் வேலைக்காரனைப் போல உலகப் பொருட்களை நம்பிச் சார்ந்து உமது தெய்வீகப் பாதுகாவலுக்கும் எனக்குப் பணி செய்யும் உமது தூதரின் ஒத்தாசைக்கும் குருடனாகிறேன் (2 இரா 6:17; 5:26). உலகத்தையே பார்த்துப் பார்த்து உள்ளதையும் இழந்து போகாத படி என் கண்கள் மேலேயே நோக்கிக்கொண்டிருக்க அருள்புரியும். என் கண்களினின்று கன நித்திரையை நீக்கிவிடும்.

“உமது செல்வங்களை அறிந்துகொள்ளும்படி என் கண்களைத் திறந்தருளும். உமது மேன்மையான அழைப்பை நான் அறிந்துகொள்ளவும், உமது வல்லமையின் மகத்துவத்தை ஆராதிக்கவும், பரிசுத்தவான்களி டத்தில் உமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய ஐசுவரியத்தை அறிந்து ஆனந்திக்கவும் எனக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களை அருளுவீராக (எபே 1:17-21). நீர் எனக்காக ஆயத்தம்பண்ணியிருக்கிற, என் சுபாவக்கண்கள் காணக்கூடாதவற்றை, உமது ஆவியானவர்தாமே எனக்குத் தொடர்ந்து வெளிப்படுத்துவாராக (1 கொரி 2:9,10). உன்னதங்களில் வீற்றிருக்கிற பரவசத்தை நான் இழந்துபோகாதிருப் பேனாக.

“விளைந்திருக்கிற வயல்நிலங்களைப் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் (யோ 4:35). என்னைச் சுற்றியே கவனத்தைச் செலுத்துவ தினால் சிலவேளை கண்களை ஏறெடுத்துப் பார்க்கத் தவறிவிடுகிறேன். முன்னோடித் தரிசனத்தை எனக்குத் தாரும். வழிகாட்ட யாரும் இல்லாத வர்களாய்த் தவிக்கும் திரள்கூட்ட மக்களைக் கண்டு மனதுருகச் செய்யும் (மத் 9:36). எப்பொழுதும் அணிந்துகொள்ளும்படியாய் நீர் எனக்களித் திருக்கும் மிஷனரிக் கண்ணாடியைக் கழற்றாதிருக்கச் செய்யும்.

“நான் தெளிவாய்ப் பார்க்கும்படி எப்பொழுதும் என் கண்களுக்குக் கலிக்கம் போட்டே வையும் (வெளி 3:18).

“ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்!

“என் உதடுகளில் உம் விரலை வைத்து ‘எப்பத்தா’ என்றுரையும் (மாற் 7:34). என் நாவைக் கட்டவிழ்த்துவிடும். உமது நோக்கை நிறைவேற்ற என் குரல்வளையைத் தொட்டு உயிரூட்டும். ஊமையான விக்கிரகங்களைப் போலல்லாது நீர் பேசும் தேவனாச்சுதே. உமது பெயரே வார்த்தை அல்லவா?

“உமது நாமத்தைப் புகழும்படி என் உதடுகளைத் திறந்தருளும். உமது நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியான ஸ்தோத்திர பலியை எப்போதும் உமக்குச் செலுத்துவேனாக (எபி 13:15). வெற்று இதயத் தோடு எப்படி உம்மைத் துதிப்பேன்? நான் அறியாத மொழியில் பேச நீர் அளித்த வரத்திற்காக நன்றி தேவா. உமது வரங்கள் யாவற்றையும் உம்மை உயர்த்தி மகிமைப்படுத்தும்படி பயன்படுத்த அருள்புரியும். உம்மைத் துதிக்கும் சிலாக்கியத்தை மரங்களுக்கும் கல்லுகளுக்கும் விட்டு விடாதிருப்பேனாக (லூக் 19:40).

“ஆண்டவரே, ஜெபத்தில் கதற என் உதடுகளைத் திறந்தருளும். என் வாழ்விலும் ஊழியத்திலுமுள்ள மலட்டுத்தன்மைக்காகத் துக்கித்து, உமது ஆவி என் உதடுகளை அசைக்க என் ஆத்துமாவை மன்றாட்டு ஜெபத்தில் ஊற்றுவேனாக (1 சாமு 1:12-15). அறையிலோ அம்பலத்திலோ ஜெபிக்கக் கிடைக்கும் தருணங்களை நழுவவிடாதிருப்பேனாக. ஜெபத்தைவிட மேலான சிலாக்கியமும் அழைப்பும் ஏது? என் தேவைகளையும் பிரச்னைகளையும் குறித்து மனிதரிடம் என் வாயைத் திறவாமல் உண்மையான உதவி வரும் உமது சிங்காசனத்திற்கு நேரே என் சத்தத்தை உயர்த்துவேனாக.

“உமது மகிமையையும் மகத்துவத்தையும் பறைசாற்றும்படி என் உதடு களைத் திறந்தருளும் தேவா. பாவமும் குற்றமுமுள்ள மனச்சாட்சியும் என் வாயை அடைத்துவிட்டன. என்னைச் சுத்திகரித்து என் உதடுகளைத் திறந்தருளும். அப்பொழுது என் வாய் உமது புகழை அறிவிக்கும் (சங் 51:14,15). உமது வசனத்தைத் தைரியமாய்ச் சொல்ல என்னைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பியருளும் (அப் 4:31). சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கும்படி எனக்கு வாக்கருளும். உமது வாயும், உமக்கு ஸ்தானாபதி யுமான நான் அமைதியாயிருப்பது எப்படி? (எபே 6:19,20).

"ஆண்டவரே, மக்களுக்கு ஆலோசனை அருளும்படி என் உதடுகளைத் திறந்தருளும். என்னைத் தூதுவனாகவும் ஆசாரியனாகவும் ஆக்க வில்லையோ ? என் வாயிலே மக்கள் வேதத்தைத் தேடுவார்களே. ஞானத்தைப் போதிப்பதினாலும் அறிவை உணர்த்துவதினாலும் அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பி நீதியின் பாதையிலே கொண்டு சேர்க்க எனக்கு உதவும் (மல் 2:6,7). வரும் ஆபத்திற்கு மக்களை எச்சரிக்க என்னைக் காவல்காரனாக்கியிருக்கிறீர். தூக்கத்தையே விரும்பும் குலைக்கமாட்டாத ஊமையான நாயாகிவிடாதிருப்பேனாக (ஏசா 56:10,11). குளிர்ந்துபோன இருதயங்களும் தளர்ந்த கரங்களும் நான் பாடும் சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் அனல் கொள்வதாக (எபே 5:19).

"ஏசாயாவின் நாவிற்கு அளித்த அக்கினி அனுபவத்தை எனக்கும் தாரும்.

"ஆண்டவரே, என் செவிகளைத் திறந்தருளும்!

"நான் செவி மந்தமுள்ளவன் (எபி 5:11). என் செவிகளை விருத்தசேதனம் பண்ணும் ஐயா. கேட்கிற விதத்தைத் குறித்து கவனமாயிருக்க வேண்டுமென்கிற பன்முறை எச்சரிப்பிற்குக் கவனம் செலுத்த உணர்வைத் தாரும்.

"எழுதப்பட்ட உமது வார்த்தையைக் கேட்க என் செவியைத் திறந்தருளும். எத்தனைமுறை கடமைக்காய் வேதத்தை வாசித்து உமது சத்தத்தைக் கேட்காது போகிறேன். காலை முதல் மதியம் வரை உமது புத்தகத்திலிருந்து எஸ்றா வாசிக்கும்பொழுது எவ்விதம் மக்கள் கவனித்துக் கேட்டார்களோ அவ்விதமே நானும் உன்னித்துக் கவனிக்க என் செவிகளைத் தொடும் (நெகே 8:3). வேதப் புத்தகம் வெறும் அச்சுத்தாள் கோப்பு அல்ல; அதிலுள்ள வார்த்தைகள் ஆவியும் உயிருமானவை என்பதை எப்போதும் நினைவிலிருத்திக்கொள்வேனாக (யோ 6:63).

"ஆண்டவரே, ஆவியானவரின் குறிப்பிட்ட சத்தத்தைக் கேட்க என் செவிகளைத் திறந்தருளும். ஆசியாவின் ஏழு சபைகளுக்கும் கிறிஸ்து எழுதிய தமது கடிதங்களில் திரும்பத் திரும்பச் சொன்னதை நினைவுகூருகிறேன் (வெளி 2:7,11,...). உமது அனுதின ஆலோசனைகளையும் வழிநடத்துதலையும் பெறும்படி காலைதோறும் எனக்கு விழிப்பூட்டி என் செவிகளைத் திறந்துவிடுவீராக (ஏசா 50:4,5). ஆண்டவரே, என் செவிகளுக்கு நீர் செய்யும் காரியத்தை வெளிப்படுத்த இப்படியோ அப்படியோ, சொப்பனத்திலோ, எப்படியோ பேசலாம் (யோபு 33:14-16). உமது மெல்லிய சத்தத்தைக் கண்டுகொள்வேனாக.

"ஏழைகளின் அழுகுரலுக்கு என் செவிகளைத் திறந்தருளும். நீதிமொழிகள் 21:13ஐ ஒருநாள் நான் தியானிக்கும்வரை இக்காரியத்தில் கவலையீனமாகவே இருந்தேன். "ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான்" என்றிருக்கிறதே. குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலும், எளியவருக்குத் தந்தையுமாயிருந்தேன் என்று சாட்சியிட்ட யோபுவைப்போல என்னை மாற்றும் (யோபு 29:11-16). நீர் ஏழைகளின் தேவனல்லோ ? என்னைப்போல ஏழைகளையும் நேசிக்க உமது இதயத்தையும் கிறிஸ்துவின் சிந்தையையும் தாரும்.

"ஆண்டவரே, என் குடும்பத்தின் குரலைக் கேட்க என் செவிகளைத் திறந்தருளும். என் பிள்ளைகளின் தேவைக்கு உணர்வுள்ளவனாயிருப்பேனாக. சில வேளை வனாந்தரத்துத் தீக்குருவிபோல ஏனோ கொடூரமாகிவிடுகிறேன். ஜீவ அப்பத்தையும் ஜீவனத்துக்கான அப்பத்தையும் அவர்களுக்கு கொடுக்கத் தவறுகிறேன் (புல 4:3,4). நீர் எனக்கருளியுள்ள நல்ல வாழ்க்கைத் துணைவிக்காக நன்றி, ஆண்டவரே. ஆனால் அவளது அமைதியையும் பொறுமையையும் சாதகமாக்கிக்கொள்கிறேனே, மன்னியும் தேவா! அவளது மெல்லிய குரலுக்கும் என் செவிகள் உன்னிப்பாயிருக்கட்டும்.

"ஆண்டவரே, என் இதயத்தைத் திறந்தருளும்!

"என் இதயம் திருக்குள்ளது மட்டுமல்ல, அடைபட்டுமிருக்கிறது. அது கொழுத்து முரட்டாட்டமுள்ளதாகிவிட்டது. அதை உடைத்துத் திறந்தருளும். ஐயனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயம்தானே உமக்குப் பிரியம் ? (சங் 51:17-19).

"என் பாவங்களையும் குற்றங்களையும் உணரும்படி என் இதயத்தைத் திறந்தருளும், அப்பா. என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும் (சங் 139:23,24). என் இதயமே எவ்வளவு கேடுள்ளதாயிருக்கிறதென்று உணராதபடியால் அடிக்கடி பிறரைக் குற்றஞ்சாட்டி நியாயந்தீர்க்கிறேன் (எரே 17:9). சர்வ வல்லவரே, உமக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிருக்க உதவிசெய்யும் (ஆதி 17:1).

"ஆண்டவரே, உமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி என் இதயத்தைத் திறந்தருளும். உமது ஜீவனும் வல்லமையுமுள்ள வார்த்தை என்

ஆத்துமாவையும் ஆவியையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்தட்டும்; இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கட்டும். உம்முடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை; எல்லாம் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும் வெளியரங்கமுமாயிருக்கிறது. உமக்கே நான் கணக்கு ஒப்புவிக்கவேண்டுமென்பதை மறக்காதிருப்பேனாக (எபி 4:12,13). என் உள்ளம் திறந்து உம்மீது என் அன்பை ஊற்றிவிடுவேனானால் உமது கற்பனைகள் எனக்குப் பாரமாயிராதே (1 யோ 5:3).

"இதய தெய்வமே, நன்மை தீமை இன்னதென்று அறியத்தக்கதாக என் இதயத்தைத் திறந்தருளும் (1 இரா 3:9). கடற்கரை மணலைப்போன்ற விசாலமான இதயத்தை சாலொமோனுக்கு அளித்தீரே, அதையே நானும் வாஞ்சிக்கிறேன் (1 இரா 4:29). பலமுறை என் தீர்ப்பு தவறாவதினால் என்னையே முட்டாளாக்கிப் பிறரையும் புண்படுத்திவிடுகிறேன். என் உள்ளத்தில் உள்ளதை உள்ளபடியே நான் அறிந்துகொள்ளும்படி அதன் மூலைமுடுக்கெல்லாம் உமது ஒளியை வீசச் செய்யும். என் தவற்றை நான் உணரும்பொழுது அதை ஒத்துக்கொள்ளும் தைரியத்தைத் தாரும். விருப்பு வெறுப்பினால் பிறர்மீது தப்பெண்ணங்கொள்ள என்னை அனுமதியாதேயும். எந்த மாய்மாலமும் கசப்பான வேரும் நுழைந்துவிடாதபடி எப்பொழுதும் திறந்த மனமுள்ளவனாயிருக்கச் செய்யும்.

"ஆண்டவரே, பிறரோடு நான் ஆழ்ந்த ஐக்கியங்கொள்ளும்படி என் இதயத்தைத் திறந்தருளும். தாவீது யோனத்தானின் ஆத்துமாக்கள் எப்படி இசைந்திருந்தனவோ அவ்வித ஐக்கியத்தை உமது பிள்ளைகளோடு ஆசிக்கிறேன். அவ்வித உடன்படிக்கையின் உறவை நான் அனுபவிக்கட்டும். யோனத்தான் தன் மேலாடையைத் தாவீதுக்கு அளித்ததுபோல நானும் என் உள்ளத்தைப் பிறருக்குத் திறக்கவேண்டுமே. என் வில்லையும் என் கச்சையையும் நான் கொடுத்துவிடட்டும் (1 சாமு 18:1,3,4). ஆண்டவரே, பிறரோடு என் உறவு பெயரளவிலே இல்லாமல் உண்மையாக இருக்கும்படி இருளிலும் ஒதுக்கத்திலுமிருந்து என்னை ஒளிக்குள்ளும் நம்பிக்கைக்குள்ளும் கொண்டுவாரும் (1 யோ 1:7).

"ஆண்டவரே, என் கரங்களைத் திறந்தருளும்!

"உமது கரங்கள் எப்பொழுதும் திறந்திருக்கின்றனவே. வரவேற்கும், ஆசீர்வதிக்கும் கரங்கள்! உமது குமாரன் விரிந்த கரங்களோடு சிலுவையில் தொங்கினதில் அதைத் தெள்ளத் தெளிவாக்கினீர்.

“தாராளமாய்க் கொடுக்கும்படி என் கரங்களைத் திறந்தருளும், ஆண்டவரே. விரல்களை இறுக மூடிக்கொண்டால் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நான் கொடுப்பதெப்படி ? (லூக் 6:38). வாங்குகிறதை விட கொடுக்கிறதே பாக்கியம் என்ற ஆண்டவராகிய இயேசுவின் பொன்மொழிகள் என் மனதில் பொன்னால் பொறிக்கப்படட்டும் (அப் 20:35). உமது சொந்தக் குமாரனையும், நித்திய ஆவியையும் எங்களுக்குக் கொடுத்துவிட்டீரே. நன்மையான எதையும் நீர் எங்களுக்கு விலக்கி வைக்கவில்லை (ரோ 8:32). என் கரங்கள் கொடுக்கத் துரிதமாயும் எடுக்கத் தாமதமாயும் இருப்பதாக.

“ஆண்டவரே, பலமில்லாதோரைத் தாங்கும்படி என் கரங்களைத் திறந்தருளும். பலவீனரும் தொய்ந்தவருமான சகோதரரைத் தாங்கிப் பிடிக்க ஊரும் ஆரோனும் போலிருப்பேனாக. என் கரங்களை முடக்கிக் கொண்டு ஆலோசனையும் புத்தியும் சொல்லிப் பயனென்ன ? நெறிந்த நாணலை முறியாமலும் மங்கி எரியும் திரியை அணையாமலும் இருப்பேனாக (மத் 12:20).

“வலியிலும் வேதனையிலும் துடிப்போரை அணைத்துக்கொள்ள என் கரங்களைத் திந்தருளும். இன்று உலகில் இயேசுவின் உடலின் ஓர் உறுப்பாக நான் இருக்கிறபடியால் அவரது கரங்களாகச் செயல்படுவேனாக. அன்றைய நாளின் பாரம்பரியத்திற்கு மாறாக தம் கையை நீட்டித் தொழுநோயாளியைத் தொடுவதற்கும் அவர் தயங்கவில்லையே (மத் 8:1-3). விசுவாசத்தோடும் மனதுருக்கத்தோடும் பிணியாளிகள் மீது என் கரங்களை வைக்கக் கிருபையருளும் (மாற் 16:18). தெருவில் தவிக்கும் ஒருவனைத் தொடத் தடையாயிருக்கும் என் அந்தஸ்திற்கு மரிப்பேனாக.

“ஏழைகளுக்கும் தேவை நிறைந்தோருக்கும் உதவும்படி என் கரங்களைத் திறந்தருளும். நாட்டில் எளியோர் இல்லாமலிருப்பதில்லை என்று நீர் திரும்பத் திரும்ப விளம்பியுள்ளபடியால் எளியவருககு உதவுவதில் சோர்ந்துபோகாதிருப்பேனாக (உபா 15:10,11). நான் கேட்டுக்கொண்டே யிருக்கிறேன், நீரும் கடிந்துகொள்ளாமல் தாராளமாய்க் கொடுத்துக் கொண்டேயிருக்கிறீர் (யாக் 1:5). அப்படியிருக்க, அடிக்கடி தொந்தரவு செய்கிறான் என்று எளியவனை நான் மட்டும் திட்டுவதெப்படி ?

“அப்பா, என்னை உமது பலிபீடத்தில் கிடத்துகிறேன். உம்மாலன்றி என்னாலாகும் என்று சொல்ல ஒன்றுமில்லை, உதவியருளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென் !”

6

மிஷனரிப்பணிக்காக ஜெபிப்பது எப்படி?

நாமே கடைசித் தலைமுறையாய் இருக்கலாம். நாம் நுழைந்துள்ளது இந்த யுகத்தின் இறுதிப் பத்தாண்டாய் இருக்கலாம். அப்படியானால் நாம்தான் சபைச் சரித்திரத்தின் இறுதி அத்தியாயத்தை எழுதி முடிப்போம். நடபடிகள் புத்தகத்தின் 29ஆம் அத்தியாயம் நம்மைப் பற்றித்தான் இருக்கும்!

"*கி.பி.2000க்குள் அகிலவுலக நற்செய்திப் பணிமயம்.*" இதுவே கிறிஸ்தவ உலகெங்கும் இன்றைய முழக்கம். மிஷனரிப்பணி மீது என்றுமில்லா ஆர்வம். இதை ஒரு மிஷனரி யுகம் எனலாம். தனது மிஷனரிக் கடமையை நிறைவேற்ற சபையானது விழித்தெழுகிறது. மிஷனரி இயக்கங்கள் தங்கள் வேகத்தைக் கூட்டுகின்றன. புதிய திட்டங்கள் பல உருவாகின்றன. என்றுமில்லாத அளவு முசுக்கட்டைச் செடிகளின்மீது செல்லும் இரைச்சல் நமது காதுகளில் விழுகின்றது.

ஆனால் இவ்வளவு விறுவிறுப்பாய் மிஷனரிப் பணியில் ஈடுபடுகையில் மிக முக்கியமான வேலையாகிய **"ஜெபம்"** என்பதை மறக்க அல்லது குறைக்க வாய்ப்புண்டு. "ஆகையால் புறப்பட்டுப்போங்கள்" என்று கட்டளையிடுமுன் "ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள்" என்று இயேசு கற்பித்தார் (மத் 9:38; 28:19).

ஜெபத்தில்தான் மிஷனரி இயக்கங்கள் பிறக்கின்றன என எவரும் அறிவர். ஆனால் அவைகள் ஜெபத்தாலேயே இயக்கப்படாவிட்டால் ஆவியில் துவங்கியது மாம்சத்தில் முடிவடையும்.

மிஷனரிப்பணிக்காக ஜெபிப்பதென்றால் என்ன?

அது மிஷனரி நாடகத்தில் நடிக்கும் ஐந்து குழுவினருக்காக ஜெபிப்பதாகும். ரோமர் 10:14,15இல் பவுல் அவர்களை வரிசைப்படுத்துகிறான். அனுப்புவோர், போவோர், கேட்போர், விசுவாசிப்போர், தொழுவோர்.

1. அனுப்புவோர்

சொல்லப்போனால் அறுவடைக்குச் சொந்தமான ஆண்டவர்தான் தமது அறுவடைக்கு ஆட்களை அனுப்புபவர். ஆனால் முதல் மிஷனரிகளைக் குறித்து அவர்கள் பரிசுத்த ஆவியானவராலும் சபையினராலும் அனுப்பப்பட்டனர் என வாசிக்கிறோம் (அப் 13:3,4). பவுல், பர்னபா மீது தலைவர்கள் வெறும் சடங்குக்காகக் கரங்களை வைக்கவில்லை. கரங்களை வைக்குமுன் அவர்கள் "உபவாசித்து ஜெபித்தார்கள்." இது அவர்களது கரிசனையைக் காட்டுகிறதல்லவா? மிஷனரிகளென்றால் முன்னணிப் போர்வீரர் என அவர்கள் உணர்ந்தனர். பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, ஆவியானவராலேயே ஆகும் என்று அறிக்கையிடுவதுதான் உபவாச ஜெபம்.

அனுப்பும் சபைகளும் குழுக்களும் மிஷனரிகளை எப்பொழுதும் இருதயங்களில் சுமந்து செல்ல ஜெபியுங்கள். சொந்த, உள்ளூர்ப் பிரச்னைகளில் சிக்கும் வேளைகளில் மிஷனரிகளின் பிரச்னைகளை மறந்துவிடக்கூடாது. ஜெபக்குழு அங்கத்தினர்களை விசையுடன் ஜெபிக்க உந்தும்படி குழுத் தலைவர்களின் தரிசனமும் தாகமும் அதிகரித்துக் கொண்டேயிருக்க ஜெபியுங்கள்.

ஜெபிப்பதிலும், கொடுப்பதிலும் துவக்கத்தில் இருந்த உற்சாகம் நாளடைவில் குறையலாம். வெகுசிலரே இறுதிவரை அதே உற்சாகத்தோடிருப்பர். கொடுக்கல் வாங்கல் காரியத்தில் ஒரு சமயம் பிலிப்பியரைத் தவிர வேறு எந்தச் சபையினரும் பவுலுக்கு உதவவில்லை (பிலி 4:15). அரசும் தொழிற்சாலைகளும் ஆண்டுதோறும் தங்கள் ஊழியருக்கு ஊதியத்தைக் கூட்டிக்கொண்டேயிருக்கின்றன. இந்த எளிய தத்துவத்தை மிஷனரிகளை அனுப்புவோர் புரிந்துகொண்டு தாங்கள் கொடுப்பதை ஆண்டுதோறும் கணிசமாகக் கூட்ட ஜெபியுங்கள்.

மிஷனரி இயக்கங்களின் தலைவர்களும் அனுப்புவோர் பட்டியலில் சேர்வர். ஆவியானவரின் நடத்துதல் அவர்களுக்குத் தெளிவாய்த் தெரிய ஜெபியுங்கள். பணிக்களத்திலுள்ள ஒவ்வொரு ஊழியன்மீதும் அவர்களுக்கு உண்மையான கரிசனை இருக்கவேண்டும். மிஷனரிகளையும் களச் செய்திகளையும் வெறுமனே முன்னேற்றப்பணிச் சரக்குகளாய் அவர்கள் பயன்படுத்தக்கூடாது. தலைவர்கள் எப்பொழுதும் தங்களை மிஷனரி களுக்குப் பணியாளர்கள் என்று உணர்ந்திருக்க ஜெபியுங்கள். ஊழியருக்கு இடம் நியமித்தல், இடம் மாற்றுதல் ஆகியவற்றில் ஆவியானவர் தலைவர் களைத் தெளிவாய் நடத்த வேண்டும். இங்கு கவலையீனம் ஊழியனின் எதிர்காலத்தையே நாசமாக்கும்.

மிஷனரிப் பணியைத் தாங்கும் தனிக் கிறிஸ்தவர் எப்பொழுதும் தேவன்பினால் நெருக்கி ஏவப்படவேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் மன்றாட்டு வீரராயிருக்க ஜெபியுங்கள். வீட்டில் வடிக்கும் கண்ணீர் களத்தில் அருள்மாரியாய்க் கொட்டும்.

2. *போவோர்*

அப்போஸ்தலன் பவுலுக்கு இருந்த ஆன்மீக வலுவும் தைரியமும் அசாதாரணமானவை. ஆனால் அவன் கெஞ்சுவதைக் கேளுங்கள்: "நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்க வாக்கு எனக்கு கொடுக்கப்பட எனக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்" (எபே 6:20).

மிஷனரிகளைத் தேவதூதர் அல்லது அபார மனிதர் என நினைத்து விடக்கூடாது. அவர்களும் நம்மைப்போல பாடுகளும் பிரச்னைகளும் உள்ளவர்கள்தான். அவர்கள் சென்றுவிட்டனர், நாம் தங்கிவிட்டோம், இதுதான் வித்தியாசம். நண்பர்கள், ஐக்கியம், ஆகாரம் அத்தனையும் நிரம்ப இருந்தும் நாம் எவ்வளவாய்ப் பிரச்னைகளில் தவிக்கிறோம்! பணிக்களத்திலோ மிஷனரி தனியாய் நிற்கிறான். அவனது **ஆன்மீகப்** பிரச்னைகள் ஏராளம். தன்னைப் போன்றே போராட்டத்தில் தவிப்பவன்தான் அவனது உடன் ஊழியன். அவர்களுக்கு நமது ஜெபம் எவ்வளவாய்த் தேவை! சோதனைகளில் அவர்கள் விழுந்துவிடாதிருக்க விழித்திருந்து ஜெபிப்போம்.

மிஷனரிகளின் **உடலுக்கடுத்த** பிரச்னைகளுக்காக ஜெபியுங்கள். அதிக வெயில், அதிக குளிர், சுகாதார வசதிக்குறைவு, மருத்துவ **வசதியின்மை**

போன்ற காரணங்களால் உடல்நலக்கேடு சாதாரணம். பயணங்களிலும், காட்டுமிருகங்கள், விஷப்பூச்சிகள், விபத்துகளிலிருந்தும் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் இளம் மிஷனரி ஒருவர் மணமாகி ஒரு மாதத்திற்குள் இராஜஸ்தானில் ரயில் நசுக்கி மரணமடைந்தது நினைவிலிருக்கிறதா ?

அடுத்து மனநிலைப் பிரச்னைகள். பிள்ளைகள், இனத்தார், நண்பர் ஆகியோரை விட்டுப் பிரிந்திருத்தல், பணிக்களத்திலுள்ள மக்களின் எதிர்ப்பு, ஊழியருக்கிடையே உறவுப்பிரச்னை, ஊழியத்தில் கனியின்மை போன்றவை இதற்குக் காரணங்களாகும். தேவன் உற்சாகமான ஆவியினால் மிஷனரிகளைத் தாங்கி சொல்லமுடியா மகிழ்ச்சியினாலும் சமாதானத்தினாலும் அவர்களை நிரப்பும்படி ஜெபியுங்கள். "கன்னானாகிய அலெக்சந்தர்" போன்றவர்களால் மிஷனரிகள் மிரண்டுவிடாதிருக்க ஜெபியுங்கள் (2 தீமோ 4:14). நமது ஜெபமே எல்லாச் சூழலிலும் அவர்களைத் தைரியமாயிருக்கச் செய்யும் (அப் 4:24-31).

மிஷனரிகள் மிக எளிய வாழ்க்கைத்தரத்தை மேற்கொண்டாலும் அவர்களுக்குப் பொருளாதாரப் பிரச்னைகள் உண்டு. நிறுவனம் தரும் மாதாந்திர உதவித்தொகையில் சமாளிப்பது அவ்வளவு எளிதல்ல. எதிர்பாராத பல்வேறு செலவுகளுக்கெல்லாம் ஒருவழியுமில்லை. பணம்தான் காரியம் என்றில்லையென்றாலும் காரியங்களுக்குப் பணம் தேவைதானே! பண நெருக்கடியினால் ஊழியங்களை விட்டுப் போவோர் ஒரு சிலரல்ல.

மிஷனரியின் ஊழியப் பிரச்னைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும். அவை ஒன்றிரண்டல்ல. திடீரென்று குழுவிலிருந்து தேமா விலகுகிறான் (2 தீமோ 4:10). ஒரு சிறிய காரியத்தைக் குறித்த வாக்குவாதத்தால் பர்னபா பிரிந்து செல்கிறான் (அப் 15:36-40). துரோப்பீமு வியாதிப்படுவதால் குழுவினரின் எண்ணிக்கை குறைகிறது (2 தீமோ 4:20). ஊழியரின் இதுபோன்ற பிரச்னைகளைக் கற்பனை செய்து ஜெபிக்கவேண்டும்.

ஆவியானவரின் சத்தத்திற்கு மிஷனரியின் செவிகள் திறந்திருக்க ஜெபியுங்கள். வனாந்தரத்திலுள்ள ஒருவனோடு அவன் பேச வேண்டுமென ஆவியானவர் விரும்புகையில், நகரில் நடந்துகொண்டிருக்கும் வெற்றிகரமான கூட்டத்தில் மிஷனரி சிக்கிக்கொள்ளக்கூடாது (அப் 8). தேவப்பணியை தேவப்பாணியில் தேவனது வேளையில் செய்யும் தேவனது வேளையாளே மிஷனரி என்றொரு விளக்கம் உண்டு. சங் 32:8ஐ அவனுக்

தாக உரிமை பாராட்டுங்கள். பலப்படவும் பரிசுத்தப்படவும் அபிஷேகம் அவன்மீது அனுதினம் இறங்க ஜெபியுங்கள். தேவனை அறிவித்துக் கொண்டே செல்லும் மிஷனரி அவரை அறிந்துகொண்டே இருக்கவேண்டும். சோர்பு, தளர்ச்சி போன்றவற்றினின்று நமது ஜெபம் மிஷனரியைத் தாக்கவேண்டும்.

3. *கேட்போர்*

கிராமங்களிலும் தொலைவிடங்களிலும் நற்செய்தியைக் கேட்க ஒரு கூட்டத்தைக் கூட்டுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் மக்கள் கேட்காமல் விசுவாசிக்க முடியாதே. விசுவாசம் திருவசனத்தைக் கேட்பதினால்தானே வரும்? (ரோ 10:17). மிஷனரி எனும் வெளியூரான் ஒருவன் பேசுவதைக் கேட்க மக்களுக்கு இருக்கும் தயக்கத்தை தேவன் நீக்க ஜெபியுங்கள். ஆவியானவர் மக்கள் நடுவில் ஓர் ஆவலையும் உற்சாகத்தையும் உருவாக்க வேண்டும்.

நற்செய்தியின் ஒளி அவர்கள்மீது பிரகாசிக்காதபடி இவ்வுலகின் அதிபதி மக்களின் கண்களைக் குருடாக்கியிருக்கிறான். கர்த்தர் அவர்கள் கண்களைத் திறக்க ஜெபியுங்கள். ஏமாற்றங்கள், தொல்லைகள் காரணத்தினால் தாழ்த்தப்பட்ட மக்கள் சிலவேளை வெளியிலிருந்து வரும் எவரையும் கேட்க விரும்புவதில்லை. சில கிராமங்களில் காரணமேயில்லாது மக்கள் வேண்டாவுணர்வு கொண்டு நற்செய்திக்கான எவ்வித அழைப்பையும் சட்டைசெய்வதேயில்லை. இவ்விதச் சூழல்களில் கர்த்தரே வெற்றிதர வேண்டும்.

மனிதனெவனும் பூட்டமுடியாத திறந்த வாசல்களைக் கிறிஸ்து வாக்களித்துள்ளார். ஆனால் வாக்குத்தத்தம் எதுவும் உரிமை பாராட்டிக் கேட்கப்படவேண்டும். பொதுவாக திறந்த வாசல்களும் எதிர்ப்புகளும் சேர்ந்தே வரும் (1 கொரி 16:9).

மட்டுமல்ல, கிராமியச் சூழலில் மக்கள் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே பல சந்தடிகள் உருவாகும். திடீரென்று வயலுக்குள் ஆடு மாடு நுழைந்துவிடும். ஒரு மூலையில் இருவர் ஏதோவொன்றிற்கு வாய்ச்சண்டை துவங்கிவிடுவர். அல்லது சிறு குழந்தையொன்று அழ, அதைப் பார்த்து அலற அல்லது அதை அடிக்க, அத்தனை பேரும் அப்பக்கம் திரும்ப... அப்பப்பா இப்படி எத்தனை! கிராமத்தார் கவனத்தை ஒரு பத்து நிமிடம் இழுத்துப் பிடிப்பதே சிலசமயம் போதும் போதும் என்றாகிவிடும். பிசாசின் முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட ஜெபியுங்கள்.

உலகைக் கிறிஸ்தவமயமாக்க அல்ல, நற்செய்திமயமாக்கவே கிறிஸ்து நமக்குக் கட்டளையிட்டுள்ளார். ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நற்செய்தி ஒருமுறையாவது தெளிவாய் விளக்கப்படவேண்டும். பல மைல் நடந்து ஒரு கிராமத்தை அடையும் மிஷனரி அங்கு ஓர் உற்சவம் அல்லது அடக்கம் என்பதால் வசனம் கேட்க மக்கள் ஆயத்தமில்லை எனக்கண்டு சோர்படைகிறான். சிலசமயம் அறுவடை அல்லது வேட்டை என்று மக்கள் அதிலேயே தீவிரமாயிருப்பர். ஒருமுறை அன்பாய் வரவேற்று நிற்கும் மக்கள் அடுத்தமுறை அலட்சியமாய்க் காணப்படுவர். ஒன்றுமே புரியாது. எந்தச் சூழலையும் மிஷனரியானவன் சாதகமாக்கிக் கொள்ள ஜெபியுங்கள்.

கிராமப்புற மக்களுக்கு நற்செய்தி அவ்வளவு எளிதாக உடனே விளங்குவதில்லை. பலமணம், மதுவருந்துதல் போன்றவை சாதாரணப் பழக்கங்களாயிருக்குமிடங்களில் பாவத்தைப் பற்றிப் பிரசங்கிப்பது சுலபமல்ல. பல தெய்வங்களை வணங்குவோரும், இயற்கை வணக்கத்தாரும் ஒரே தேவன் எனும் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளப் பெரிதும் தயங்குவர். சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ள கல்வியறிவு கட்டாயமில்லை எனினும், பட்டணத்தில் வளர்ந்து கல்லூரியில் பயின்ற மிஷனரியின் மொழி நடையும் பேச்சுப் பாணியும் மக்களுக்குப் புரிவது கடினம்தான். கேட்போரின் கலாச்சாரத்தையும் சிந்தனை ஆற்றலையும் தெளிவாகப் புரிந்து அதற்கேற்றவாறு தங்கள் பேச்சை உடனடியாக மாற்றிக்கொள்ளும் தாலந்து ஒரு சிலருக்கே உண்டு. ஜெபியுங்கள்.

இயேசுவின் ஊழியத்திலும் அப்போஸ்தலரின் ஊழியத்திலும் அற்புதங்கள் திரள்களைக் கவர்ந்தன. இன்றும் அப்படியே. தேவன் அற்புதங்களை நிகழ்த்தி நோயாளிகளைக் குணமாக்குவதால் மிஷனரியைக் கேட்க பெருவாரியாய் மக்கள் கூடும்படி ஜெபியுங்கள். பிசாசுகள், பில்லிசூனியம் ஆகியவற்றிற்கு எதிராக தேவ வல்லமை அசாதாரணமாய் வெளிப்பட வேண்டும்.

4. விசுவாசிப்போர்

எல்லா நிலங்களிலும் விளைச்சல் ஒன்று போலிராது. நற்செய்தி விதைப்பின் பலனும் இடத்துக்கிடம் மாறும். நல்ல பலன் கிடைத்துவிட்டது என்பதால் ஊழியக்காரனும் அவனது முறையும் பிரமாதம் என்று சொல்லிவிட முடியாது. "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற **தேவனாலேயாம்**" (ரோ 9:16). கொர்நேலியுவின் வீட்டில் நடந்ததை விவரிக்கையில், "தேவன்" புறவினத்தாருக்கு மனந்திரும்பு

தலைக் கட்டளையிட்டார் என்றான் பேதுரு (அப் 11:18). தங்கள் முதல் மிஷனரிப் பயணமுடிவில், "தேவன்" புறவினத்தாருக்கு விசுவாசக் கதவைத் திறந்தார் எனப் பவுலும் பர்னபாவும் சபைக்கு அறிவித்தனர் (அப் 14:27). "கர்த்தர்" அவள் இருதயத்தைத் திறந்தார் என்று முதல் ஐரோப்பிய விசுவாசியாகிய லீதியாளைக் குறித்துச் சொல்லப்பட்டது (அப் 16:14). பெருவாரியாய் தேவன் மக்களை இரட்சிக்க ஜெபிக்கவேண்டும். "எல்லா மனிதரும்" இரட்சிக்கப்பட அவர் விரும்புகிறார்; ஆனால் நாம் அதற்காக விண்ணப்பிக்க வேண்டும் (1 தீமோ 2:1-4).

தங்கள் இருதயங்களில் உணர்த்தப்பட்டாலும், ஆதிவாசிப் பகுதிகளிலுள்ள கடும் சமுதாயக் கட்டுகளினால் மக்கள் வெளியரங்கமாய் முன்வரத் தயங்குவர். கிறிஸ்துவுக்காய்த் தீர்மானிக்க அவர்கள் பெருங் கிரயம் செலுத்த வேண்டியதிருக்கும். குடும்பமும், சுற்றமும், அவர்களைத் தூக்கியெறிந்துவிடும். உயிருக்கே ஆபத்து வரலாம். முன்வருவோருக்கு சில இயக்கங்கள் உடனே திருமுழுக்கு கொடுக்காமல் கணிசமானதொரு எண்ணிக்கை சேரக் காத்திருப்பர். இதற்கு நடைமுறைக் காரணங்கள் உண்டு. மிஷனரிகள் பொதுவாகக் கிராமத் தலைவன் அல்லது அந்த ஆதிவாசி இனத்தலைவனைக் குறிவைப்பர். அவன் மனந்திரும்பிவிட்டால் காரியங்கள் சற்று சுலபம் (மத் 10:11). ஆவியானவர் சூறாவளியாய்ச் செயல்பட ஜெபியுங்கள்.

மதச்சார்பற்ற நமது அரசு இந்தியர் எவரும் தங்களுக்கு விருப்பமான மதத்தைத் தழுவவும், பறைசாற்றவும் சட்டத்தின்படி விடுதலை கொடுத்துள்ளது. ஆனால் ஒரு சில மாநிலங்களில் மதமாற்றத் தடுப்புச் சட்டம் உண்டு. அங்கெல்லாம் மாவட்டத் தலைவர் முன்னிலையில் கையெழுத்திடாமல் எவரும் திருமுழுக்கெடுத்து கிறிஸ்தவராக முடியாது. பயத்திலும், பின்தங்கிய நிலையிலும் வாழும் கிராமப்புற மக்கள் இவ்விதம் அதிகாரிகள் முன்னிலைக்குச் செல்ல எவ்வளவாய்த் தயங்குவர்? மட்டுமல்ல, கிறிஸ்தவத்திற்கு எதிரான பல நபர்களும் இயக்கங்களும் உண்டு. எங்கும் எலிமாக்கள் உண்டு (அப் 13:8). "பொல்லாத மனிதர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படி வேண்டிக்கொள்ளுங்கள்" என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதினான் (2 தெச 3:1,2).

மக்கள் திரள் திரளாய் சபையில் சேர ஜெபியுங்கள். நடபடிகள் புத்தகத்தில் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம். பெந்தெகொஸ்தேயன்று மூவாயிரம் பேர் மனந்திரும்பினர் (2:41). சீக்கிரம் அது ஐயாயிரமானது (4:4). சமாரியாவில் மக்கள் திரளாய்க் கர்த்தரிடம் திரும்பினர் (8:6,12).

யோப்பா எங்கும் அநேகர் கர்த்தரை விசுவாசித்தார்கள் (9:42). அந்தி யோகியாவிலும் அப்படியே (11:19-21). பிசிதியாவிலுள்ள அந்தியோகி யாவில் பட்டணம் முழுவதுமே சுவிசேஷத்தில் ஆர்வங்காட்டிற்று (13:14,44). தெசலோனிக்கேயாவில் கிரேக்கர் அநேகர் கர்த்தரைச் சேர்ந்தனர் (17:1,4). இப்படிப் பல. தினமும் மக்கள் சபையில் சேருவதை மிஷனரிகள் தங்கள் பணிக்களத்தில் பார்க்கவேண்டும் (2:47). ஆதி அப்போஸ்தலருக்குக் கிடைத்தது ஆயிரங்களானால், நமக்கு இலட்சங்கள் கிடைக்கவேண்டுமே! மக்கள் பெருக்கத்தைப் பாருங்கள். அதற்கேற்ற விகிதம் வேண்டாமோ?

5. தொழுவோர்

ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் தேவனைத் தொழுதுகொள்ளும் ஒரு கூட்டத்தை எழுப்புவதே மிஷனரிப்பணியின் இறுதிக்கட்டம். இதுவே பிதாவின் தணியா தாகம் (யோ 4:23). ஊருக்கொரு சபை எழும்ப வேண்டும். சுவிசேஷ ஊழிய வரத்தோடு, சபைகட்டும் "வரமும்" மிஷனரிகளுக்கு இருக்க ஜெபியுங்கள்.

தங்களது புது விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி நிலைத்திருக்க ஜெபியுங்கள். தங்களது உன்னத அழைப்பையும் கிறிஸ்துவுக்குள்ளான சுதந்திரத்தையும் அறிந்துகொள்ளும் ஞானத்தையும் அறிவையும் தேவன் அவர்களுக்குத் தரவேண்டும் (எபே 1:15-21). மறுபடி பிறந்துள்ள ஆன்மீகக் குழந்தைகளை வளர்ப்பது ஒரு சிலாக்கியமும் அதே வேளையில் பெரும் பொறுப்புமாகும். மிஷனரிகள் இப்பொழுது மேய்ப்பர்களாய்ச் செயல்பட வேண்டும். ஒவ்வொரு ஆட்டையும் தகுந்தவாறு மேய்க்க அவர்களுக்குப் போதுமான தெளிவும் அறிவும் தேவை.

புது விசுவாசிகளின் பொருளாதாரத் தேவைகளும் கவனிக்கப்பட வேண்டும். நிவாரணப்பணிகள், மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும். நெடுந்தொலைவிலும் காடுகளிலுமுள்ள சில பகுதிகளில் கைதேர்ந்த வேலையாட்கள் கிடைப்பது அரிது. எனவே இவ்வித வேலைகளிலும் மிஷனரி தனிக்கவனம் செலுத்த வேண்டியதிருக்கும். இவ்விதம் பளு கூடுகிறது. மிஷனரி இயக்கங்களோடு கைகோர்த்து உழைக்கும் World Vision, EFICOR போன்ற நிவாரண நிறுவனங்களுக்காக ஜெபியுங்கள். இத்திட்டங்களுக்குப் போதுமான பணம் கிடைக்க ஜெபியுங்கள்.

இறையரசிற்குள் நுழைவதே உபத்திரவங்கள் வாயிலாகத்தான் (அப் 14:22). இறப்புகள் அல்லது இழப்புகள் காரணமாகப் புது விசுவாசிகளின் விசுவாசம் ஆடிவிடாதிருக்க ஜெபியுங்கள். உபத்திரவம் அவர்களை உட்கார

வைத்துவிடாது உந்தித்தள்ள வேண்டும். அனுப்பும் சபையின் விசுவாசிகள் பணிக்கள சபைகளில் விசுவாசிகளின் பிரச்னைகளைத் தங்கள் சொந்த பிரச்னைகள் போல் பாவித்து ஆவன செய்ய வேண்டும். அவர்கள் இப் பொழுது நமது சொந்த சகோதரரும் சகோதரிகளுமாயிருக்கிறார்களே! நமது ஜெபமே அவர்களைப் பின்மாற்றமடையாது பாதுகாக்கவேண்டும். எல்லாச் சபைகளையும் குறித்துப் பவுல் அனுதினமும் பாரங்கொண்டிருந் தான் (2 கொரி 11:28).

அந்தந்த சபைகளில் அங்குள்ள மக்களிடையே இருந்தே மூப்பர்கள் எழும்ப ஜெபியுங்கள் (தீத்து 1:5). இல்லாவிடில் மிஷனரிகள் அடுத்து புதிய பகுதிகளுக்குச் செல்லமுடியாமல், ஒரே இடத்தில் தரித்துவிட நேரிடும். புதிய சபையானது கனி கொடுக்கவேண்டும். ஆவியின் வரங்கள் செயல்பட வேண்டும். விசுவாசிகள் தனியாள் ஆத்துமாதாயகராய் மாறவேண்டும். பணிக்களத்தில் நிறுவப்பட்ட புதிய சபையே சீக்கிரம் அனுப்பும் சபையாகவும் மாறிவிட வேண்டும். அந்த விசுவாசிகள் கொடுக்கப் பழகவேண்டும். நாளடைவில் இவர்களும் பெயர்க் கிறிஸ்தவர்களாய் மாறிவிடாதபடி எப்பொழுதும் எரிந்து பிரகாசிக்க ஜெபியுங்கள்.

சரிபங்கு

"யுத்தத்திற்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு ரஸ்துக்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்குவீதம் கிடைக்கவேண்டும்; சரிபங்காகப் பங்கிடுவார்களாக" (1 சாமு 30:24). மிஷனரிப் பணிக்காக உத்தமமாய், ஊக்கமாய் ஜெபிப்பவர்களுக்கு முன் செல்லுவோர் போன்றே சரிபலன் கிடைக்கும்!

7

இக்காலத்துக்கு உபவாசம் தேவையா?

நவீனக் கிறிஸ்தவருக்கு உபவாசம் அவ்வளவு கவர்ச்சிகரமானதல்ல. உபவாசத்தைக் குறித்த புத்தகங்களும் பிரசங்கங்களும் குறைவு. "யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்" (யாத் 1:8). அவ்விதமே உபவாசத்தின் மேன்மையை அறியாத புதிய ரகக் கிறிஸ்தவர் தோன்றியுள்ளனர்.

உபவாசம் எனும் புனிதக் கலையில் தேறியிருந்த பலரைக் குறித்து வேதம் பேசுகிறது.

பத்துக் கட்டளையைப் பெறுமுன் ***மோசே*** நாற்பது நாள் இரவும் பகலும் புசியாமலும் குடியாமலும் மலையில் தரித்திருந்தான் (உபா 9:9-11). தேவ வசனத்திலிருந்து ஆச்சரியமான வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்ள உபவாசம் எவ்வளவாய் உதவியதென சரித்திரத்தில் பலர் சாட்சி பகர்ந்துள்ளனர். உபவாசமானது நமது ஆன்மீகக் கூறுகளை கூர்மையாக்கி தேவ சத்தத்தைத் தெளிவாகக் கேட்க வழிவகுக்கிறது.

தாவீது தனது ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதான். "தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர்; என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை" எனக் கதறினான் (சங் 69:5,10). மனந்திரும்பி

தேவனுக்குமுன் நம்மைத் தாழ்த்த உபவாசம் பேருதவி. நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுகிறோம். மனந்திரும்புதலை ஒருபோதும் நிறுத்தாதிருப்பதே கிறிஸ்தவ வாழ்வாம். தேவனை அறியுமளவு நம்மை அருவருப்போம். தேவனிடமிருந்து நீதிமான்கள் என ஏற்கனவே சாட்சிபெற்றிருந்த யோபு போன்ற பக்தர் பலரின் அனுபவம் அதுதான். "என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப் பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனம் வருந்துகிறேன்" என்றான் யோபு (யோபு 42:5,6).

மனந்திரும்புதலும் மன்றாட்டும் எழுப்புதலுக்கு இன்றியமையாதவை. இவ்விரண்டைவிட்டும் உபவாசத்தைப் பிரிக்கமுடியாது. "சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள், சிறப்பான ஆசரிப்பைக் கூறுங்கள். மக்களைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப் படுத்துங்கள்... அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங் கொண்டு தமது மக்கள் மீது இரங்குவார்" (யோவேல் 2:15-19). எழுப்புதல்களின் சரித்திரம் எங்கும் உபவாச ஜெபம் நிறைந்திருந்ததென அறிகிறோம்.

எஸ்றா விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு, அழுது, தேவாலயத் துக்குமுன் மக்களின் பாவங்களுக்காகத் தாழ விழுந்துகிடக்கையில் "அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக்கொண்டிருந் தான்" (எஸ்றா 10:1,6).

எருசலேமின் மதில்கள் தகர்க்கப்பட்டு, அதின் வாசல்கள் தகனிக்கப் பட்டுக் கிடப்பதைக் கேட்ட ***நெகேமியா*** "உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து" மன்றாடினான் (நெகே 1:3,4).

இன்றையத் திருச்சபையின் நிலை இதுவன்றோ ? தகர்க்கப்பட்ட மதில் கள், தகனிக்கப்பட்ட கதவுகள், தந்திரக்காரனின் தாராள நடமாட்டம்! "ஆண்டவா, காப்பாற்றும்" எனக் கதறும் எஸ்றாக்களும் நெகேமியாக்களும் உண்டோ ?

எரேமியா தீர்க்கதரிசனத்தைப் படித்துக்கொண்டிருக்கையில் சிறை யிருப்பிலிருந்து திரும்பும் காலத்தை ***தானியேல்*** புரிந்துகொண்டான். உடனே அவன் "உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட" தன்

முகத்தை ஆண்டவருக்கு நேராக்கினான் (தானி 9:1-3). "அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரம் முழுவதும் துக்கித்துக்கொண்டிருந்தேன். அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை, நான் பரிமள தைலம் பூசிக்கொள்ளவுமில்லை" என்றான் (தானி 10:2,3). அதைத் தொடர்ந்துதான் மகிமையான தரிசனம் கிடைத்தது.

நாமும் பெரிய ஆசீர்வாதங்களை விரும்புவோம்; ஆனால் சிறிய கிரயமும் செலுத்தமாட்டோம். எல்லாம் சும்மா கிடைத்துவிடவேண்டும். தேவ ஆசீர் வாதங்களைச் "சம்பாதிக்க" முடியாதென்பது உண்மைதான். ஆனால் வேதனையின்றி பிள்ளைப்பேறு எங்கே ? இப்படிக் கேள்விப்பட்டது யார் ? நமக்கு ஒரே அவசரம். எல்லாமே உடனே கிடைத்துவிடவேண்டும். "ஒரு நாட்டுக்கு ஒரே நாளில் பிள்ளைப்பேறு வருமோ ? ஓர் இனம் ஒருமிக்கப் பிறக்குமோ ?" (ஏசா 66:7,8). உபவாசமானது தேவாசீர்வாதம் பெற நம்மைச் சரிபண்ணுகிறது. விடாப்பிடியாய் இருக்கிறோமென அது தேவனுக்குச் சொல்லுகிறது.

எஸ்தருக்கும் அவள் தோழிகளுக்கும் இராஜாவிடம் மன்றாட உபவாசம் ஓர் ஆயத்தமாயிருந்தது. ஓர் "இராணியும்" அவள் தோழிகளும் மூன்று நாட்கள் உபவாசித்ததை எண்ணிப்பாருங்கள்! தேவன் அவளுக்கு அசாதாரண தைரியத்தைத் தந்தார். "நான் செத்தாலும் சாகிறேன்" என்றாள்! (எஸ் 4:16). விரத நாட்கள் விருந்து நாட்களைப் பிறப்பித்தன. அவள் கேட்டதற்கு இராஜா இணங்கினான். "யூதருக்கு வெளிச்சமும் மகிழ்ச்சியும் களிப்பும் கனமும் உண்டாயிற்று" (8:16). கண்ணீரில்லாது களிப்பெங்கே ? துவளாது துள்ளல் எங்கே ? (பிர 3:4) "துயரப்படுவோர் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவர்" என்றார் இயேசு (மத் 5:4).

மக்கள் மட்டுமல்ல, மிருகங்களும் உபவாசித்து தேவனை நோக்கிக் கதறும்படி ***நினிவே நகர்*** மன்னன் கட்டளை பிறப்பித்தான். அவர்கள் செய்ததைக் கண்ட தேவன் நியாயத்தீர்ப்பை அமுலாக்கவில்லை (யோனா 3:7-10). நமது நகர்கள் மீதும் பட்டயம் தொங்கிக் கொண்டிருக்கிறது. பாவம் தலைவிரித்துதாடுகிறது. நியாயத்தீர்ப்பு வாசலுக்கு வந்துவிட்டது. மனந்திரும்பி மண்டியிட்டு மன்றாடுவதொன்றே வழி. தேவன் இரட்சிக் கிறவர். வலது கைக்கும் இடது கைக்கும் வேறுபாடு தெரியாதோரை அழிப் பதா அவருக்குப் பிரியம் ? (4:11). ஆனால் அவரது நிபந்தனைகள் நிறை வேற்றப்படவேண்டும்."என் நாமம் தரித்த என் மக்கள் தங்களைத் தாழ்த் தினால்... அவர்கள் தேசத்துக்குச் சேமத்தை தருவேன்" (2 நாளா 7:14).

தங்கள் வாலிப நாட்களில் ஆன்மீக வாழ்வின் துவக்கக் காலத்தில், நன்கு உபவாசித்த பலர் நாளாவட்டத்தில், நடுவயதுப் பருவத்தில், இந்த ஆவிக்குரிய பயிற்சியில் சோர்ந்துவிடுகின்றனர். "அன்று போல் இன்று உபவாசிக்க முடியவில்லை" என்பர்! ஆனால் அன்னாள் என்ற ஒரு விதவை இருந்தாள். அவளுக்கு வயது 84தான்! அவள் "இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தாள்" (லூக் 2:36,37). உபவாசிக்க முடியாததற்கு சில உடல்நிலைக் காரணங்கள் இருக்கலாம். ஆனால் உபவாசமானது உணவைச் செரிக்கும் உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து, ஒரு வகையில் ஆராக்கியத்தைக் கூட்டுகிறது (ஏசா 58:8).

யோவானது சீடர் "அநேகந்தரம்" உபவாசித்து ஜெபித்து வருகிறார்கள் எனக் கூறப்பட்டது (லூக் 5:33). தங்கள் சொந்த முன்மாதிரியினால் மாணவருக்கும் வாலிபருக்கும் உபவாசத்தைக் கற்றுக்கொடுக்கும் இறையியல் பேராசிரியர்களும் கிறிஸ்தவத் தலைவர்களும் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்!

இந்த எடுத்துக்காட்டுகளெல்லாம் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவை என ஒருவேளை சொல்லிவிடலாம். ஆனால் மேலோட்டமாய்ப் புதிய ஏற்பாட்டைப் படித்தாலே பக்தர் தொடர்ந்து உபவாசத்தின் ஆசீர்வாதத்தை அனுபவித்து வந்தனர் என்பது தெளிவாகும். சொல்லப்போனால், உபவாசிக்காமல் அவர்களால் இருக்கமுடியவில்லை.

நண்பரே, உபவாசமானது ஏதோவொரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமுரியதல்ல. இது எக்காலத்துக்கும் பொருந்தும் நியமனம். எனவேதான் மலைப்பிரசங்கத்தில் இயேசு, "நீங்கள் உபவாசிக்கும்போது" என்றாரே ஒழிய "நீங்கள் உபவாசித்தால்" என்று கூறவில்லை (மத் 6:16). மலைப்பிரசங்கம் எக்காலத்துக் கிறிஸ்தவருக்கும் உரியது. தர்மம், ஜெபம் ஆகிய நீதியின் செயல்களோடு உபவாசத்தையும் இயேசு வரிசைப்படுத்தினார் (6:1,2,5,16). நாம் "நற்செயல்களால்" இரட்சிக்கப்படவில்லை; ஆனால் "நற்செயல்களுக்காய்" இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே 2:9,10).

பரிசேயர் தசமபாகம் செலுத்தினர். கிறிஸ்தவருக்கு அதுவே குறைந்த விகிதம் எனப் போதிக்கிறோம். அவர்கள் வாரத்தில் இருமுறை உபவாசிக்கின்றனர் (லூக் 18:12). நமக்கு எப்படி ? தசமபாகமோ, உபவாசமோ புதிய ஏற்பாட்டில் நேரடியான கட்டளையாகத் தரப்படவில்லை; ஆனாலும் அவற்றின் தேவையை யார் மறுக்கமுடியும் ? கடமையெல்லாம் கட்டாயமில்லை எனும் காலமிது. இன்னும் கொஞ்சக்காலத்தில் கட்டாயமில்லாததெல்லாம் கண்ணுக்குத் தெரியாமலே போய்விடும்! இப்போக்கைத் தடுத்து நிறுத்துவோம்!

எத்தனை முறை, எவ்வளவு காலம் உபவாசிக்கவேண்டும் என்றெல்லாம் சட்டதிட்டம் கிடையாது. வேதத்தின் எடுத்துக்காட்டுகளை ஆராய்ந்து பார்த்து நமது விருப்பத்துக்கும் தேவைக்கும் ஏற்றாற்போல் அதை மேற்கொள்ளுவது நமது கடமையாகும். சராசரியை மிஞ்சுவோம்!

தமது 40 மாத ஊழியத்தைத் துவங்குமுன் இயேசு 40 நாட்கள் உபவாசித்தார் (லூக் 4:1,2). அவருக்கு வந்ததாக எழுதப்பட்டுள்ள முதல் சோதனையே உணவையடுத்ததுதான் (வச 4). அப்பமில்லாது உபவாசமிருந்த வேளையில் வசனத்தை உண்டுகொண்டிருந்ததாகப் பிசாசுக்குப் பதிலளித்தார். முதல் மனிதன் முதல் சோதனையிலேயே — சாப்பிடுவதில் — விழுந்தான்! (ஆதி 3:11). இன்னும் அதில்தான் விழுந்துகொண்டேயிருக்கிறான்! பெருந்திண்டி என்றால் பாவமென்போம்; அதிகம் சாப்பிடுவதென்றால் பரவாயில்லையென்போம்; பெருந்திண்டிக்கு அர்த்தம் வேறேயோ?

ஏசா எதில் தவறினான் என்றறிவோம். சேஷ்டபுத்திர பாகத்தைவிட சேமியா பாயாசம்தான் அவனுக்கு முக்கியம் (ஆதி 25:29-34; எபி 12:16). இஸ்ரவேலருக்கு "மச்சங்களும், வெள்ளரிக்காய்களும், கொம்மட்டிக் காய்களும், கீரைகளும், வெங்காயங்களும், வெள்ளைப்பூண்டுகளுமே" எகிப்தை நினைப்பூட்டி எகிப்தை நாடத் தூண்டின (எண் 11:4,5). ஆனால் பக்தன் ***யோபுவின்*** சாட்சி: "அவரது வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப்பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்" (யோபு 23:12).

தன்னடக்கம் ஆவியின் கனிகளில் ஒன்று (கலா 5:23). கனியெதுவும் சும்மா வந்துவிடாது. சத்தும் ஜீவனும் ஆவியானவர் தருகிறார்; முயற்சியோ நமது. இச்சை அல்லது தேவையற்ற விருப்பத்தை அடக்க உபவாசம் உதவுகிறது. நாம் "எல்லாவற்றிலும்" இச்சையடக்கமாயிருக்க வேண்டும். அதில் உணவும் சேரும். இந்தக்கட்டுப்பாடு இல்லாவிடில் நமது ஓட்டத்திலும் சிலம்பத்திலும் நாம் தோல்வியடைவோம் (1 கொரி 9:24-27).

இயேசு அவர்களோடு சஞ்சரித்த காலத்தில் சீடர்கள் உபவாசமிருக்கவில்லை. ஆனாலும், "மணவாளன் அவர்களைவிட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்" என்று இயேசு அழுத்திச் சொன்னார் (லூக் 5:35). ஆம், நாமிருப்பது "அந்த நாட்கள்"தான். மணவாளன் பரலோகத்திற்கு எடுக்கப்பட்டுள்ளார்; சீக்கிரம் வரப்போகிறார். உபவாசித்து, ஜெபித்துக் காத்திருப்போம் (லூக் 21:34-36). பரத்திற்கு அவர் நம்மை அழைத்துச் சென்றபின் அங்கு எந்நாளும் விருந்துண்போம் (வெளி 19:9). பின்பு உபவாசம் கிடையாது!

ஆதிச்சபையினர் அடிக்கடி உபவாசித்தனர் என்பது தெளிவு. சிறப்பான காரியங்களுக்குச் சிறப்பாய் உபவாசித்தனர். முதல் வரிசை மிஷனரிகளைச் சபை எவ்விதம் அனுப்பிவைத்தது என்று பாருங்கள். "உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்" (அப் 13:3). அதற்கு முன்பும் உபவாசித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வித ஆயத்தச் சூழலில்தான் ஆவியானவரின் மிஷனரி அழைப்பு தொனித்தது (வச 2). அழைப்புக்கு முன்பும் பின்பும் உபவாசம்! என்னே மாதிரி! இன்றைய மிஷனரிப் பணியை உபவாச ஜெபமின்றி நிறைவேற்ற முடியுமோ?

சபையின் வாழ்விலும் பணியிலும் உபவாசத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த இன்னொரு எடுத்துக்காட்டு அப் 14:23; "அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்." சபையில் தலைவர்களை நாம் எவ்விதம் தெரிந்தெடுத்து நியமிக்கிறோம்? வெட்கம்! அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் அடித்தளங்களுக்குத் திரும்புவோம். ஊழியரும் மக்களும் உபவாச அனுபவத்தைத் திரும்பப்பெறுவோம். நமக்கு வேண்டியது மேலறையின் அக்கினி; இன்றிருப்பதோ சமையலறையின் புகைதான்! கமிட்டி மீட்டிங் போதும்; கதறல் மீட்டிங் வேண்டும். விருந்து போதும்; விரதம் வேண்டும்.

எங்கு பார்த்தாலும் பிசாசின் சக்திகள் அத்துமீறித் தாண்டவமாடுகின்றன. நமது வாலிபரைப் பிசாசு கட்டிவைத்திருக்கிறான். மதுவெறி, மாதுவெறி ஆகிய இரண்டுக்கும் இலட்சங்கள் பலியாகின்றன. சிறையானோரை நாம்தானே விடுவிக்க வேண்டும். துணிந்து இறங்கி மக்களைத் தூக்கிவரவேண்டும். ஆனால் "ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி" அது சாத்தியமில்லை (மத் 17:21). சத்துருவின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தும் ஜெப வல்லமையை உபவாசம் பன்மடங்காக்குகிறது.

மற்ற ஆன்மீகக் கடமைகளில் தேறினது போலவே உபவாசத்திலும் அப்போஸ்தலன் ***பவுல்*** மாதிரியானவன். அவனது புதுவாழ்வின் துவக்கமே மூன்று நாள் உபவாச ஜெபத்தில்தான் (அப் 9:9,11). "பின்பு மனம் வருந்துகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான" தேவனுக்கேற்ற துக்கம் அவனை அவ்விதம் ஆட்கொண்டிருந்தது (2 கொரி 7:10). இத்துக்கம் அவனது வயிற்றுக்கு உணவை மறுத்தது. அதற்குப் பின்னுள்ள தனது வாழ்வையும் ஊழியத்தையும்பற்றி எழுதுகையில் "அநேக முறை உபவாசங்களில் இருந்தேன்" என்கிறான் (2 கொரி 11:27). வயிறே

தெய்வமென்றிருப்பவர்களுக்காக அவன் புலம்பினான் (பிலி 3:18,19). அவர்களே சிலுவைக்குப் பகைவரென்றான். சிலுவையில் நாதனுக்குத் தண்ணீரும் மறுக்கப்பட்டதே!

உபவாசம் ஆன்மீகக் கூர்மையை அதிகரிக்கிறது என்றார் ஆஸ்வால்டு சேம்பர்ஸ். உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் என்றால் நியாயமான இன்பங் களையும் தள்ளிவைக்கலாம் எனப் பவுல் ஆலோசனை தருகிறான் (1 கொரி 7:5). எவ்வளவு முக்கியமானதொன்றை எவ்வளவு சாதாரணமாய்க் கருதிவிட்டோம் பாருங்கள்! உபவாசத்திற்குரிய இடத்தை நமது வாழ் வில் நாம் கொடுக்கையில் வானம் நமக்காகத் திறக்கும், சந்தேகமில்லை (ஏசா 58:8,9).

பிரசங்கம் முடியுமுன், அழைப்பு கொடுக்குமுன் சபையார் மீது ஆவி யானவர் இறங்கியதின் இரகசியம் என்ன தெரியுமா? ***கொர்நேலியு*** நன்கு ஆயத்தப்பட்டிருந்தான். உபவாசித்து ஜெபித்து அவனது இதயம் ஏற்கனவே அனலாக்கப்பட்டிருந்தது. பேதுரு பேசத் துவங்கியதும் அக்கினி பற்றி விட்டது! (அப் 10:30,44). சபையார் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் ஆராதனைக்கு வந்தால் பிரசங்கபீடத்திலிருந்து இழுஇழு என்று சிரமப்படவேண்டியதில்லை. துதியின் ஆவி தாராளமாய் வெடித்துக் கிளம்பும். சபையாரைத் தூங்காமல் பார்த்துக்கொள்ள வேடிக்கை காட்டவேண்டிய தேவையிராது. ஆவியின் வரங்கள் மகிமையாய் வெளிப்படும். அசாதார ணமானது அசாதாரணமாயிராது. வெளிப்பாடுகள் பெருகும். ஒவ்வொரு கூடுகையும் புதிதாகவும் மேலானதாகவுமிருக்கும்!

எத்தனை சபைகளில் ஒழுங்காக உபவாச ஜெபங்கள் நடைபெறு கின்றன? எத்தனைபேர் வருகிறார்கள்? உல்லாசமாய்ச் செல்ல விடுமுறை எடுக்கிறோம்; உபவாசம் செய்ய விடுமுறை எடுக்கக்கூடாதோ? ஒரு சபையின் பலத்தைக் கணிப்பது ஞாயிறு காலை ஆராதனைக்கு வருவோரின் எண்ணிக்கை அல்ல, வாராந்திர (உபவாச) ஜெபக்கூடுகைக்கு வருவோரின் எண்ணிக்கையே. அத்தி பூத்தாற்போல் மூன்று மணிநேர உபவாச ஜெபம் என்று அறிவிப்போம்; அதிலும் ஒரு காபி, ஒரு டீ. ஆண்டவரே, எங்கள்மீது இரக்கமாயிரும்!

ஆன்மீக ஒழுங்குகள் எதையும் தவறாகப் பயன்படுத்தலாம். உபவாசமும் விதிவிலக்கல்ல. மாய்மாலமாய் உபவாசிப்பதை இரு ஏற்பாடுகளிலும் வேதம் வெகுவாய்க் கண்டிக்கிறது. இதோ சில பகுதிகள்—

"நீங்கள் உபவாசிக்கும் நாளில் உங்கள் இச்சையின்படி நடந்து... வழக்குக்கும் வாதுக்கும்... உபவாசிக்கிறீர்கள்... அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும்... பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும்... உம் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் ?" (ஏசா 58:3-7). ஒடுக்கப்பட்டோரையும் தேவையிலுள்ளோரையும் கவனியாது, வெறுமனே தன்னலத்திற்காக மேற்கொள்ளப்படும் உபவாசத்தை தேவன் விரும்பார். பிறருக்குப் பயனில்லாத மார்க்கம் பயனில்லாதது. தேவனுக்குச் செலுத்தவேண்டிய கனமும், மனிதனுக்குச் செய்யவேண்டிய கடமையும் நாணயத்தின் இரு பக்கங்களாம்.

வெளிப்பகட்டான உபவாசத்தை இயேசு கண்டித்தார். "நீங்கள் உபவாசிக்கும்போது மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனிதர் காணும்படி தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தது" (மத் 6:16). ஜெபத்தின் இரகசியம் இரகசிய ஜெபமாம் (வச 5,6). அவ்விதமே உபவாசத்தின் இரகசியம் இரகசிய உபவாசமாம். அறையில் பார்க்கும் பிதா அம்பலத்தில் பலனளிப்பார்.

நீங்கள் ஒழுங்கும் கிரமமுமாய் உபவாசித்தால் இதோ உங்களுக்கோர் வாக்குத்தத்தம்: "நாலாம் மாதத்தின் உபவாசமும், ஐந்தாம் மாதத்தின் உபவாசமும், ஏழாம் மாதத்தின் உபவாசமும்... பத்தாம் மாதத்தின் உபவாசமும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் நல்ல பண்டிகைகளாகவும் மாறிப் போகும்" (சக 8:19).

8

இயேசுபோல் ஊழியம் செய்வது எப்படி?

"இதோ, என் தாசன்!"

பிதாவாகிய தேவன் தீர்க்கதரிசனங்களில் பலமுறை தமது குமாரனை இவ்விதம் சுட்டிக்காட்டுகிறார் (ஏசா 42:1; 52:13; சக 3:8). நமது ஊழியத்திற்கு இயேசுதான் பூரண மாதிரியாவார். அவர் போன்ற தாசராக அல்லது ஊழியராக நாம் இருக்கவேண்டுமென்பதே பிதாவின் சித்தம்.

அவரது குமாரனின் சாயலுக்கொப்பாக மாறவேண்டுமென்ற நன்மைக் கேதுவாகவே தேவன் எதையும் நம்மில் செய்கிறார் (ரோ 8:28,29). அந்தச் சாயல் போன்று நம்மை மறுரூபப்படுத்துவதே ஆவியானவரின் ஊழியமாகும் (2 கொரி 3:18). "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று சவாலிட்டான் அப்போஸ்தலன் (1 கொரி 11:1). "கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சிக்கு" ஒவ்வொரு விசுவாசியையும் கொண்டுவருவதே சபையின் ஐந்து ஊழியங்களின் நோக்கமாகும் (எபே 4:11-13).

ஊழியத்திற்கு இயேசு தரும் மாதிரிக்கு குறைவான எதிலும் நாம் திருப்தியடைந்துவிடக் கூடாது. "என்னைப் பின்பற்றுங்கள்" என்றார் இயேசு. அவரையே நாம் பின்பற்றும்போது தமது விருப்பத்திற்கேதுவான ஊழியராக தேவன் நம்மை வனைகிறார்.

நான்கு சுவிசேஷங்களையும் அடிக்கடி தியானிக்க வேண்டும். நமது தலைவரின் காலடிகளை அங்குதான் பார்க்கிறோம். அவர் வேலைக்காரன் அல்லது அடிமையின் ரூபமெடுத்து ஊழியம் செய்வது எப்படியெனக் காட்டிச் சென்றார். அதைக் காலமெல்லாம் தியானிக்கலாம். மாதிரி ஊழியனாகிய அவரிடம் காணப்பட்ட ஐந்து முக்கிய குணாதிசயங்களை இங்கு கவனிப்போம்.

1. தனிநபர் மீது அவரது அன்பு

அவரது காலத்தில் இயேசுவைப் போல் அதிக வேலைப்பளு இருந்தவர் எவருமில்லை எனலாம். வேலை அதிகம், வேளையோ கொஞ்சம். துரிதமாக அவர் புகழ் எங்கும் பரவ, திரள்கள் அவரைத் தேடிவந்தனர். ஆனாலும் தனி நபருக்கான அவரது அன்பு என்றும் குன்றவில்லை. ஒவ்வொரு மனிதனின் முக்கியத்துவத்தையும் அவர் எப்பொழுதும் மனதில் கொண்டிருந்தார்.

எடுத்துக்காட்டாக, யோவான் சுவிசேஷத்தைப் பாருங்கள். முதல் அத்தியாயத்தில் பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல் ஆகிய நபர்களோடு தனித் தொடர்பு கொள்கிறார். நாத்தான்வேலுக்குத் தனி வாக்குகளும் தருகிறார். இரண்டாம் அத்தியாயத்தில் ஒரு மணவீட்டில் வேலைக்காரரோடு நேரம் செலவழிக்கிறார். ஓய்வெடுக்க வேண்டிய இரவு வேளையாயிருந்தாலும் நிக்கொதேமுவோடு அவ்வளவு பொறுமையாக பேசிக்கொண்டிருப்பதை அடுத்த அத்தியாயம் சித்தரிக்கிறது. அன்றொரு நாள் அப்பமில்லை, பயணக் களைப்பு, என்றாலும் சமாரியப் பெண்ணின் ஆத்துமாவை ஆதாயப் படுத்திக்கொண்டிருக்கிறார் நான்காம் அத்தியாயத்தில். அடுத்த அத்தியாயத்தில் உதவியற்ற திமிர்வாதக்காரன் ஒருவனுக்கு உதவிக் கொண்டிருக்கிறார். மீதி அத்தியாயங்களை நீங்களே படித்துப் பாருங்கள். சிலுவையில் தொங்குகையிலும் பரதீசுக்கு ஆள் சேர்த்துக்கொண்டிருந்தார்!

தனிநபரின் மதிப்பை வலியுறுத்த இயேசு அடுத்தடுத்து மூன்று உவமைகளைத் தந்தார் (லூக் 15). நூறில் ஓர் ஆடு தொலைந்து போகிறது. ஒன்றுதானே போய்விட்டது என்று மேய்ப்பன் உட்கார்ந்துவிடவில்லை. தொலைந்ததைக் கண்டுபிடித்ததும் மற்றவர்களையும் தன்னோடு மகிழ்ந்திருக்க "தொந்தரவு" செய்கிறான் என்றே சொல்லவேண்டும். பெண்ணொருத்தி பத்து வெள்ளிக்காசுகளில் ஒன்றைத் தொலைக்கிறாள். கண்டெடுத்தவுடன் சிநேகிதிகள் அத்தனைபேரையும் தன்னுடன் மகிழ அழைக்கிறாள். தகப்பனொருவனின் இளைய மகன் எங்கோ சென்று

விடுகிறான். அவன் திரும்பி வந்ததும் என்ன ஆனந்தம்! மூத்தவன் உள்ளே வர மறுத்தாலும் கொண்டாட்டம் நின்றபாடில்லை! தொலைந்துபோன ஒவ்வொரு நபரின் அருமையும் எவ்வளவு தெளிவாகிறது!

மேய்ப்பன் ஒரு சதவீதம் இழந்தான்; அந்தப் பெண் பத்து சதவீதம் இழந்தாள்; தகப்பன் ஐம்பது சதவீதம் இழந்தான். சதவீதம் கணக்கில்லை. ஒவ்வொருவரும் முக்கியம். பத்திரமாயிருக்கும் 99 ஆடுகளைக் கவனிப்பது தொலைந்த ஒன்றைத் தேடிச் செல்லும் நமது பணியை நிறுத்தக்கூடாது. தனி நபர்களின் முக்கியத்துவத்தையும் நாம் சரிவர அறியும்வரை ஊழியத்தில் அதிகம் சாதிக்கமுடியாது. ஒருபாவி மனந்திரும்பும் செய்தி கேட்டதும் தூதர் குதிக்கின்றனர்! நாம் அவ்விதம் களிக்கிறோமா?

எரிகோ வழியாய் இயேசு செல்கையில் பெருங்கூட்டம் அவரை நெருக்கிச் சென்றது (லூக் 19). மீட்பைத் தேடிக்கொண்டிருந்த ஒருவன் அந்நகரிலிருந்தான். அவனுக்கு சம்பத்து இருந்தது, சமாதானம் இல்லை. வரி வசூலிப்பவன் என்ற அந்தஸ்தையும் மறந்து இயேசுவைப் பார்க்க மரத்தில் ஏறினான். அவன் அவரைப் பார்க்குமுன் அவர் அவனைப் பார்த்தார். அவன் அவரைப் பார்க்கத்தான் விரும்பினான்; அவரோ அவனோடு தங்க விரும்பினார். எதிர்பாராதது! எவ்வளவோ வேலையிருந்த சமயத்திலும் சகேயு என்ற ஒரு மனிதனுக்காக நேரம் செலவழித்த இயேசுவின் அன்பைக் கவனியுங்கள்.

ஊழியன் என்றால் யார்? இழந்துபோனதைத் தேடிச் செல்லுகிறவன்! (லூக் 19:10).

இந்தியா தேடுவோர் நிறைந்த நாடு. தொலைத்தவர் தேவன், தொலைந்தவன் மனிதன். தொலைத்தவர்தான் தொலைந்ததைத் தேடிச் செல்ல வேண்டும். நமது மதங்களோ தொலைத்தவரைத் தேடிச்செல்ல தொலைந்தவரைத் துரத்துகின்றன. விளைவு? முப்பத்துமுக்கோடி தெய்வங்கள்! ஆனால் தேவன் மனிதனைத் தேடிவந்தார் என்பதே வேத உபதேசம். இயேசுவே தேடும் இரட்சகர்.

சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் தேடுவோர் உண்டு. தேவன் தம்மை ஏற்கனவே வெளிப்படுத்திவிட்டாரென அறியாது மனிதன் தேடிக் கொண்டே இருக்கிறான். இந்த நல்ல செய்தியை நாம் சந்திக்கும் எவருக்கும் சொல்லுவோம். சமூக அந்தஸ்து எதுவாயினும் மனிதனின் தேவை ஒன்றேதான். பிலிப்பி நகரிலிருந்த அந்தச் சிறைச்சாலை அதிகாரியின் பணி சிறைவாசிகளைத் திருத்துவதுதான். ஆனால் அவனே இன்னும்

திருந்தவில்லை. "இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?" எனக் கதறி அவன் சிறைவாசகப் பிரசங்கிகள் காலில் விழுந்தான் (அப் 16:30). அதே அத்தியாயத்தில் வியாபாரியான ஒரு பெண்ணைச் சந்திக்கிறோம். ஆற்றோரத்தில் உட்கார்ந்துகொண்டு திறந்தவெளிப் பிரசங்கமொன்றைக் கேட்டு மனந்திரும்பினாள். ஐரோப்பாவின் முதல் விசுவாசி அவள்தான், தெரியுமா?

ஒவ்வொரு நபரும் முக்கியமானவர் எனக் கற்றுக்கொள்ளுவோம். இயேசு போன்ற ஊழியனாக மாற இதுவே முதற்படி.

2. சந்திக்கப்படாதோர் மீது அவரது கரிசனை

"இந்தத் தொழுவத்தில் உள்ளவைகள் அல்லாமல் **வேறே ஆடுகளும்** எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்" (யோ 10:16).

"வேறே ஆடுகளைக்" குறித்த கரிசனையே இயேசுவை எப்பொழுதும் உந்தித்தள்ளிக்கொண்டிருந்தது. ஒரே இடத்தில் தரித்துவிட அவர் மறுத்தார். ஓரிடத்தில் ஊழியம் ஆசீர்வாதமாயிருந்தாலும் தொலைவிடங்களையே அவரது கண்கள் நோக்கியிருந்தன. அற்புதங்களைக் கண்ட கப்பர்நகூம் மக்கள், இயேசு தங்களைவிட்டுப் போகாதபடி நிறுத்தப்பார்த்தனர். அவரோ, "மற்ற **ஊர்களிலும்** பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன்" என்று கிளம்பிவிட்டார்! (லூக் 4:42,43).

சீடர்கள் அப்பம் வாங்கச் சென்றிருந்தபோது நித்திய ஜீவன் குறித்து இயேசு சமாரியப்பெண்ணுடன் உரையாடிக்கொண்டிருந்தார். அவர் வார்த்தையைக் கேட்க விறுவிறுப்பாய் தன் ஊரிலிருந்து ஒரு கூட்டத்தை அவள் திரட்டிவந்தாள். தூரத்தில் அக்கூட்டம் வந்துகொண்டிருக்கையில், இயேசு தமது சீடரை நோக்கி, "இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்" என்றார் (யோ 4:35). அங்கு தங்கியிருந்த இரு நாட்களில் இயேசுவின் குழுவினருக்கு நல்ல அறுவடை (வச 39-41).

நமக்கு தூரத்தைப் பார்க்கத் தெரியவேண்டும். அறிவித்தோருக்கே அறிவித்துக்கொண்டிருக்கக் கூடாது. எண்ணற்றோர் இன்னும் இருளில் தவிக்கின்றனர். நற்செய்தி கேட்கும் முதல் வாய்ப்பைக் காத்து நிற்கின்றனர்.

பாலகன் இயேசுவைக் கரத்திலேந்திய சிமியோன் இவ்விதம் பாடினான்: "புறவினத்தாருக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும். தேவரீர் **சகல மக்க**

ளுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டன!" (லூக் 2:31,32). மேசியாவைக் குறித்த வாசகம் ஒன்றை அப்போஸ்தலர் எவ்விதம் தமதாக்கிக் கொண்டனர் என்று கவனியுங்கள்: "நீர் பூமியின் கடைசிவரை இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை இனங்களுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய் கிறோம்" (அப் 13:47; ஏசா 49:6).

அறியாதோரே அதிகம். அன்னாருக்குச் சுவிசேஷம் எட்டவில்லை, வாய்ப்பு கிட்டவில்லை. கரிசனை கொள்வோர் யார்?

பவுல் ஓர் இயேசு ரசிகன்! அவரது கால் தடத்தை அப்படியே பின்பற்றினான். சந்திக்கப்படாதோர்மீது இயேசுவுக்கிருந்த கரிசனையைத் தனதாக்கினான். "கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க நாடுகிறேன்" என்று எழுதினான் (ரோ 15:20,21).

இந்தியரில் எண்பது சதவீதத்தினர் கிராம மக்கள். நாட்டின் 6,00,000 கிராமங்கள் பெரும்பாலானவற்றில் ஒரு கிறிஸ்தவனும் கிடையாது. எத்த னையோ வட்டங்களிலும் மாவட்டங்களிலும் ஒரு சபைகூட இல்லாதிருக் கும்போது, ஏற்கனவே ஏழுசபை இருக்கும் ஊரில் நமது சபையொன்றையும் துவங்குவது நியாயமா? வசனத்திற்கு ஒவ்வாத, கிறிஸ்துவின் பாணிக்கு மாறான, இவ்விதச் செயல்கள் சரியாகுமா? இயேசுவும் பவுலும் இன்று இந்தியா வந்தால் எங்கே பிரசங்கித்துக்கொண்டிருப்பார்கள்? சென்னை யிலுள்ள புரசவாக்கத்திலா, ஒரிசாவிலுள்ள புல்பானியிலா? பாளையங் கோட்டையிலா, பதான்கோட்டிலா?

"உங்களுக்கு இயேசுவைத் தெரியுமா?" என்று மிஷனரி கேட்கிறான். "அவர் இங்கு இல்லை, அடுத்த ஊரில் விசாரியுங்கள்" என்கிறான் ஆதி வாசி! சகோதரரே, சகோதரிகளே, கிராமத் திரள்களின் இவ்வித அறியாமைக்குக் காரணம் யார்? "பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?" (ரோ 10:14,15). போவோம்! அனுப்புவோம்!

வெளிப்படுத்துதல் புத்தகத்திற்கு விளக்கவுரை நூல் மாதமொன்று தவறாது வெளிவருகின்றது. ஆனால் ஏழாம் அத்தியாயம் ஒன்பதாம் வசனத்திற்குப் போதுமான நடைமுறை விளக்கம் இல்லை. எல்லா இனங் களிலும் மொழிகளிலும் இருந்து ஒருவரும் எண்ணக்கூடாத திரள்கூட்டம்

அன்று ஆட்டுக்குட்டியானவரைத் தொழுதுகொள்ள வேண்டுமானால் நாம் இன்று என்ன செய்ய வேண்டும்? வேதத்தின் இறுதிப்புத்தகத்திலுள்ள இவ்வசனத்தைக் கருத்தாய்க் கவனித்து ஆவன செய்யவேண்டும். இன்னும் 2000 மொழிகளில் வேதம் மொழிபெயர்க்கப்படவில்லை என்பதை நினைவிற்கொள்வோம்.

மிஷனரிப்பணியை இயேசு தொடங்கிவைத்தார். ஆதிச்சபை அவரது காலடிகளில் அதை உத்தமமாய்த் தொடர்ந்தது (அப் 1:1,2). சந்திக்கப்படாத ஒவ்வொருவரையும் சந்தித்துவிடும் இப்புனிதப்பணியை அதே பாணியில் நாமும் தொடருவோமா?

3. அவரது தியாக உணர்வு

ஊழியம் என்பதும் தியாகம் என்பதும் இயேசுவுக்கு ஒன்றேதான். ஒன்றில்லாமல் அடுத்ததை அவர் நினைக்கமுடியவில்லை. நாம் எப்படி?

"நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறான்" (யோ 10:11). ஆடுகளைப் பாதுகாக்க வேறு வழியே இல்லை.

கிறிஸ்தவ ஊழியமென்றால் அது கட்டாயக் கடமையல்ல, ஆனால் தியாகவுணர்வோடு செய்யப்படும் அன்புத் தொண்டாகும். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் உயிரைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோ 15:13). கிரயம் செலுத்தாத ஊழியம் எதையும் சாதிக்காது.

தேவனுக்கு ஆனந்தத்தையும் மக்களுக்கு ஆசீர்வாதத்தையும் அருளும் ஊழியத்தில் குறைந்தது மூன்று காரியங்களை நாம் தியாகம் செய்ய வேண்டும்.

❒ நமது **அந்தஸ்து**. "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்... தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்தார்" (பிலி 2:6,7). மக்களோடு நம்மை அடையாளப்படுத்திக்கொள்ள நமது பட்டம், பதவி ஆகியவற்றிலிருந்து இறங்கி வரும்வரை அவர்களுக்கு நாம் ஒரு நன்மையும் செய்யமுடியாது. பாவமறியாதவர் பாவிகளின் சிநேகிதரானார். நம் ஒவ்வொருவருக்கும் இந்தப் பட்டப்பெயர் கிடைக்கவேண்டும்.

மேடைப் பிரசங்கம் கைப்பிரதி விநியோகிப்பதைவிட உயர்ந்ததல்ல. புத்தகங்கள் எழுதுவது அவைகளை வீடு வீடாகச் சென்று விற்பதைவிட

மேலானதல்ல. மிஷனரி இயக்கமொன்றிற்குத் தலைவராயிருப்பது காடு மலைகளில் மிஷனரியாகப் பணிபுரிவதைவிட உன்னதமானதல்ல. ஒரு வனது தலைமீது கைகளை வைப்பது அவனது பாதங்களைக் கழுவு வதைவிடச் சிறந்ததல்ல. எது முக்கியமெனச் சரிவர அறியமுடியாது இன்று கிறிஸ்தவம் தவிக்கிறது. ஊழியத்தில் எந்த வகையும் மதிப்பு குறைந்ததல்ல. பாவம் செய்ய மட்டுமே வெட்கப்படவேண்டும்.

❒ அடுத்து, நமது **சொகுசு**. அன்று இயேசுவுக்கு ஒரே பசி தாகம். அவரோ ஆத்துமாதாயம் செய்துகொண்டிருந்தார். ஆகாரப் பசியைவிட ஆத்து மாக்களுக்கான பசியே அவருக்கதிகம். தமது சீடரைப் பார்த்து, "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஓர் ஆகாரம் எனக்குண்டு... என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படிச் செய்து அவரது வேலையை முடிப்பதே எனது ஆகாரம்" என்றார் (யோ 4:32-34).

நிர்விசார சீயோனியருக்கு ஐயோ என்று தீர்க்கன் ஆமோஸ் கதறு கிறான். அவர்கள் தந்தக் கட்டில்களில் படுத்துக்கொள்ளுகிறார்கள், மஞ்சங்களின் மேல் சவுக்கியமாய்ச் சயனிக்கிறார்கள், ஆட்டுக்குட்டி களையும் கன்றுக்குட்டிகளையும் தின்கிறார்கள், தம்புரை வாசித்துப் பாடுகிறார்கள், தாவீதைப் போல் கீதவாத்தியங்களை உண்டுபண்ணு கிறார்கள், ஆனாலும்! "ஆனாலும் யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலைப்படாமற்போகிறார்கள்" (ஆமோ 6:1,4-6). அடிமைத்தனத்திலிருப் போரையே யோசேப்பு குறிக்கிறான். இம்மக்களுக்காக தேவ அன்பினால் நெருக்கி ஏவப்பட்டு நமது சொகுசு நாற்காலிகளை விட்டுக் கீழிறங்கி வருவோம். இவர்களை மீட்டிடுவோம்.

நிமிடத்துக்கு 83 பேர் மரிக்கையில், அவர்களில் பெரும்பாலானோர் நரகத்திற்குள் விரைகையில், நியாயமான சில இன்பங்களையும் விடக் கேட்பது அநியாயமல்ல. "சகோதரரே, இனிவரும் காலம் குறுகினபடியால்,... சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும்... இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்கவேண்டும்" (1 கொரி 7:29-31).

❒ மூன்றாவது, நமது **செல்வம்**. செல்வந்தராகிய இயேசு நம்மைச் செல்வந் தராக்க ஏழ்மையானார். தரித்திரருக்குச் சுவிசேஷம் போய்ச் சேரும்படி நாமும் நமது பணப்பைகளைத் தாராளமாய்த் திறப்போம்.

விதவையின் காசையும் மரியாளின் தைலத்தையும் இயேசு அவ்வளவாய்ப் பாராட்டுவானேன் ? அதில் தியாகம் இருந்தது. எவ்வளவு கொடுக்கிறோம்

என்று நாம் பார்க்கிறோம்; எவ்வளவு வைத்துக்கொள்ளுகிறோமென்று கிறிஸ்து பார்க்கிறார் என்றார் பக்தன் ஆன்ட்ரூ முரே.

சரித்திரம் காணாத தியாகச் சின்னம்தான் சிலுவை என்பது. அதைக் கழுத்தில் போட்டுக்கொள்ளுகிறோம், சட்டையில் மாட்டிக்கொள்ளுகிறோம். அதின் பொருளை மறந்துவிட வேண்டாம்.

4. ஆவியானவர்மீது அவரது சார்பு

வெறும் புயபலத்தினாலும், திறமைகளினாலுமே பெரும்பாலும் ஊழியக் காரியங்கள் நடத்தப்படும் இந்நாட்களில் இயேசு எப்படி ஊழியம் செய்தா ரென்று இன்னொரு முறை உற்றுக் கவனிப்பது நலம்.

மருத்துவனும், சரித்திராசிரியனுமான லூக்கா இயேசுவின் ஊழியத்தின் இரகசியத்தை அழகாய் வருணிக்கிறான்: "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்... அவர் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்தார்" (அப் 10:38). இயேசு தமது வல்லமை, பலம் அத்தனையையும் உரிந்து வைத்து விட்டு ஆவியின் வல்லமையைத் தரித்துக்கொண்டு ஊழியம் செய்தார். இப்படி நமக்கொரு மாதிரி பின்வைத்தார்.

"பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என் ஆவியி னாலேயே ஆகும்" (சக 4:6). எவ்வளவு சீக்கிரம் இச்சத்தியத்தைக் கற்றுக்கொள்ளுகிறோமோ அவ்வளவு மேல்.

ஆவியானவர் மீதே கிறிஸ்து முழுவதும் சார்ந்திருந்தார் என்பதற்கு ஜெபத்திற்கு அவர் கொடுத்த முதலிடமே சாட்சி. 40 மாத ஊழியத்திற்கு முன் 40 நாள் உபவாசித்து ஜெபித்தார். "ஆவியின் பலத்தோடு" வனாந்தரத் திலிருந்து வெளிவந்தார் (லூக் 4:14). இன்றோ இறையியல் பட்டமானது வனாந்தர அனுபவத்திற்குப் பதிலாகிவிட்டது. நாம் அதிகம் சாதிக்காதிருப் பதில் ஆச்சரியமில்லை. அவர் புகழ் எங்கும் பரவி பெருங்கூட்டம் அவரைக் கேட்கவும், அவரால் குணமடையவும் நெருக்கி நின்றபோதும், "அவரோ வனாந்தரத்தில் தனித்துப் போய், ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்" (லூக் 5:15,16). மின்கலத்தில் விசை குறைந்துவிட்டால் தள்ளுவண்டிதான். ஆண்டவரோடு அனுதினமும் ஒருமணிநேரம்கூட செலவழிக்காமல் எப்படி?

இயேசு தமது ஊழியத்தை ஜெபத்தில் துவங்கினார்; ஜெபத்தால் நடத்தினார்; ஜெபத்தில் முடித்தார் (கெத்செமனேயிலும் கொல்கொதாவிலும்);

இன்றும் ஜெபித்துக் கொண்டிருக்கிறார் (எபி 7:25). வேறு வகையில் ஊழியம் செய்ய நாம் துணிகிறோமோ ?

நமது இயலாமையை ஒத்துக்கொள்வதே ஜெபமாம். *நீர் வேண்டும் நாதா... உமதாவியால்தான் ஆகணும் தேவா...* இதுதான் ஜெபமென்பது. போது மென்றிருக்கிறவன் ஜெபிப்பதில்லை; திருப்தியடைந்திருக்கிறவன் ஜெபிக்க மாட்டான்; சுய நீதிக்காரன் ஜெபிக்க முடியாது என்றார் லியோனார்டு ரேவன்ஹில்.

5. அவரது துரித மனப்பான்மை

“பகற்காலம் இருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவரின் செயல் களைச் செய்யவேண்டும்; ஒருவனும் செயலாற்றக்கூடாத இராக்காலம் வருகிறது” (யோ 9:4).

இயேசுவின் இந்த ஆவி நம்மைப் பற்றிப் பிடிக்கவேண்டும். வீணடிக்க அவருக்கு நேரமில்லை. பொது ஊழியத்திற்கு அவருக்கிருந்தது மூன்றரை ஆண்டுகள்தான். ஆனாலும் மரிக்கும்போது பதறவில்லை. மாறாக, “முடிந்தது” என்று கெம்பீரமாய் முழங்கினார்! என்னே மாதிரி!

ஓய்வு தேவை, ஆனால் ஒய்ந்துவிடக்கூடாது. நாள்தோறும் இலட்சங்கள் மரிக்கின்றன. வெள்ளங்களும், பூமியதிர்ச்சிகளும் மக்களை வாரிக் கொண்டு போகின்றன. கதவடைக்கும் நாடுகள் சில; திறக்கும் நாடுகளோ பல. இதுவே வாய்ப்பு நிறைந்த நாள். அரிக்கட்டுகளைச் சேர்க்க அறுவடையின் ஆண்டவர் சபைக்கு அருளும் கடைசித் தருணமாயிருக்கலாம் இது. பிந்தினால் மணிகள் சிந்திப்போகும். துரிதப்படுவோம்!

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்பதே கிறிஸ்துவின் வருகை தாமதிப்பதற்குக் காரணமாகும் (2 பேது 3:9). “இந்த சுவிசேஷம் உலகமெங்குமுள்ள சகல இனத்தாருக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்” என்றார் இயேசு (மத் 24:14).

இன்று செய்யக்கூடியதை நாளைக்குத் தள்ளிப்போடவேண்டாம். நாளை நமதல்ல. நாளை நடப்பதை நாமறியோம் (நீதி 27:1). “இதோ, **இப்பொழுதே** அனுக்கிரக காலம்; **இப்பொழுதே** இரட்சணிய நாள்” (2 கொரி 6:2). எங்கும் நற்செய்தி அறிவிக்க! எங்கும் சபை கட்ட! கர்த்தருக்காக மக்களை ஆயத்தப்படுத்த!

கப்பர்நகூமில் ஆண்டவருக்கு நல்ல வரவேற்பு. நாசரேத்திலோ எதிர்ப்பு. அதைப்பற்றி அவருக்கு அக்கறையில்லை. அவர் போய்க்கொண்டே யிருந்தார், பிரசங்கித்துக்கொண்டேயிருந்தார், இறையரசைப் பரப்பிக் கொண்டேயிருந்தார். நாமும் அப்படியே செய்யவேண்டும். "ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பங்கிட்டுக்கொடு; பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது... காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே" (பிர 11:2,6).

கடைசி மனிதன் சந்திக்கப்படும்வரை நிறுத்தாது நமது பணியைத் தொடருவோம். உலகின் எல்லையெங்கும் செல்லும்வரை, அல்லது நமது வாழ்வின் முடிவுக்கு வரும்வரை, எது முதலில் வருகிறதோ அதுவரை, நமது ஊழியத்தை முடிக்கக்கூடாது! எல்லாம் முடிந்தபின்தான் இயேசு "உட்கார்ந்தார்!" நமது பணியை முடிக்குமுன் நாம் உட்காரலாமோ?

9

அற்புதங்கள் இன்று அவசியந்தானா?

"ஒருவனும் தன்னுடன் கடவுள் இராவிட்டால் நீர் செய்கிற இவ்வித அற்புதங்களைச் செய்யமாட்டான்" (யோ 3:2). இயேசுவிடம் நிக்கொதேமு மொழிந்த இச்சொற்கள் தொன்றுதொட்ட எபிரெய எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றன.

ஆம், யேகோவா அற்புதங்களின் தேவன்தான்! இஸ்ரவேலர் ஒரு நாடாக உருவமைந்ததே அற்புத அடையாளங்கள் நிறைந்த ஒரு சூழலில்தான். இறையக்கள் எகிப்திலும், செங்கடலிலும், வனாந்தரத்திலும் அவரது ஓங்கிய கரத்தின் அற்புதங்களைக் கண்டனர். அவர்கள் தேவனை விட்டுத் தூரம் போனபோதோ அற்புதங்கள் அரிதாயின. ஒருமுறை கிதியோன் தனக்குத் தரிசனமான தூதனானவரிடம் இப்படிக் கேட்டான்: "கர்த்தர் எங்களோடு இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவரது அற்புதங்களெல்லாம் எங்கே?" (நியா 6:13).

தேவனைப் பொறுத்தவரை அவர் மாறவேயில்லை. அவரது வல்லமை குறையவேயில்லை. ஆனால், அற்புதங்களின் காலம் கடந்துவிட்டதென வாதாடுவோர் உண்டு. அவர்களுக்கு அப்படித்தான்! ஒருவனுடைய விசுவாசத்தின்படியே அவனுக்கு ஆகும்! விசுவாசிக்கிறவர்களோ தேவ மகிமையைக் காண்பர் (யோ 11:40).

தேவ மகிமை வெளிப்பட அற்புதங்கள் ஓர் ஏதுவாகும். "இயேசு இந்த முதலாம் அற்புதத்தைச் செய்து தமது மகிமையை வெளிப்படுத்தினார்" என்று யோவான் கானாவூரில் நடந்ததை விமர்சிக்கிறான் (யோ 2:11). ஆசியாவில் பவுலின் மூலம் நடந்த அற்புதங்களால் "இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது" (அப் 19:17).

இயேசுவின் பெயரே "அற்புதமானவர்" என்பதுதானே ? (ஏசா 9:6). அவரது ஊழியத்தில் அற்புதத்திற்குக் குறைவேயில்லை. இயேசுதான் மேசியாவா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமாவென்ற யோவானின் விசாரிப்புக்கு இயேசு தந்த பதில் இதோ: "குருடர் பார்வை யடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள்..." (மத் 11:5). அற்புத அடை யாளங்களை நடப்பித்து இயேசுவைத் தேவன் உங்களுக்கு வெளிப்படுத் தினார் என்று பெந்தெகொஸ்தேயன்று பேதுரு முழங்கினான் (அப் 2:22).

"இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி 13:8). சபைதான் அவரது உடல். நாம்தான் சபை. அப்படியானால் நாம்தான் அவரது பாதங்கள், அவரது கரங்கள். இரண்டாயிரம் ஆண்டு கட்குமுன் அவர் செய்ததை இன்றும் நம்மூலம் செய்ய வல்லவர், செய்ய விரும்புகிறார். "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற செயல்களைத் தானும் செய்வான், இவைகளிலும் பெரிய செயல்களையும் செய்வான்" என்றாரல்லவோ இயேசு ? (யோ 14:12). விசுவாசமே இரகசியம்.

உயிருள்ள விசுவாசத்தை சபை இழந்தால் அது ஓர் இயக்கமாயிராமல் வெறும் சிற்பமாய் மாறிவிடுகிறது. மகிழ்ச்சியிழந்து மந்தமாகிறது. ஆராதனைகளெல்லாம் பிரமாதம், ஆனால் வாசலில் கிடக்கும் சப்பாணிக்கு ஓர் உதவியும் செய்யமுடியாது (அப் 3:2). அலங்கார வாசல்; அலங்கோலக் காட்சி! ஆனால் பெந்தெகொஸ்தே மழையில் அப்பொழுதுதான் குளித்து வந்த இரு மனிதர் நாற்பதாண்டின் சோகக்கதையையே மாற்றிவிட்டனர்!

உன்னைவிட மேல் எனும் **பரிசேயரின்** மனப்பான்மை கூடாதென அடிக்கடி சபையை எச்சரிக்கிறோம் (யோ 9:34). ஆனால் சபையில் அற்புதங்களையும் இயற்கைக்கப்பாற்பட்ட எதையும் நம்பாத **சதுசேயர்** கூட்டமும் ஏராளம் (அப் 23:7,8). பரிசுத்தவான்களுக்கு நடபடிகள் தரும் பொதுவான பெயர் "விசுவாசிகள்" என்பதாம் (அப் 5:14). அதாவது, "தேவ வசனம்" "தேவ வல்லமை" ஆகிய இரண்டையும் விசுவாசிப்பவர்கள். இதில் ஒன்றை விட்டாலும் நாம் அரை விசுவாசிகள்தான்! (மத் 22:23-29).

நமது தேவன் யார் என நாம் மறுபடி அறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் தங்கள் தேவனை அறிந்தோர்தான் "திடன்கொண்டு, அதற் கேற்றபடி செய்வார்கள்" (தானி 11:32). "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோ 9:10). "நமது தேவனைப்போல் பெரிய தேவன் யார்? அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே" (சங் 77:13,14). "ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவர்" (சங் 136:4).

"தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; தேவனுக் காகப் பெரிய காரியங்களை முயற்சியுங்கள்" என்றார் வில்லியம் கேரி. நாம் எதிர்பார்ப்போம், ஆனால் முயற்சியோம்! தேவனுக்கேற்ற செயல் களைச் செய்ய என்ன செய்யவேண்டுமென சீடர் ஆண்டவரிடம் வினவினர். "விசுவாசியுங்கள்" என்று பதில் தந்தார்.

தேவனால் எல்லாம் கூடும் (லூக் 1:37). "Imp" என்றால் பிசாசு என்று பொருள். Possible என்பதை Imp-ossible என மாற்றுவதே அவன்தான்! அவன் பொய்யன். தேவனால் முடியுமா என்று கேட்கவே வேண்டாம்; தேவனால் முடியும் என்று கெம்பீரியுங்கள்.

"தேவனானவர் சபையில் முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டா வது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங் களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகை களையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்" (1 கொரி 12:28). "போதகர்கள்," "ஊழியங்கள்," "ஆளுகைகள்" ஆகியவைகளைக் குறித்துத் தாராளமாய்ப் பேசுகிறோம். ஆனால் ஏன் "அற்புதங்கள்," "குணமாக்கும் வரங்கள்" குறித்தெல்லாம் அவ்வளவு பேசுவதில்லை? வேதத்திற்கு இவ்விதப் பட்சபாதம் காட்டலாமோ?

அப்படியே, 1 கொரி 12:7-10இலுள்ள ஆவியின் வரங்களில் "ஞானம்," "அறிவு," "விசுவாசம்" ஆகியவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு மற்ற வற்றை எறிந்துவிடுவதெப்படி? இப்படித்தான் நாம் தேவனது "முழு" ஆலோசனையைப் பெறத் தவறிவிடுகிறோம். நமது வசதிக்கும் நிலைக்கும் ஏற்றாற்போல் வேதத்தை வியாக்கியானிக்கக்கூடாது.

அப்போஸ்தலர் காலம் போன்று நமக்கு இன்று அற்புத அடையாளங்கள் இல்லாவிடில், தேவன் அவைகளையெல்லாம் நிறுத்திவிட்டார் என்று உடனே முடிவுகட்டிவிடக்கூடாது. மாறாக, "எங்களுக்கு இருந்த அடையாளங்

களைக் காணோம்; தீர்க்கதரிசியும் இல்லை; இது எதுவரைக்கும் என்று அறிகிறவனும் எங்களிடம் இல்லை. தேவனே, எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான்?" எனக் கதறவேண்டும் (சங் 74:9,10).

அற்புதங்களில்லாமலே வாழப் பழகிவிட்டதாலேயே நமக்கு அற்புதங்களில்லை. நமக்கிருக்கும் சாதனங்களும் வசதிகளும் ஆதிச்சபைக்கு இல்லை. அவர்கள் முழுவதும் தேவ வல்லமையையே சார்ந்திருந்தனர். விளம்பரப்படுத்த அவர்களுக்கு பத்திரிகையோ, வானொலியோ கிடையாது. அற்புதங்களே அவர்களது கமிஷனில்லா ஏஜெண்டுகள்!

"இந்த மனிதரை நாம் என்ன செய்யலாம்? எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது" என்றனர் வெளியிலுள்ளோர் (அப் 4:16). நமது சபைகளுக்கு இவ்வித சாட்சி என்று கிடைக்குமோ?

அவிசுவாசத்திலிருந்து மனந்திரும்புவோம். வசனத்துக்குப் புறம்பான பாரம்பரியங்களைக் களைந்தெறிவோம். பின்மாற்றத்திலிருந்து திரும்புவோம். நமது இருதயங்களைக் கிழிப்போம். "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்" என்ற வாக்குண்டு (யோசு 3:5).

நமது ஊழியர், மிஷனரிகள் யாவருக்காகவும் ஆதிச்சபையின் ஜெபத்தையே ஏறெடுப்போம். "கர்த்தாவே, உமது பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உமது கரத்தை நீட்டி, உமது ஊழியக்காரர் உமது வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்ல அவர்களுக்கு அனுக்கிரகம் செய்தருளும்" (அப் 4:29,30). அப்பொழுது அற்புத அடையாளங்களால் அவர்கள் பிரசங்கிக்கும் வசனத்தை தேவன் உறுதிப்படுத்துவார் (மாற் 16:20; அப் 14:3).

நாம் நம்மை அப்போஸ்தலர் வரிசை என்கிறோம். நல்லது, அப்போஸ்தல வல்லமை எங்கே? அற்புத அடையாளங்களெனும் அப்போஸ்தலனின் அடையாளங்கள் எங்கே? (2 கொரி 12:12). அப்போஸ்தல உபதேசம் போதாது; அப்போஸ்தல செயல்களும் வேண்டும். செயலற்ற உபதேசம் செத்தது. சபையின் முதல் புத்தகம் "நடபடிகள்" என்றழைக்கப்படுகிறது. நமக்கோ "வார்த்தைகள்"தான் ஏராளம்!

அற்புதம் இல்லாத அத்தியாயங்கள் நடபடிகள் புத்தகத்தில் மிகக் குறைவு. அப்பம் பிட்கும் ஆராதனையிலும் அமரரை எழுப்பும் அடையாளம்! (அப் 20:7-12). நமது சபை வாழ்விலும் ஊழியப் பாதையிலும் அற்புதங்கள் பெருகட்டும். நடபடிகள் புத்தகத்தில் "ஆமென்" இல்லை (28:31). ஆம், அது முடிவடையவில்லை. நடபடிகள் தொடரட்டும்.

அப்போஸ்தலரால் "அநேக" அற்புத அடையாளங்கள் நடத்தப்பட்டன என லூக்கா திரும்பத்திரும்ப எழுதுகிறான் (அப் 2:43; 5:12; 15:12). ஆண்டவரே, எங்களுக்கு அவைகளில் "கொஞ்சமாவது" தரமாட்டீரோ? ஆனால் துவக்கத்தைவிட முடிவு சம்பூரணமாயிருக்கும் என்று அவர் வாக்கருளியுள்ளார். பிந்திய ஆலயத்தின் மகிமை முந்தியதைவிட அதிகமாயிருக்கும்.

இன்று நாம் பெரும்பாலும் கேள்விப்படுவது தலைவலி, முதுகுவலி சாட்சிதான். பிறவிக்குருடர் பார்வையடையவேண்டும், முழுச்செவிடர் கேட்கவேண்டும், ஊமையர் பேச வேண்டும், முடவர் நடக்கவேண்டும். ஆனால் நாம் உபவாசத்தோடு தேவனுக்குமுன் சாஷ்டாங்கமாய் விழுந்து கிடக்காவிடில் இதெல்லாம் நடக்காது (மத் 17:19-21). தேவனும் நம்மை நம்பமுடிய வேண்டும். அவருக்கே மகிமை அனைத்தையும் கொடுக்கப் பழகிவிட்டோம் என்று அவர் அறியவேண்டும். "ஆண்டவரே, உமது மகிமையை நான் தொட்டுவிடாதிருக்கச் செய்யும்" என்று பழம் பரிசுத்தர் ஒருவர் ஜெபித்தார்.

சாதாரண மனிதர் மூலம் தேவன் நடப்பித்த அசாதாரண காரியங்கள் பற்றிய சரிதைகளால் வேதம் நிறைந்திருக்கிறது. மோசே செங்கடலைப் பிளந்தான். மோசேயின் தேவன் எங்கே? யோசுவா சூரியனையும் சந்திர னையும் நிறுத்தினான். யோசுவாவின் தேவன் எங்கே? எலியா வான் அக்கினி இறக்கினான். எலியாவின் தேவன் எங்கே? தானியேல் சிங்கத்தின் வாயை அடைத்தான். தானியேலின் தேவன் எங்கே? எபிரெயர் பதினோராம் அத்தியாயத்தின் தேவன் எங்கே? முடிவுகாலத்தின் முடிவுக்குள் வரவர இதிலும் பெரிதானவைகளை எதிர்பார்க்கலாம் (யோவே 2:28-30).

பெந்தெகொஸ்தேயைத் தொடர்ந்து அப்போஸ்தலர் மூலம் மட்டுமே அற்புதங்கள் நடந்தன என்று சொல்லமுடியாது. "பந்திவிசாரிப்புக்காகவே" ஸ்தேவானும் பிலிப்புவும் நியமிக்கப்பட்டனர். ஆனால், "ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாக மக்களுக்குள் பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்." பிலிப்பு செய்த

அதிசயங்களை மக்கள் கேள்விப்பட்டு, கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்'' (அப் 6:8; 8:6).

தேவன் தங்கள் மூலம் அற்புதங்களை நிகழ்த்த விசுவாசிகள் அனைவரும் எதிர்பார்க்கலாம். பின்வரும் இயேசுவின் வாக்குமொழிகளை அப்படியே இருதயத்தில் இருத்துங்கள். ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்... விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான மொழிகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்... வியாதிக்காரர்மேல் கைகளை வைப்பார்கள்; அப்பொழுது அவர்கள் சுகமாவார்கள்'' (மாற் 16:16-18). புறப்பட்டுப் போவதும், வசனத்தின்படி செயல்படுவதுமே இரகசியம்.

முழுச்சபையும் கிறிஸ்துவின் குணமாக்கும் ஊழியத்தில் ஈடுபட வேண்டும். "நீங்கள் சுகமடையும்படி, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்'' (யாக் 5:16). சபை மேய்ப்பர்கள் கிராமப்புறங்களுக்குத் தங்கள் சபையாரை அழைத்துச் சென்று நோயாளிகளுக்காக ஜெபிக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் விசுவாசிகளுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் முடங்கிக் கிடக்கும் விசுவாசமும் மறைந்து கிடக்கும் வரங்களும் வெளிவரும். ஒருவன் நோயாளி மீது கரம் வைத்து ஜெபித்துப் பார்க்காவிடில் தனக்கு குணமாக்கும் வரம் உண்டு என்று எப்படி அறியமுடியும்? கடினமான, அசாதாரணமான சூழ்நிலை ஒன்றிற்காக ஜெபிக்காத ஒருவன் தனக்கு அற்புதங்களைச் செய்யும் வரமுண்டு என அறிவதெப்படி?

வரங்கள் எதற்காக? பரணில் தூசி தட்டி வைக்கவா, அல்லது பட்டி தொட்டிகளில் பயன்படுத்தவா?

பூமியின் கடைசிவரை நாள்தோறும் அவரது இரட்சிப்பை அறிவிக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம். அதுதான் "அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவித பலத்த செய்கைகளினாலும்... ஆவியின் வரங்களினாலும் தேவன்தாமே சாட்சிகொடுத்த இவ்வளவு பெரிதான'' இரட்சிப்பாம்! (எபி 2:3,4).

மந்திரத்தினாலும், பிசாசுகளினாலும் செய்யப்படும் அற்புதங்களைக் குறித்துக் கவலை வேண்டாம். அவை இருக்கத்தான் செய்யும். ஆனாலும் மந்திரவாதிகளின் கோல்களை ஆரோனின் கோல் விழுங்கிவிடுமே! (யாத் 7:10-12). சீமோன், எலிமாஸ் போன்ற மாயவித்தைக்காரர்

மருண்டுவிடுவர்! (அப் 8:13). விசுவாச நண்பரே, நிமிர்ந்து நில்லுங்கள்! "உலகிலிருப்பவனிலும் உங்களிலிருப்பவர் பெரியவர்" (1 யோ 4:4).

நமது நாட்டில் மந்திரம், பில்லிசூனியம் யாவும் மலிந்துகொண்டிருக் கிறது. அப் 19:19இல் உள்ளபடி தேவ வல்லமை அசாதாரணமாக வெளிப்பட ஜெபிப்போம். அப்பொழுது தேவ வசனம் விருத்தியடைந்து மேற்கொள்ளும். மந்திர, வஞ்சக சக்திகளுக்கெதிராக வெறும் விவாதம் போதாது. பேசிக் கொண்டேயிருக்கிறோம், காட்டத் துவங்குவோம் (1 கொரி 2:4,5). நற் செய்தி ஊழியத்தில் பணம், வழிமுறைகள், சாதனங்கள், இவை யாவும் இரண்டாவதுதான். அற்புதங்கள்தான் வேலையை அபாரமாய்ச் செய்து முடிக்கும்.

ஒருசில தோல்விகளைக் குறித்தும் மனந்தளர்ந்துவிடக்கூடாது. பிரசங்கம் கேட்கிற அனைவரும் இரட்சிக்கப்பட்டுவிடுவதில்லை. அப்படியே ஜெபிக்கப்படுகிற அத்தனை பேரும் சுகமாகிவிடமாட்டார்கள். பிரசங்கித்துக் கொண்டேயிருப்போம் — பாவிக்கு! ஜெபித்துக்கொண்டேயிருப்போம் — பிணியாளிக்காக!

அப்படியே சுகம் பெறும் அத்தனைபேரும் கர்த்தரிடம் திரும்பிவிடு வதில்லை. தேவனிடமிருந்து அற்புதத்தைப் பெற்ற பின்பும் துன்மார்க் கத்திலும், விக்கிரகாராதனையிலும் தொடர்ந்து வாழும் பலருண்டு (யோ 12:37). இதை ஒரு தோல்வி என்று சொல்லத் தேவையில்லை. நமது தேவன் தயாளர். "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத் 5:45). மக்களின் மனந்திரும்புதலே நமது குறியாயிருக்கவேண்டும்; நமது உள்ளமோ மனதுருக்கத்தால் நிறைந்திருக்கவேண்டும்.

அற்புதங்களைப்போல திரள்களைக் கவருவது வேறொன்றுமில்லை. "அவர் செய்த அற்புதங்களைத் திரளான மக்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்" (யோ 6:2). இது இன்றும் அப்படியே. இயற்கைக்கப்பாற் பட்ட தெய்வீக வல்லமையைக் காணவும், அனுபவிக்கவும் மனிதனுக் கிருக்கும் நாட்டத்தை விஞ்ஞானமோ, அறிவுப்பெருக்கமோ தணிக்க முடியாது. இயேசுவின் நாமத்தில் நடக்கும் அற்புதங்கள் அவரது உயிர்த் தெழுதலை நிரூபிக்கின்றன (அப் 3:14-16). அவர் உயிரோடிருக்கிறாரென அவை உலகுக்கு அறிவிக்கின்றன. அற்புத அடையாளங்களோடு நற்செய்தியைப் பிரசங்கிப்பதே புதிய ஏற்பாடு அறிந்த நற்செய்திப்பணி யாகும். நாம் ஏற்கனவே கண்டபடி, வசனத்தை மட்டும் பிரசங்கித்துவிட்டு

அற்புத அடையாளங்களைப் பற்றியே பேசாத ஒரு சாரார் உண்டு. அடுத்தவர் அற்புதங்களிலேயே கவனம் செலுத்தி, ஆனால் தெளிவாக வசனத்தைப் போதிப்பதிலேயோ கவலையீனமாயிருக்கின்றனர். இரண்டும் ஒருபுறச் சாய்வுதான். இருபுறங்களும் ஒருங்கே இணைந்தால் அப்போஸ்தல காலம் திரும்பும். நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும் — அத்துடன் — பிணியாளிகளைக் குணமாக்க வேண்டும். இதுதான் இயேசுவின் சமநிலைப் போதனை.

ஆத்தும இரட்சிப்புதான் அற்புதங்களிலெல்லாம் பிரதானமானது என்பது உண்மை. ஆனால் கிறிஸ்து உடலுக்கும் ஆண்டவரும் இரட்சகருமானவர் (1 கொரி 6:13; எபே 5:23). சிலுவையில் நமது பாவங்களை மட்டுமல்ல, நோய்களையும் சுமந்தார் (ஏசா 53:4,5; மத் 8:16,17).

உடல் சம்பந்த அற்புதங்களை மட்டும் பேசுகிறீர்களே, பௌதீக அற்புதங்களைப்பற்றி என்ன என்று ஒருவேளை வினவலாம். இயேசுவின் ஊழியத்தை உற்று நோக்குங்கால் தண்ணீரை ரசமாக்கியது, அப்பம், மீனைப் பெருக்கியது, இதுபோன்றதெல்லாம் தினமும் நடந்தன என்று சொல்லமுடியாது. மாறாக, குணமளிக்கும் அற்புதங்களோ நடந்தவண்ணமிருந்தன. அப்படியே இன்றும். கட்டாயம் தேவைப்படும்பொழுது மட்டுமே இயற்கை விதிகளைக் கடந்துசெல்லும் அற்புதங்களைத் தேவன் அருளிச் செய்வார்.

இந்தியாவெங்கும் கிறிஸ்தவத்திற்கெதிரான சக்திகள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. ஊழியரும் மிஷனரிகளும் தாக்கப்படுகின்றனர். என்றுமில்லாத அளவு இன்று தேவ வல்லமை வெளிப்பட்டாக வேண்டும். சத்துரு வெள்ளம்போல் வரும்போது ஆவியானவர் கொடியேற்றவேண்டுமே! வாக்குண்டே! தேவனோடு ஒத்துழைப்போம். எழுந்து அவரது வல்லமையைத் தரித்துக் கொள்ளுவோம். அவர் ஒருவரே தேவன், வேறொருவருமில்லை என நிரூபிப்பார். "என் மக்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை... பயப்படாதிருங்கள்!" இதுதான் அவரது வாக்கு (யோவே 2:27,21). எதிர்ப்பாயிருக்கும் நாட்டுத் தலைவர்களும் அரசியல்வாதிகளும்கூட அற்புதங்களைக் கண்டு அரண்டுபோவர் (யோ 11:47,48). மாறியும் விடுவர் (தானி 6:26,27).

அற்புத அடையாளங்களுக்குத் தடங்கலாயிருக்கும் யாவற்றையும் அகற்றிவிடுவது நமது பொறுப்பு. அவைகளில் ஒன்று **எதிர்மறை எண்ணம்** (negativism). மாற்கு 16:17,18இல் செலவழிப்பதைவிட அதிக நேரம்

மத்தேயு 7:21-23இல் செலவழிக்கிறோம். எப்பொழுது பார்த்தாலும் போலியைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தால் உண்மையானதையும் விட்டுவிடுவோம்.

சுகமளிக்கும் ஊழியங்கள் சிலவற்றிலுள்ள வசனத்துக்கொவ்வாத செயல் முறைகள், செழிப்பு வாழ்வு உபதேசத்தை அளவுக்குமீறி வலியுறுத்துதல் போன்றவை நல்ல கிறிஸ்தவர் பலரையும் எரிச்சலடையச் செய்துள்ளன. எனவே அற்புத அடையாளம் என்றதும் வேண்டவே வேண்டா மென்கின்றனர். அன்பரே, துர்ப்பிரயோகத்திற்கு மாற்றுமருந்து எது? பயன்படுத்தாதிருப்பதா, சரியாய்ப் பயன்படுத்துவதா? பிள்ளை குளித்த தண்ணீரைக் கொட்டலாம், ஆனால் பிள்ளையையும் சேர்த்துக் கொட்டி விடக்கூடாது, கவனம்!

அற்புதங்களை எதிர்ப்பது அறிவீனம். எவ்வளவுதான் மாய்மால மிருந்தாலும் "தேவனுடன் போர் செய்வது தகாது" என்பதே பரிசேயரின் உபதேசம் (அப் 23:9). அப்போஸ்தலரைத் துன்புறுத்தியவரை நோக்கி பெயர்பெற்ற பரிசேயனாகிய கமாலியேல், "தேவனால் உண்டாயிருந்த தேயானால் அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிப் பாருங்கள்" என்றான் (அப் 5:34,39).

அடுத்தத் தடங்கல் **குழுவெறி** (groupism) ஆகும். தங்கள் குழுவைச் சேராதவன் என்ற ஒரே காரணத்தால் பிசாசு துரத்திக்கொண்டிருந்த ஒரு வனை யோவான் தடுத்து நிறுத்தினான். ஆனால் இயேசு, "அவனைத் தடுக்கவேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதம் செய்கிறவன் எளிதாய் என்னைக் குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்" என்றார் (மாற் 9:38-40).

அடுத்தது **ஊழியப் பட்டப்பெருமை** (hierarchism). தலைவர் அல்லது மூப்பர் என்றில்லாத ஒருவரைக் கர்த்தர் பயன்படுத்தி அற்புதங்களை நிகழ்த்தினால் நாம் அகமகிழ்வதில்லை. இது தவறு என்று மோசே யோசுவாவைக் கண்டித்தான் (எண் 11:24-30). ஊழியத்தில் நடந்த ஆச்சரியமான காரியங்களை இளைஞர் திரும்பிவந்து அறிவிக்கையில், மூப்பரும் தலைவர்களும் உளங்குளிர வேண்டும்; இல்லையேல் வாலிபர் உடனே குளிர்ந்துவிடுவர்! பிசாசு துரத்திய "சந்தோஷத்தோடே" அந்த எழுபது சீடர் திரும்பிவந்தபோது, இயேசுவும் "களிகூர்ந்தார்" (லூக் 10:17,21). தலைவர்கள் இப்படியல்லவா இருக்கவேண்டும்!

நமக்குத் தெரியாமலே நமது இதவாதிகள் **இயற்கை விளக்கத் தத்துவத்தை** (naturalism) நமது நரம்புகளுக்குள் செலுத்திவிடுகின்றனர். எச்சரிக்கை! வேதத்திலுள்ள அற்புதங்கள் அத்தனைக்கும் ஏதாவதொரு விளக்கம் அல்லது ஆவிக்குரிய அர்த்தம் கொடுத்துவிடுவார்கள். ஐந்தப்பம் இருமீன் கொண்டு ஐயாயிரத்தைப் போஷித்த அற்புதத்தைச் சொல்லி முடித்ததும் ஒரு சிறுமி எழுந்து "அது எப்படி முடியும்?" என்று ஆசிரியையிடம் கேட்டாள். "அதெல்லாம் மிகப்பெரிய அப்பங்கள்" என்றாள் ஆசிரியை. "சின்னப் பையன் அவ்வளவு பெரிய அப்பங்களை எடுத்துச் சென்றதேன்?" என்று சிறுமி திருப்பிக்கேட்டாள்!

பின்வாங்கிப்போன இஸ்ரவேலருக்காக எரேமியா புலம்பிக்கொண்டிருக்க தேவன் அவனிடம், "என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" என்றார். "உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" என்ற பதிலை அவன் ஆயத்தமாக வைத்திருந்தான் (எரே 32:27,17). நமது பதிலென்ன?

10

எழுப்புதல் அணைவது ஏன்?

எழுப்புதல் அணைய முடியுமா? ஆம்! அது பரத்திலிருந்து விழும் அக்கினியாம். அக்கினியை அவிக்கலாமே. அது உன்னதத்திலிருந்து ஊற்றப்படும் அருள்மாரியாம். மாரி நீரை வீணாக்கலாமே. அது தேவனிட மிருந்து புறப்பட்டுவரும் நதிகளாம். நதிகளைத் தடுக்கலாமே. எழுப்பு தலுக்குக் காரணர் ஆவியானவரே. அவரை நாம் எதிர்க்கவும், துக்கப்படுத் தவும், அவித்துப் போடவும் முடியும் (1 தெச 5:19). ஆவியின் அக்கினியை அணைக்காதிருப்போம்!

எதற்காக அனுப்பினாரோ, அந்த நோக்கங்கள் நிறைவேற்றப்படுமுன்னரே எழுப்புதல்கள் பல அணைந்துபோயின. எழுப்புதலின் ஆசீர்வாதத்தைப் பாதுகாப்பது எழுப்புதலுக்காக ஆயத்தப்படுதலைப் போன்றே முக்கிய மானது.

பெந்தெகொஸ்தேயை ஓர் உண்மையான எழுப்புதல் எனலாம். ஏனெனில் அது கர்த்தரின் முன்னிலையிலிருந்து வந்த இளைப்பாறுதலின் (புதுப்பித்தலின்) காலமாம் (அப் 3:19). இந்த எழுப்புதல் சம்பவத்தோடு துவங்கும் நடபடிகள் புத்தகத்தில் எழுப்புதல் அணைவதைத் தடுக்க போதுமான படிப்பினைகள் உண்டு. இங்கு அவற்றில் ஏழினை விளக்கு கிறேன்.

1. மனித வணக்கம் **(Idolisation)**

எழுப்புதலில் தமது தீர்மானத்தின்படி தேவன் பலரைப் பாத்திரங்களாகப் பயன்படுத்துகிறார். அவர்களில் எவரையும் நாம் கதாநாயகராக்கி வணங்கிவிடக்கூடாது.

அப்பொழுதுதான் எழுப்புதல் அக்கினியை அனுபவித்துவிட்டு வெளிச் சென்ற பேதுருவுக்கும் யோவானுக்கும் அலங்கார வாசலில் அலங்கோல மான காட்சியாயிருந்த முடவன் பெரும் சவாலாயிருந்தான். பிறவிச் சப்பாணி யான இவன் மீது உடனடி அற்புதம் ஒன்றை தேவன் பேதுரு மூலம் செய்தார். வியப்பில் ஆழ்ந்த மக்கள் பேதுருவையும் யோவானையும் சுற்றிக்கூடினர். அப்பொழுது பேதுரு சொன்னது: "நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன ?" (அப் 3:12). மனித வணக்கத்தைத் தடுக்கும் பொறுப்பு ஊழியர், மக்கள் ஆகிய இருவருக்குமுண்டு.

நேர்த்தியான பல காரியங்கள் கொர்நேலியுவின் பக்தியில் கூடுதலா யிருந்தன. அவன் தன் "வீட்டார் அனைவரோடும்" தேவனுக்குப் பயந்திருந்தான்; மக்களுக்கு "மிகுந்த" தர்மங்களைச் செய்து வந்தான்; "எப்பொழுதும்" ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். தேவன் அவன் ஜெபத்தைக் கேட்டார்; பரலோகம் அவனது தர்மங்களைக் கனம்பண்ணிற்று. அவனோ இன்னும் கூடுதலாக தேவனை நெருங்கவும் பக்தியடையவும் வாஞ்சித்தான் (அப் 10:2,4,33). ஆவியானவரால் கட்டளைபெற்று அவனுக்கு வசனத்தைப் பிரசங்கிக்க பேதுரு புறப்பட்டு வந்தான். ராணுவமுறை வந்தனத்திற்கு முற்றும் மாறாக கொர்நேலியு பேதுருவின் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டான். "பேதுரு அவனைத் தூக்கியெடுத்து: எழுந்திரும், நானும் ஒரு மனிதன்தான் என்றான்" (வச 26). தேவ ஆசீர்வாதத்தைச் சுமந்துவரும் வாகனத்தை வணங்கக்கூடாது. நானும் மனிதன்தான் என்று பேதுரு சரியாய்ச் சொன்னான்!

லீஸ்திராவில் பிறவிச் சப்பாணி ஒருவனை தேவன் பவுலின் மூலம் குணமாக்கினார். ஆச்சரியத்தில் மூழ்கிய மக்கள், "தேவர்கள் மனித ரூபமெடுத்து நம்மிடம் இறங்கி வந்திருக்கிறார்கள்" எனறு முழக்கமிட்டனர் (அப் 14:11). பவுலுக்கும் பர்னபாவுக்கும் பூமாலைகளைக் கொண்டுவந்து அவர்களுக்குப் பலியிடவும் ஆயத்தமாகிவிட்டனர்! அதற்கு அப்போஸ்

தலரின் எதிர்ச்செயலைக் கவனியுங்கள்: "அவர்கள் தங்கள் உடைகளைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்திற்குள் ஓடி, உரத்த சத்தமாய்: மனிதரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள் ?" (வச 14,15). தேவன் ஒருவரே பாத்திரமானவர். அவரது மகிமையை நாம் எவ்விதத்திலும் தொட்டுவிடக்கூடாது.

பிரசங்கமொன்று முடிந்ததும் "எவ்வளவு அருமையான பிரசங்கியார்!" என்று ஒருவர் மூடி பிரசங்கியாரைப் பாராட்டினாராம். இதைச் சற்றும் விரும்பாத, எதிர்பாராத மூடிக்கு தூக்கமில்லை. தேவன் அவரோடு இடைபட்டார். மறுநாள் மறுபடி பிரசங்கித்தார். முடிந்ததும் அதே நபர் திரும்ப வந்து, "எவ்வளவு அருமையான இரட்சகர்!" என்றாராம்.

எல்லாவித மார்க்கப் பகட்டுகளையும் எதிர்ப்போம். "தமது பரிசுத்த நாமத்தினிமித்தமே" தேவன் எழுப்புதலை அனுப்புகிறார். உலர்ந்த எலும்பு களாகிய இஸ்ரவேலரை நோக்கி, "உங்கள் நிமித்தம் அல்ல, என் பரிசுத்த நாமத்தினிமித்தமே நான் இப்படிச்செய்கிறேன்" என்றார் தேவன் (எசேக் 36:21,22). எல்லாக் கவர்ச்சிக்கும் தேவனே மையமாயிருக்கவேண்டும்.

மற்ற எல்லா சீடரைக்காட்டிலும் இயேசுவுக்கு நெருங்கியிருந்தது யோவான்தான். தேவன்தான் எல்லாத் துதிக்கும் வணக்கத்துக்கும் பாத்திரர் என்பதைப் புரிந்துகொள்வது அவனுக்கும் கடினமாயிருந்தது. தூதன் மூலம் பெற்ற தீர்க்கதரிசன வெளிப்பாடுகளில் உற்சாகமடைந்த அவன் தூதனையே வணங்கிவிட்டான். "என்னையல்ல, தேவனையே தொழுது கொள்" என்ற அரிச்சுவடியைக் கேவலம் ஒரு தூதன் அவனுக்குக் கற்றுத் தரவேண்டியதாயிற்று (வெளி 19:10). இதே பாதகத்தை வேதத்தின் இறுதி அத்தியாயத்திலும் செய்துவிட்டான் (22:8,9). நல்ல வேளை அங்கு 23ஆம் அத்தியாயம் இல்லை; இருந்திருந்தால் இன்னொரு முறை தூதனைத் தொழுதுகொண்டிருந்திருப்பான்! எழுப்புதலின் காலங்களில், ஆவியானவர் ஊற்றப்படும்பொழுது தீர்க்கதரிசன வெளிப்பாடுகள் நிறைய இருக்கும் தீர்க்கன் எவனையும் வணங்கிவிடவேண்டாம், எச்சரிக்கை!

2. சபைப் பிரிவினைகள் (Denominationalisation)

எழுப்புதல் வந்தால் எல்லாரும் விறுவிறுப்பாயிருப்பர். ஏராளம் ஜெபக் கூட்டங்கள், வேத ஆராய்ச்சி, நெடுநேர ஆராதனை, புதிய பாடல்கள், புதிய வெளிப்பாடுகள் எல்லாம் இருக்கும். எல்லாம் எல்லாருக்கும் ஒன்று போல் விருப்பமாயிராது; எனவே அவரவரது விருப்பத்திற்கேற்றாற்போல் குறிப்பிட்ட சத்தியம் அல்லது அனுபவத்தைச் சுற்றிக் கூட்டங்கள் சேரும். இங்கு கவனமாயிருந்து சமநிலைப்படுத்தாவிடில் அளவுக்குமீறி ஏதாவ

தொன்றை வலியுறுத்துவதால் ஒருபுறச்சாய்வு ஏற்படும். முடிவோ பிரிவினைகளும் சபை உடைதலும்தான்.

உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்குத் தரிசனமானது எழுப்புதலை மிக நேர்த்தியாக விளக்குகிறது. இஸ்ரவேலின் இருகோட்டாரும் இணைவது அந்த எழுப்புதலின் ஓர் ஆசீர்வாதமாகும். "அவர்கள் இனி இரண்டு இனங்களாக இருப்பதில்லை; அவர்கள் இனி இரண்டு இராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை" (எசேக் 37:22). தேவன் ஒன்றுபடுத்துகிறார்; மனிதனோ உடைக்கிறான்! இது தேவனுக்குமுன் அபத்தம்.

பிரிவினைகள் சிலவேளை தனிநபர்களைச் சுற்றியதாயிருக்கும். "நான் பவுலைச் சேர்ந்தவன்... நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன்... நான் கேபாவைச் சேர்ந்தவன்..." இன்னொரு குழு — அதுதான் சபைப்பிரிவு பாகுபாடற்ற சபைப்பிரிவு— "நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்!" (1 கொரி 1:11-13). முதலிலேயே இப்பிரச்னை வருமென்று தெரிந்ததால் என்னவோ பவுல் பலருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. ஞானஸ்நானப் பெயர்ப் பட்டியலொன்றை வைத்துக்கொண்டு சொந்தம் பாராட்டாத பவுல் போன்ற பிரசங்கிகளுக்காகத் தேவனைத் துதிப்போம்! "இன்னும் யாருக்காவது நான் ஞானஸ்நானம் கொடுத்தேனோ இல்லையோ அறியேன்!" என்றான் அவன் (வச 16). அப்படியே, இயேசுதாமே ஞானஸ்நானம் கொடுத்திருந்தால் மற்ற யாவற்றையும்விட அதுவே மேலான ஞானஸ்நானம் என்று மக்கள் தம்பட்டம் அடித்திருப்பர். எனவேதான் இயேசு தம் சீடர்களையே ஞானஸ்நானம் கொடுக்கச் செய்தார் (யோ 4:1,2). மந்திரியின் முகவரியைக் குறிப்பேட்டில் எழுதிக்கொள்ளுமுன் ஆவியானவர் பிலிப்புவைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்! கவர்ச்சியான பிரசங்கிமாருக்கு இந்த எடுத்துக்காட்டுகளில் உள்ள படிப்பினை எவ்வளவு முக்கியம்!

பிரிவினைகள் உபதேசங்களை அடுத்தும் ஏற்படலாம். எப்பொழுது பார்த்தாலும் ஞானஸ்நானத்தையே பேசிக்கொண்டிருந்தால் முடிவு 'பாப்திஸ்து' சபையாகும்! அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவத்தையும், பெண்கள் சபையில் பேசக்கூடாது என்பதையும் திரும்பத்திரும்ப பேசிக்கொண்டிருந்தால் முடிவு "பிரதரன்" சபையாகும்! இப்படிப் பல. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு! "தேனைக் கண்டுபிடித்தாயானால் மட்டாய்ச் சாப்பிடு; மிதமிஞ்சிச் சாப்பிட்டால் வாந்தி பண்ணுவாய்" (நீதி 25:16).

மூன்றாவதாக, கருத்துவேறுபாடுகளின் விவாதங்களினால் பிரிவினைகள் உண்டாகும். விவாதமொன்று கடுமையானதால் பவுலும் பர்னபாவும்

எவ்விதம் பிரிந்தனர் என்று ஆவியானவர் மறைவின்றி வசனத்தில் எழுதிவைத்துள்ளார் (அப் 15:36-41). இருவரும் அபிஷேகிக்கப்பட்ட தீர்க்க தரிசிகள்தான், உத்தமமான போதகர்தான், அர்ப்பணித்த மிஷனரிகள்தான்! அற்ப காரியங்களில் கருத்துவேறுபாடு கொண்டு பிரிந்துவிடுவதற்கு அனுமதியாக அல்ல, மாறாக இவ்விதத் தவற்றை நாம் செய்யக்கூடாதென்று எச்சரிப்பாகவே இது திருவசனத்தில் இடம் பெற்றுள்ளது. இஸ்ரவேலரின் தவறுதல் நம்மை எச்சரிக்கத்தானே ? (1 கொரி 10:11).

தடைபடாது எழுப்புதல் ஆசீர்வாதம் வருவதற்கான நிபந்தனை சங்கீதம் 133இல் அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. தேவ மக்கள் ஒருமனதாய் வாழும்போதுதான் கர்த்தர் அங்கு என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுவார். பெந்தெகொஸ்தேயின் இரகசியம், அதற்கு முன்பும் பின்பும் இருந்த ஒருமனமே (அப் 2:1,4,6). *"Bind us together, Lord!"* என்ற பல்லவியே நமது பாடலும் செயலுமாயிருக்கவேண்டும்.

3. திசை திருப்பம் **(Deviation)**

எழுப்புதலைத் தொடர்ந்து பல்லாயிர ஆத்துமாக்கள் மந்தையில் சேர்க்கப்படுவர். சீடர் எண்ணிக்கை பெருகினால் பிரச்னைகளின் எண்ணிக்கையும் பெருகும்! "அந்நாட்களில் சீடர்கள் பெருகினபோது, கிரேக்கர் தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரெயருக்கு விரோதமாய் முறு முறுத்தார்கள்" (அப் 6:1).

தங்கள் பிரதான அழைப்பிலிருந்து திசை திரும்ப அப்போஸ்தலருக்கு வந்ததோர் பெரிய சோதனையிது. ஆனால் அவர்கள் ஞானமாய் மேற் கொண்டனர். "நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்" (வச 2-4).

அமெரிக்க டாலருக்கும் ஜெர்மானிய மார்க்குக்கும் பலியாகிவிட்ட இந்தியப் போதகர்களும் பிரசங்கிகளும்தான் எத்தனை எத்தனை! அனாதை விடுதிகளும் இதுபோன்ற சமூகநல நிறுவனங்களும் தேவை என்றறிவேன். ஆனால் ஜெபத்தில் தரித்திருந்து, தேவனிடமிருந்து செய்திகளைப் பெற்று, மக்களுக்குப் போதித்து, அவர்களைக் கிறிஸ்து

வுக்குள் தேறினவர்களாக்க வேண்டிய பிரதானப் பொறுப்புள்ள மேய்ப்பரும், பிரசங்கிகளும் ஜெபத்திலும் தியானத்திலும் செலவிட வேண்டிய அருமையான மணிநேரங்களை அனாதை விடுதி போன்ற நிறுவனங்களை மேற்பார்வையிடுவதில் செலவிடுவது சற்றும் சரியல்ல. இந்தியாவில் அனாதை விடுதிப் பெருக்கத்தின் விளைவு கொழுத்த மேய்ப்பரும் மெலிந்த ஆடுகளும்தான்!

வசன ஊழியர் நிர்வாகக் காரியங்களையும் சமூகநலத் தொண்டுப் பொறுப்புகளையும் தகுதியுள்ள மனிதரிடம் ஒப்படைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்பத்தகுந்த ஆள் கிடைக்கவில்லையே என்று நொண்டிச்சாக்கு சொல்லக்கூடாது. அவன் திருடன் என்று தெரிந்திருந்தும் இயேசு யூதாசிடம் பணப்பையைக் கொடுக்கவில்லையா? தளும்புதலுக்கும் திடமின்மைக்கும் பெயர்பெற்ற பேதுருவிடம் அவர் திறவுகோல்களைத் தரவில்லையா? நம்பப்படும் போதுதான் நபர்கள் வளருவர். அளவுக்குமீறிக் கவனம் தேவையில்லை. மிஞ்சிப்போனால் பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிடுவார்கள் அவ்வளவுதானே? ஊழியத்தை யார் எடுத்துக்கொள்ள முடியும்?

நான் இப்படிச் சொன்னதும் பணப்பொறுப்புகளை உடனே தங்கள் மனைவிமாரிடமும் நிர்வாகப் பொறுப்புகளை தங்கள் குமாரரிடமும் ஒப்படைக்க நினைக்கும் ஊழியர் உண்டு! சாலொமோன் தன் சர்வ ஞானத்திலும் இவ்வளவு அருமையான முடிவொன்றைக் கண்டுபிடிக்க முடியாதென்றுதான் எண்ணுகிறேன்!

எழுப்புதல் வரும்போது தேவமக்களிடையே தேவன் மீதும் வசனத்தின் மீதும் பசி, தாகம் அதிகரிக்கும். தேவன் "இருளிலே சொல்லுகிறதை வெளிச்சத்தில் சொல்லும்படி" தேவ ஊழியர் நெடுநேரம் தேவ சமூகத்தில் தரித்திருப்பார்களாக (மத் 10:27). இப்படிச் செய்தால் எழுப்புதல் தொடர்ந்து கொழுந்துவிட்டெரியும்.

4. *நிலையிறங்குதல்* (Liberalisation)

எழுப்புதலில் ஆவியானவர் ஊற்றப்படும் அதே வேளையில் பிசாசும் நரகிலிருந்து தனது ஆவிகளை அவிழ்த்துவிடுவான். இடிமழை பெய்தால் நிலத்திலிருந்து லீலியும் முளைக்கும்; களையும் முளைக்கும். தேவ சமூகத்தில் அவ்வளவாய் நமது ஆதிப்பெற்றோர் களித்துத் திளைத்திருக்கையில் அந்தோ மினுங்கும் சர்ப்பம் நுழைந்தது! எழுப்புதல் காலத்தில் ஏராளமாகக் காணப்படும் தரிசனங்கள், சொப்பனங்கள், தீர்க்கதரிசனங்கள்,

இதுபோன்ற உணர்ச்சிவச அனுபவங்களைச் சத்துரு தனக்குச் சாதக மாக்கிக் கொள்ளுவான். தேவனது ஆரோக்கியமான உபதேசத்தைக் கெடுக்க மக்களது சிந்தைக்குள் தனது நஞ்சைத் தந்திரமாகச் செலுத்து வான். அனுபவங்களைச் சத்தியத்தின் வெளிச்சத்தில் நிறுத்துப் பார்ப்ப தற்குப் பதிலாக, அனுபவங்களே தவறாதவை எனக் கருதப்பட்டு சத்தியத் திலிருந்து அனுபவத்திற்குச் செல்வதெல்லாம் போய் அனுபவத்திலிருந்து சத்தியம் முடிவாக்கப்படும்.

பெந்தெகொஸ்தே அருள்மாரியைத் தொடர்ந்து விசுவாசிகள் "அப்போஸ்தலர் உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என வாசிக்கிறோம் (அப் 2:42). அவர்கள் தரித்திருந்த இன்னும் மூன்று காரியங்கள் உண்டு; ஆனால் உபதேசமே முதலாவது வருகிறது. ஏனென்றால் மோதும் வெள்ளத்திற்கும் சுழற் காற்றுக்கும் அசையாத உறுதியான அடித்தளம் உபதேசம்தானே (மத் 7:24,25). விளைவு: "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலராலே அநேக அற்புதங் களும் அடையாளங்களும் செய்யப்பட்டன" (அப் 2:43). எழுப்புதல் இவ்விதம் பரவிக்கொண்டேயிருந்தது.

விசுவாசிகள் விருத்தசேதனம் பெறவேண்டுமென்று யூதேயாவிலிருந்து வந்த சிலர் பிரசங்கித்தனர். இத்துர்வுபதேசக் காற்றை அப்போஸ்தலரும் மூப்பரும் பலமாக எதிர்த்தனர். முழுச்சபையும் கூடிவந்து ஒருமனதாக இந்த அந்நிய அக்கினியை அணைத்துப்போட்டனர் (அப் 15:1,2,22, 30-32). எழுப்புதலின் விறுவிறுப்பில் திடீரென்று "புது" வெளிப்பாடுகளுடனும் "ஆழமான" சத்தியங்களுடனும் மக்கள் தோன்றுவர்! ஆன்மீகத் தோற்றங்கொண்டதெல்லாம் வேதத்திற்கடுத்ததென்று சொல்லிவிட முடியாது. வேதத்திற்கு வெளியானதும், கேள்விக்குறியானதுமான எல்லா வெளிப்பாடுகளையும் அறவே அகற்றிவிட ஊழியர் விழிப்பாயிருக்க வேண்டும். சத்துரு கருப்புடையணிந்து, கொம்பும் வாலும் வைத்துக் கொண்டா வருவான்? அவனது உடை ஆட்டுத்தோல்; அவனது தோற்றம் ஒளியின் தூதன். ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரான எதையும் தடுத்துநிறுத்தி அகற்ற வசன ஊழியர் திடமாயிருக்கவேண்டும்.

எபேசுவில் ஆவியின் அருள்மாரியைத் தொடர்ந்து துர்வுபதேசமொன்று தலைதூக்கியது. பவுல் உடனே சீடரைக் கூட்டத்திலிருந்து பிரித்து ஈராண்டு தினம் வேதபாடம் நடத்தினான்! விளைவு? "ஆசியாவில் குடியிருந்த எல்லாரும் வசனத்தைக் கேட்டார்கள்... தேவன் சிறப்பான அற்புதங்களைச் செய்தருளினார்... இவ்வளவு பலமாய் கர்த்தருடைய வசனம் விருத்தி யடைந்து மேற்கொண்டது" (அப் 19:6-11,20).

எழுப்புதல் அலையில் உற்சாகமாய் முளைத்தெழும்பிய பல குழுக்களும் ஊழியங்களும் வந்த வேகத்திலேயே ஒன்றுமில்லாமற்போனதைக் கண்டிருக்கிறேன். போதுமான வசனப் போதனையின்மையே அதற்குக் காரணமெனத் திட்டமாக அறியப்படுகிறது.

உபதேசத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் நிலையிறங்குதலை நாம் தடுக்கவேண்டும். நம்மைப் பரவசப்படுத்துவதல்ல, பரிசுத்தப்படுத்துவதே எழுப்புதலின் பிரதான நோக்கமாகும். பரிசுத்தத்தின் ஒரு விளைவுதான் பரவசமாகும். மேலெழுந்த உற்சாகமல்ல, ஆழ்ந்த பக்திதான் எழுப்புதலின் அடையாளம் என்றார் ஒருவர். கண்ணீர் ததும்ப கல்வாரிக்குத் திரும்பச் செல்லுதலே எழுப்புதல் என்றார் இன்னொருவர்.

ஆதிச்சபைத் தலைவர்கள் சபையினரை வேசித்தனப் பாவங்களுக்கெதிராய்ப் பலமுறை எச்சரித்தனர் (அப் 15:29). ஆன்மீக வரங்கள் அத்தனையையும் அனுபவித்து ஆனந்தித்துக்கொண்டிருந்த கொரிந்து சபையைப் பார்த்து, "நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல" என்றான் பவுல்! அவர்களுக்குள் காணப்பட்ட விபசாரப் பாவத்திற்காகத் துக்கிப்பதற்குப் பதிலாக அவர்கள் தங்களைக் குறித்து மேன்மைபாராட்டிக்கொண்டிருந்தார்கள் (1 கொரி 1:5,7; 5:1-6). சபையானது தேவனது வீடு. நமது உடல் அவரது ஆலயம். தேவனது சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வரும் நதிகள் வீட்டையும் ஆலயத்தையும் சுத்தப்படுத்தட்டும். செத்த ஈக்கள் தைலத்தை நாறப்பண்ணும்! (பிர 10:1).

5. வியாபாரமயம் (Commercialisation)

தேவன் தம் மக்களை எழுப்புதல் ஆசீர்வாதத்தோடு சந்திக்கையில் அற்புதங்களும் அடையாளங்களும் நிறைய நடக்கும். இவ்வித வரங்களுள்ள ஊழியரை மக்கள் வெகுவாய் மதித்து அவர்கள் என்ன சொன்னாலும் கேள்வி கேட்காமல் கீழ்ப்படிவர். இதை ஊழியர் சாதகமாக்கி ஊழியத்தையே வியாபாரமயமாக்க வாய்ப்புண்டு. மார்க்கமே வியாபாரச் சந்தையாகிவிடும். ஊழியர் தாங்கள் அலாதிப் பிரியங்கொண்ட திட்டங்களுக்கும் தற்புகழ் நிறுவனங்களுக்கும் பெருவாரியாகப் பணம் சேகரிப்பர். அப்படியே பணம் படைத்தவர்கள் கறைபடிந்த தங்கள் வியாபாரங்களை ஆசீர்வதிக்கும்படி வரம் பெற்ற ஊழியரைக் கவர்ச்சித்து அழைப்பர். சிறப்புக் காணிக்கைகளுக்குச் சிறப்பு ஜெபங்கள் வாக்களிக்கப்படும். இவையெல்லாம் கட்டிடங்கள் கட்டுவதற்குப் போப்பு பாவ மன்னிப்புச் சீட்டு விற்றதைப் போன்றவை. "ஜெப எண்ணெய்", "ஜெபக் கைக்குட்டை"

என்றெல்லாம் குறிப்பிட்டு பலவித வியாபாரங்கள் நடக்கும். பிரியமானவரே, சுகமளித்தலோடு எவ்வித விலைப்பட்டியலும் சேர்க்காதிருப்போம். "வியாதியுள்ளவர்களைச் சுகமாக்குங்கள்... இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" என்றார் இயேசு (மத் 10:8).

சமாரியாவில் அநேகர் திருமுழுக்கு பெற்று, பல அற்புதங்கள் நடந்து, அசுத்த ஆவிகள் துரத்தப்பட்டு, மக்கள்மீது ஆவியானவர் ஊற்றப்பட்டபோது அங்கு பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்று. இதையெல்லாம் சீமோன் கண்டபோது பணம் கொடுத்து வரம் கேட்டான். "உன் பணம் உன்னோடுகூட நாசமாய்ப் போகக்கடவது" என்று திட்டினான் பவுல் (அப் 8:5-21). பணக்காரியங்களில் அப்போஸ்தலர் எவ்வளவு கண்டிப்பாயிருந்தார்களெனக் கவனியுங்கள். தேவ ஊழியர் பலரது விழுகைக்கு ஒரு காரணம் பொருளாசையே.

நடபடிகள் இரண்டாம் அத்தியாயத்தில் விசுவாசிகள் தங்கள் உடைமைகளையெல்லாம் அப்போஸ்தலர் பாதத்தில் வைத்ததாக வாசிக்கிறோம். ஆனால் அடுத்த அத்தியாயத்திலேயே பேதுரு, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை" என்கிறான்! இது எப்படி ? ஆம், பணம் பாதத்திலிருந்தது, பாக்கெட்டில் அல்ல! அதுதான் பணம் இருக்க வேண்டிய இடம்—பாதத்தில்! பரலோகத்தில் அப்படித்தான். தரைதான் தங்கம்!

ஊழியத்திற்குப் பணம்; பணத்திற்கு ஊழியமல்ல. இந்த வரிசையை மாற்றக்கூடாது. பொருளாசை எழுப்புதலைக் கொல்லும்.

6. இயந்திரமயம் (Mechanisation)

எழுப்புதலில் ஊழியம் விரிவடையும். எனவே வேலைப் பளுவும் அதிகரிக்கும். எல்லாமே இயந்திரமயமாகிவிடும். உற்சாகமும் புத்துணர்வும் போய் யாவும் வழக்கமாகிவிடும். ஜெபம், துதி, பிரசங்கம், ஆலோசனை கூறுதல் ஆகிய யாவற்றிலும் மலர்ச்சி இருக்காது. உற்சாக உணர்வுகள் மங்கிப்போகும். தரமல்ல, அளவே முக்கியமாகிவிடும். ஆவிக்குரிய காரியங்கள் மிகச் சாதாரணமானவைகளாகத் தோன்றும். உந்துவிசை குறையும். இவையெல்லாம் விரிவின் "ஆபத்துகள்!".

தேவன் இதற்குப் பரிகாரம் வைத்துதான் இருக்கிறார். பிரசங்கிமாரோ தலைவரோ எல்லா கயிறுகளையும் தங்கள் கையிலேயே வைத்துக்கொள்ள நினைக்கக்கூடாது. மோசேக்கு அவனது மாமனார் சொல்லிக்கொடுத்த தத்துவம்: "திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு அவர்களை

ஆயிரம்பேருக்கு... நூறுபேருக்கு... ஐம்பதுபேருக்கு... பத்துபேருக்கு அதிபதிகளாக ஏற்படுத்தும்... அவர்கள் பெரிய காரியங்களை உம்மிடத்தில் கொண்டுவரட்டும், சிறிய காரியங்கள் யாவையும் தாங்களே தீர்க்கட்டும்; இப்படி அவர்கள் உம்மோடு இந்தப் பாரத்தைச் சுமந்தால், உமக்கு இலகுவாயிருக்கும்" (யாத் 18:17-24). இதையே நாம் செயலாக்கவேண்டும்.

கம்ப்யூட்டர் மூலம் மக்களுக்கு ஆலோசனை தருவது தேவனது முறையாகாது. அச்சடித்த கடிதங்கள் தேவைப்படும் வேளைகளுண்டு; ஆனால் தேவன் ஒவ்வொரு நபர்மீதும் தனிக்கவனமுள்ளவர். கர்த்தர் "என்" மேய்ப்பராயிருக்கிறாரென்றான் தாவீது! வேலையைப் பிரித்துப் பலருக்கும் கொடுத்துவிடுவது வேதத் தத்துவமாகும்.

இந்தியாவிலுள்ள ஓர் அம்மையார் அமெரிக்க ஊழியரொருவருக்கு அவரது தலைமையகக் கட்டிடங்களையும் அமைப்புகளையும் தனது அயல்நாட்டுப் பயணத்தின்போது பார்வையிட விரும்புவதால் விபரம் கேட்டு கடிதம் எழுதினார்கள். "உங்கள் பிரச்னைகளுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். தேவன் சீக்கிரம் உங்களை விடுவிப்பார்" என்று அந்த கவிசேகைகளிடமிருந்து பதில் வந்தது! இந்த அம்மையார் எனது மாமியார்தான்!

அன்பு, பாசம், கரிசனை ஆகிய உணர்வுகளோடு நபர்கள்மீது தனிக்கவனம் செலுத்தி ஊழியம் செய்வதற்குச் சாக்காக ஊழிய விரிவையும் வேலை அதிகரிப்பையும் கூறக்கூடாது (1 கொரி 13:1-3; வெளி 2:3-5). மோசேயையும் பவுலையும்விட யாருக்கு வேலை அதிகம்? அவர்களிருவருமே தனி நபர்களுக்குப் போதுமான நேரம் செலவழித்தனர். வெறுமனே இயந்திரங்களைக் கொண்டு மனிதரோடு இடைபடுவது ஆவியானவரைத் துக்கப்படுத்தும்.

7. *தேக்கம்* (Stagnation)

எழுப்புதல் ஆசீர்வாதத்தை நிரம்ப அனுபவித்தவுடன் "அடைந்தாயிற்று" என்ற எண்ணம் உண்டாகலாம். எழுப்புதலென்றால் அது ஓர் அருள்மாரி. அது ஓர் அக்கினி. அது ஒரு நதி. இவற்றில் ஒன்றுமே நின்றுவிடுபவையல்ல. இவை யாவும் நகரும் விசைகளாம். இன்னும் மேலே, இன்னும் ஆழமாக, இன்னும் கிட்ட நம்மை எடுத்துச் செல்லவே எழுப்புதல் வருகிறது. தேவன் மீதும் அவரது வசனம், நீதியின்மீதும் நமக்குப் பசிதாகமெடுத்துக் கொண்டேயிருக்கவேண்டும்.

அப்படியே நமது சபைப்பிரிவுச் சுவர்கள் ஆவியானவரின் நீரோட்டத்தைத் தடுத்துநிறுத்த அனுமதிக்கக்கூடாது. தேவன் செய்கிற "புதிய காரியத்தை" ஏற்றுக்கொள்ள நமது அமைப்புகளில் தேவையான அத்தனை மாற்றங் களையும் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும். பரலோகத்தின் புதிய ரசம் பொங்குவதைத் தாங்கும் சக்தி நமது துருத்திகளுக்கு இருக்கவேண்டும்.

வாழ்க்கையில் தேக்கம் மிக்க ஆபத்தானது. முன்செல்லுதல் நின்றால் பின்வாங்குதல் துவங்கும். "பரிசுத்தமுள்ளவன் **இன்னும்** பரிசுத்த மாகட்டும்" (வெளி 22:11).

பெந்தெகொஸ்தேக்கு முன்னரும் பின்னரும் சீடர் ஜெபித்தனர். எழுப்புதல் முடிவானதல்ல.

அவனைக் குறித்து தாம் ஏற்கனவே அறிந்திருந்ததை இயேசு சொன்னதும் நாத்தான்வேல் பரவசமடைந்தான். "நீரே ராஜா" என்றான்! ஆனால் இயேசு, "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்றார் (யோ 1:47-51). முன்மாதிரியை அனுபவித்த நாம் பின்மாரிக்காகக் கதறுவோம் (யோவே 2:23). பசியுள்ளவர்களை தேவன் நன்மையால் நிரப்பி, திருப்தியடைந்தவர்களை வெறுமையாய் அனுப்பிவிடுவார் (லூக் 1:53). தேவன் தமது ஆவியை நமக்கு அளவில்லாமல் கொடுக்க விரும்புகிறார்.

"போதும்" என்றதும் எழுப்புதல் நின்றுவிடும். நாம் போதும் என்று சொல்லமுடியுமோ? இன்னும் எல்லாச் சபைகளும் ஊழியங்களும் தேவ வல்லமையால் அசைக்கப்படுவதைக் காணவில்லையே! இன்னும் பூமியின் எல்லையெங்கும் நாம் செல்லவில்லையே! இன்னும் ஏறத்தாழ 2000 மொழிகளில் வேதம் மொழியாக்கப்படவில்லையே! இன்னொரு பெந்தெ கொஸ்தே மட்டுமல்ல, அதைவிடப் பெரிய பெந்தெகொஸ்தே வந்தே ஆகவேண்டும்—வேறு வழியில்லை!

11

உபதேசங்களைச் சோதித்துப்பார்ப்பது எப்படி?

சொல்லாலும் செயலாலும் சத்தியத்திற்கு ஆதரவாகவும் துர்வுபதேசத்திற்கு எதிராகவும் நிற்கிறோமென நாம் தெளிவாக்காவிடில் அடுத்தத் தலைமுறைக்கும் சுவிசேஷத்திற்குமிடையே சுவரெழுப்புகிறோம் என்றார் கிறிஸ்தவ ஞானி பிரான்சிஸ் ஷேபர்!

"**வேற்றுமையான உபதேசங்களைப்** போதியாதபடிக்குக்... கட்டளையிடு" என்பதே தீமோத்தேயுவுக்குப் பவுலின் முதல் செய்தியாகும் (1 தீமோ 1:3). அப்படியே தனது இரண்டாம் நிருபத்தின் இறுதியிலும் இப்படி எழுதினான்: "அவர்கள் **ஆரோக்கியமான உபதேசத்தைப்** பொறுக்க மனதில்லாது, செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்" (2 தீமோ 4:3,4). அந்தக் காலம் வந்துவிட்டதல்லவா?

ஆதிச்சபையின் அமோக வளர்ச்சிக்கு நான்கு காரணங்களில் அவர்கள் அப்போஸ்தலரின் "உபதேசத்தில்" உறுதியாகத் தரித்திருந்ததே முதற்காரணம் (அப் 2:42). "உபதேசத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டாம், ஊழியம் செய்தால் போதும்" என்பது "பந்தைப்பற்றிக் கவலைப்படவேண்டாம், விளையாடினால் போதும்" என்பதற்குச் சமம்! பீட்டர் லூயிஸ் என்பவர் இதைச் சொன்னார்.

கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத் 24:24), கள்ள அப்போஸ்தலர் (2 கொரி 11:13), கள்ளச் சகோதரர் (கலா 2:4), கள்ளப் போதகர் (2 பேது 2:1) என்றெல்லாம் தேவையில்லாமல் வேதம் குறிப்பிடவில்லை. எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்க நாம் கட்டளை பெற்றுள்ளோம். "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள்" (1 தெச 5:21,22). சோதித்துப் பாருங்கள்; நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்; விட்டு விலகுங்கள்! அதின் விளைவு அல்லது கனி என்ன என்பதே எந்த உபதேசத்திற்கும் அமிலச் சோதனையாகும். ஏனென்றால் "நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதனதின் கனியினால் அறியப்படும்" (லூக் 6:43,44). உபதேசத்தை மட்டுமல்ல, உபதேசிகளையும் சோதித்துப் பார்க்கவேண்டும். "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை (விளைவை) நன்றாகச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" (எபி 13:7).

எந்தப் போதனையையும், ஊழியத்தையும் தழுவுமுன் கீழ்க்கண்ட ஏழு கேள்விகளைக் கேட்டுப்பார்க்கிறேன்.

1. இவ்வுபதேசம் அல்லது ஊழியம் இரட்சிப்புக்கு வலியுறுத்துவது கிருபையா அல்லது கிரியையா?

இதுதான் மிகவும் அடிப்படையானதாகும். ஏனென்றால் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடி இது கிரியைகளினால் உண்டானது அல்ல" (எபே 2:8,9). நற்செயல்களினாலல்ல, நற்செயல்களுக்காக இரட்சிக்கப்பட்டோம். குதிரைக்குமுன் வண்டியைக் கட்டக்கூடாது!

இரட்சிப்புக்குக் கிரியைகளை வலியுறுத்தும் உபதேசத்திற்கு சில எடுத்துக்காட்டுகள் தருகிறேன். மூத்த சகோதரன் ஒருவருடன் வந்து கொண்டிருந்த வாலிபனொருவனிடம், நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா என வினவினேன். "சிலுவையை நோக்கி நடந்துகொண்டிருக்கிறான்" என்று இவனுக்காக மூத்த சகோதரன் பதிலளித்தார். "எவ்வளவு காலமாக?" எனக் கேட்டேன். "மூன்று மாதம்" என்று பதிலளித்தார். அதாவது, இந்த வாலிபன் சிறுவயது முதல் தான் செய்த "எல்லாப்" பாவங்களையும் "ஒவ்வொன்றாக" அறிக்கையிட்டு, தவறிழைத்த "ஒவ்வொருவரோடும்"

காரியங்களைச் சரிசெய்துகொண்டிருக்கிறானாம். இன்னும் முடிக்க வில்லையாம்! ஒருநாள் வரும், அப்பொழுது இந்த மூத்த சகோதரன் அந்த வாலிபனைப் பார்த்து, "இப்பொழுது நீ பாவங்களையெல்லாம் அறிக்கை செய்துவிட்டாய், சரிசெய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் முடித்து விட்டாய். இனி தேவனிடம் இரட்சிப்புக்காக ஜெபி" என்பார்! பிரியமானவரே, மனிதரோடு ஒப்புரவாகுதலென்பது வேத உபதேசம்தான்; ஆனால் அது இரட்சிப்பின் வெளிப்பாடுதானே ஒழிய இரட்சிப்புக்கு நிபந்தனையல்ல. நொடிப்பொழுதில் எவரும் இரட்சிக்கப்படலாம். ஆயக்காரன் ஆலயத்துக்குள் பாவியாக நுழைந்தான்; பரிசுத்தனாக— "நீதிமானாக்கப்பட்டவனாக" — வெளிவந்தான்!

இதுபோலவே, மத்தேயு 28:19ஐக் குறிப்பிட்டு, "சீடருக்கு" மட்டுமே திருமுழுக்கு கொடுக்கலாம் எனக்கூறுவர். அவர்களது அறிவின்படி, புதிய ஏற்பாட்டிலுள்ள சீடத்துவத்தின் அத்தனை நிபந்தனைகளையும் நிறை வேற்றி முடித்தவுடனே சீடனாம். ஆனால், சீடன் எனும் சொல்லின் அடிப்படைப் பொருள் "மாணவன்" அல்லது "இணைந்தவன்" என்பதாகும். அதாவது அவன் இயேசுவுடன் இணைந்து அவரைப் பின்பற்றத் துவங்கி யிருக்கிறான். பாலர் வகுப்பிலிருந்தாலும் பட்டப் படிப்பிலிருந்தாலும் மாணவன்தானே! எனவே, சேருங்கள், முழுக்குங்கள், போதியுங்கள் என்பதே பேராணையின் முக்குறிப்புகளாகும்.

இன்னும் சிலர் ஞானஸ்நானத்தை இரட்சிப்புக்கு ஒரு நிபந்தனையாக்கி விடுவர். கிறிஸ்து முடித்த புண்ணியச் செயலை விசுவாசிப்பதால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படுகிறோம். உள்ளனுபவத்தின் வெளியடையாளமாகவே ஞானஸ்நானம் இதைத் தொடர்கிறது.

தேவனைப் பொருத்தவரை இரட்சிப்பு என்பது எல்லாமே "கிருபை!" நம்மைப் பொறுத்தவரை அது எல்லாமே "விசுவாசம்!" ஒன்றையும் கூட்டாதீர், குறைக்காதீர், கவனம்!

2. *இவ்வுபதேசம் என்னை நடத்துவது விடுதலைக்குள்ளா, அடிமைத் தனத்திற்குள்ளா?*

"நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலா 5:1). மோசேயின் பளுவான நுகத்தடியுடன் ஒப்பிட்டு, "என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயுமிருக்கிறது" என்றார் இயேசு (மத்

11:28-30). பிரமாணப் பிரசங்கிகள் பொதுவாக மூன்று காரியங்களில் தங்கள் சட்டதிட்டங்களைத் திணிப்பார்கள்.

அ) ஆசரிப்பு

எந்தவொரு நாளை அல்லது நாட்களை ஆசரிக்க விசுவாசிகளுக்குக் கட்டளை கிடையாது. தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்துடன் பழைய உடன் படிக்கையின் நாட்களுக்கடுத்த ஆசரிப்புச்சட்டங்களை இணைத்துக் கொள்ள வஞ்சிக்கப்பட்ட கலாத்திய விசுவாசிகளுக்குப் பவுல் இவ்விதம் எழுதினான்: "இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பலமற்றதும் வெறுமையானதுமான அவ் வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே" (கலா 4:9,10). பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாள் சனிக்கிழமை, இப்பொழுதோ அது ஞாயிற்றுக் கிழமையென்று சில கிறிஸ்தவர் கருகின்றனர். அப்படியல்ல! எந்தவொரு நாளையும் ஆசரிக்க நமக்கு இன்று பிரமாணம் கிடையாது. ஆசரிக்க அல்லது ஆசரிக்காமலிருக்க நமக்கு முழுச் சுயாதீனம் உண்டு. ஆசரித்தால் அது கர்த்தருக்கென்று; ஆசரிக்காவிட்டாலும் அது கர்த்தருக்கென்று தான்! (ரோ 14:5,6). இவ்வித மகிமையான விடுதலைக்காக அல்லேலூயா முழங்குங்கள். ஆனாலும் வாரத்தின் ஏழு நாட்களில் ஒருநாளை தேவனைக் கனப்படுத்தும்படி அவருக்காகவே செலவிடுவது ஆரோக்கியமான, ஆசீர்வாதமான பழக்கம்.

ஆ) ஆகாரம்

அப்படியே, பழைய ஏற்பாட்டிலுள்ள ஆகாரத்துக்கடுத்த பிரமாணங்கள் புதிய உடன்படிக்கையின்கீழ் இருக்கும் நமக்குக் கட்டல்ல. "புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறபடியால் கர்த்தருக்கென்று புசிக் கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறான்" (ரோ 14:6). முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெற விரும்புவோர் இறைச்சியோ, இனிப்போ, காரமோ சாப்பிடக்கூடாது என்றதொரு புதிய "வெளிப்பாட்டை" சில ஆண்டுகட்குமுன் ஒரு ஊழியக்காரி கொண்டுவந்தார்கள்! பிரியமானவரே, "பலவித அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். ஆகாரங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் திடப்படுகிறது நல்லது; ஆகாரங்களில் முயற்சி செய்கிறவர்கள் பலனடையவில்லையே" (எபி 13:9).

இ) ஆடை

கண்ணியமாயிருக்கும் எந்த நாகரீக ஆடையையும் தயங்காமல் அணியலாம். அகலக் கால்சட்டையைப் பிரசங்கியாகிய நான் எப்படி அணிய முடியுமென ஒரு நண்பர் ஒருமுறை என்னைத் திட்டியேவிட்டார். அது வசதியாயிருக்கிறதென்றாலும் விட்டாரில்லை. அதே நண்பரை ஈராண்டு கழித்து அகலக் கால்சட்டையில் பார்த்தேன். அப்பொழுது இறுக்கமான கால்சட்டை நாகரீகமாகிவிட்டது! முகப்பவுடர் மட்டும் போடும் சிலருக்கு உதட்டுச்சாயம் பூசும் மங்கையர் பயங்கர பாவிகளாய்த் தோன்றுவர். பவுடர் முகத்தின் தோற்றத்தையும் சாயம் உதட்டின் தோற்றத்தையும் நன்றாக்கு கிறது; அவ்வளவுதான் வித்தியாசம் என அவர்கள் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர். சில சபைகளில் தலைமுடிக்குச் சாயம் போடுதல், நகையணிதல் எல்லாம் பாவமென்றே கருதப்படுகின்றது. இன்னும் சிலருக்கு பூ வைப்பது பாவம்; ஆனால் பூப்போட்ட தாவணி அல்லது உடையணிவதில் தவறில்லை! இதிலென்ன வித்தியாசம்? மலர்ந்த பூ முப்பரிமாணமுள்ளது; வரைந்த பூ இரு பரிமாணம்! ஒன்று இயற்கைப் பூ, அடுத்தது செயற்கைப் பூ! அவ்வளவு தான்! தனி நபரது விருப்பங்களுக்கு விட்டுவிட வேண்டிய காரியங்களை உபதேசங்களாக்கிவிடாதிருங்கள்.

பிரமாண மார்க்கம் கட்டாயம் பெருமைக்கு வழி நடத்தும் என்றார் பக்தன் வாட்ச்மன் நீ. எவ்வளவு உண்மை!

3. இவ்வுபதேசம் பரிசுத்தத்திற்கு வழிநடத்துகிறதா, அல்லது கவலையீனமாய் நடக்கச் செய்கிறதா?

"ஒருவன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், **தேவபக்திக்கேற்ற** உபதேசங்களையும் ஒப்புக்கொள் ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால்... இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு" (1 தீமோ 6:3-5).

உத்தம உபதேசம் எப்பொழுதும் பரிசுத்த வாழ்வுக்கே நடத்தும் என்பது பழம் பரிசுத்தரின் ஆணித்தரமான கருத்தாகும். நன்னெறிக்கு நடத்துவதே நல்லுபதேசத்தின் நோக்கு என்றார் A. W. டோசர். உபதேசக் கோளாறினால் நடத்தைக் கோளாறுண்டாகும் என்றார் R. A. டோரி. உபதேசம் வாய்க்கல்ல, வாழ்வுக்கு என்றார் ஜான் கால்வின்.

பரிசுத்தத்தில் வளருவதே நம்மைக்குறித்த தேவசித்தம். "பரிசுத்த மாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி 22:11). பரிசுத்தமற்ற கிறிஸ்தவன் வேதம் போதிக்கும் அத்தனைக்கும் முரண்பட்டவன்.

ஒரு பிரசங்கத்தைக் கேட்டபின் அல்லது ஒரு புத்தகத்தை வாசித்தபின், நீதியின்மேல் எனது பசிதாகம் கூடியிருக்கிறதாவென சோதித்துப் பார்ப்பேன். நமது ஆத்துமாவிலிருந்து ஆகாததை அகற்றும் கூர்மை இருபுறமும் கருக்குள்ள பட்டயத்திலும் கூர்மையான வேத வசனத்திற்கே உண்டு. வசனமானது நம்மை எச்சரித்து, "பிழைகளுக்கும், மறைவான குற்றங்களுக்கும், துணிகரமான பாவங்களுக்கும், பெரும் பாதகத்துக்கும்" நம்மை விலக்கிக் காக்கிறது (சங் 19:11-13).

கள்ளப் போதகர்கள் மக்களிருதயத்திலிருக்கும் தேவபயத்தைக் கொன்று விடுவர். விடுதலை என்ற பெயரில் பாவம் செய்ய விடுவிப்பு கொடுத்து விடுவர். தன்னைப் பிரியப்படுத்தவல்ல, தேவனைப் பிரியப்படுத்தவே கிறிஸ்தவன் விடுதலை பெற்றிருக்கிறான்! சில பிரசங்கிகளுக்கு "எப்படிச்" செய்கிறோமென்பதை விட "என்ன" செய்கிறோமென்பதே முக்கியம். அவர்களுக்கு முறையல்ல, முடிவுதான் முக்கியம். இவ்விதப் போதனை களினால்தான் ஊழியங்களில் எல்லாவித அட்டூழியங்களும் தலை விரித்தாடுகின்றன. பிரிமானவரே, பரிசுத்தத்திற்குக் கிரயம் செலுத்த வேண்டும். பரிசுத்தமாகுதல், சுய வெறுப்பு ஆகிய பிரசங்கங்களுக்கெல்லாம் கிராக்கியில்லாததால் பரிசுத்த வாழ்வுக்குச் சவால்விடும் ஊழியரின் எண்ணிக்கை குறைந்துவருகிறது. மக்களைப் பரிசுத்தமாக்குவதல்ல, பரவசமாக்குவதே நிகழ்ச்சிகளின் நோக்காகிவிட்டது. ஆனால் சர்தையிலும் தங்கள் உடைகளைக் கறைப்படுத்திக்கொள்ளாத "ஒரு சிலர்" உண்டு! அவர்கள்தான் முக்கியமானவர்கள். அவர்களோடு சேர்ந்துகொள்ளுங்கள்!

4. இவ்வுபதேசம் வலியுறுத்துவது வேதத்தையா அல்லது வெறுமனே உணர்ச்சிகளையும் அனுபவங்களையுமா?

விசுவாசத்தில் வளருவதே கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சியாகும். ஆசாரிப்புக்கூடாரத்தில் அருமையானதொரு விளக்கமுண்டு. வெளிப்பிர காரத்தில் சூரியவொளியும், உட்பிரகாரத்தில் விளக்கொளியும், மகா பரிசுத்த ஸ்தலத்திலோ இருள் மட்டுமே உண்டு. மகா பரிசுத்த ஸ்தலத்தில் தரிசித்து அல்ல, விசுவாசித்தே நடக்கமுடியும் (2 கொரி 5:6).

மறுரூப மலையில் மகிமை கிறிஸ்துமீது இறங்கியதையும், பிதாவின் சத்தம் உண்டானதையும் நேரில் கண்ட, கேட்ட உன்னத அனுபவம் பேதுருவுக்கிருந்தது. ஆனால் கிறிஸ்துதான் மேசியாவென நிரூபிக்க "அதிக உறுதியான" தீர்க்கத்தரிசன வசனத்தையே முதன்மையாக வைக்கிறான் (2 பேது 1:16-21). தாங்கள் கண்ட தரிசனங்கள், கேட்ட

சத்தங்கள், பறந்துசென்ற அனுபவங்கள் இவைகளையே "தவறாதவை" எனச் சாதிக்கும் ஊழியர் கூட்டம் இன்று ஏராளம். மக்கள் அதை நம்பாவிடில் தேவ கோபம் இறங்குமெனவும் பயங்காட்டுவர்! மாறாக, ஏராளம் தரிசனங்களும் வெளிப்பாடுகளும் பெற்றிருந்த பவுலின் தாழ்மையைப் பாருங்கள்: "நானறியேன், தேவனறிவார்; நானறியேன் தேவனறிவார்" எனத் திரும்பத் திரும்பச் சொல்லுவதைக் கவனியுங்கள். மட்டுமல்ல, அவனது மேன்மைபாராட்டலெல்லாம் "பலவீனங்கள், நிந்தைகள், நெருக்கங்கள், துன்பங்கள், இடுக்கண்கள்" ஆகியவை மீதுதான் (2 கொரி 12:1-11). நான் ஒன்றுமில்லை என்பதே அவனது முடிவான கொள்கை! நவீன மேடைகளிலுள்ள அகங்காரப் பிரசங்கிகளையல்ல பவுலையே நான் பின்பற்றுவேன்.

நமது தேவன் அற்புதங்களின் தேவன். இன்று நமக்கு அடையாளங்கள் தேவைதான். ஆனால் "வசனத்தை வலியுறுத்தாத உபதேசமெதுவும் தினமும் அற்புதங்களைச் சோனாமாரியாய்ப் பொழிந்தாலும் அது எனக்குத் தேவையில்லை" என்றார் மார்ட்டின் லூத்தர்! அப்படியே, தீர்க்கதரிசனம் உரைத்தல் ஆவியின் வரமானாலும், உரைக்கப்பட்டது வசனத்துக்கு உடன்பட்டிருக்கிறதா என நிதானிக்குமுன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை (1 கொரி 14:29). நான் தரிசனம் ஒன்றும் கண்டதில்லை, சத்தம் ஒன்றும் கேட்டதில்லை; ஆனால் இரண்டும் உண்டு என்றறிவேன்; அதை எழுதப்பட்ட வசனத்திற்கு அடுத்துதான் வைப்பேன் (எரே 23:28,29).

5. இவ்வுபதேசம் தேவனது மகத்துவத்தை ஆராதிக்க வழிநடத்துகிறதா அல்லது மனிதனின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறதா?

"நீங்கள் தேவர்களைப்போல் இருப்பீர்கள்" என்பதே மனிதனுக்கு வந்த முதல் சோதனை (ஆதி 3:5). சத்துருவானவன் தனது முறைகளை மாற்றிக் கொண்டாலும் அவனது முக்கிய சோதனை இதுவேதான். இயேசுவுக்கு வந்த மூன்று சோதனைகளின் அடிப்படைக் கருத்து இதுவேதான். நினைவிருக்கிறதா?

மனிதனை மையமாகக்கொண்ட இத்துர்வுபதேசத்திற்கு எடுத்துக் காட்டுகள் ஏராளம். தேவனைக் கேள்வி கேட்பது ஓர் எடுத்துக்காட்டாகும். நமக்கு என்னதான் நிகழ்ந்தாலும் ஏனென்று கேட்க உரிமையில்லை. நமக்குப் பதில் சொல்ல தேவனுக்கு கட்டாயமில்லை. "ஏன் கூடாது?" என்று திருப்பிக் கேட்டுவிடுவார்! அப்படியே, நாம் ஒருபோதும் தேவனுக்குக் "கட்டளையிட"

முடியாது. ஜெபிக்கலாம், மன்றாடலாம், அவ்வளவுதான். ஏசாயா 45:11ஐத் தவறாக அர்த்தப்படுத்துகிறோம். "என் கரங்களின் செயல்களைக் குறித்து எனக்குக் கட்டளையிடுவீர்களோ ?" என்பதுதான் சரியான மொழியாக்கம். முன்னும்பின்னுமுள்ள வசனங்களை வாசித்துப் பார்த்தால் இந்தக் கருத்து தெளிவாகும். தேவப் பிள்ளைகள் எனும் உறவில் நமக்குரிய ஆசீர்வாதங்களை "உரிமைபாராட்டிக்" கேட்கலாம். ஆனால் அதுவும் கல்வாரிப் புண்ணியங்களின் அடிப்படையில்தான்! "அற்புதம் உங்கள் வாயில்தானிருக்கிறது" என்று பிரசங்கிகள் மக்களைப் பார்த்துச் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் இதை விசுவாசிப்பதில்லை. அற்புதம் தேவனது கையிலிருக்கிறது. அதைச் செய்வதும் செய்யாததும் அவரது விருப்பம். அவர் ஏகாதிபதி. விருப்பம்போல் மாற்றிக்கொள்ளப்படும் தத்துவங்களைக் குறித்துக் கவனம்!

ஆசீர்வதிக்கிறவரைவிட ஆசீர்வாதத்தைப் பற்றியே பேசும் உபதேசமும் சீரானதல்ல. ஆபிரகாமின் நகைப்பு ஈசாக்குதான். முதிர்வயதில் பிறந்த குழந்தையுடன் ஆபிரகாமும் சாராளும் கொஞ்சிக்குலாவிக்கொண்டிருந்திருப்பார்கள். அக்குமாரனையே பலியிட தேவன் பணித்தார். மகனை ஆபிரகாம் பலிபீடத்தில் கிடத்தியபோதுதான் பலியாட்டைக் கண்டான்! இப்பொழுது ஆசீர்வாதமல்ல, ஆசீர்வதிக்கிறவரே அவனுக்கு முக்கியம்!

இருபத்திநான்கு மூப்பருக்கும் கிரீடம் அணிவித்தவர் தேவனே. ஆனால் தேவனொருவரே பாத்திரரானதால் அவர் பாதத்தில் கிரீடங்களைக் கழற்றி வைத்தனர். உண்மையான தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானகனின் கோட்பாடு, "நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும்" என்பதே! உண்மையான போதகனாகிய பவுலின் கோட்பாடு "நான் தினமும் சாகிறேன்" என்பதே! புரிகிறதா ?

6. இவ்வுபதேசம் என்னைத் தீவிர நற்செய்திப் பணிக்குள் நடத்துகிறதா, அல்லது சோம்பேறியாய் உட்காரச் செய்கிறதா ?

அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன் ஆகிய எந்த ஊழியனானாலும் அவனது பணி "சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக" தேவ மக்களை ஆயத்தப்படுத்துவதேயாகும் (எபே 4:12,13). ஊழியமில்லா உபதேசம் கனியில்லா மரம்; உபதேசமில்லா ஊழியம் வேரில்லா மரம் என்றார் டால்பட் சேம்பர்ஸ்.

பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து உலகிற்கு வந்தார். பாவிகளைச் சந்திக்க பரிசுத்தவான்களை இயக்கவே ஆவியானவர் வந்தார். தேவனது

நிகழ்ச்சி நிரலில் இன்று முக்கியமானது உலகு நற்செய்திமயமாக்கப்படுவதே. அப்பொழுது முடிவு வரும். வேதத்தின் இறுதி அழைப்பும் நற்செய்திப் பணியின் அழைப்பே! "வாருங்கள், பருகுங்கள்!" (வெளி 22:17).

நேராகவோ மறைமுகமாகவோ நற்செய்திப்பணியைத் தூக்கும் பிரசங்கிகள், போதகர்களைக் குறித்து எச்சரிக்கை! ஆத்துமாதாய உற்சாகத்தை அணைத்துக்போடப் பொதுவாக இரு உபதேசங்கள் திரித்துக் கையாளப்படுகின்றன. ஒன்று முன்குறித்தல் (Predestination) எனும் உபதேசம், அடுத்தது பூரணமாகுதல் (Perfection) எனும் உபதேசம். யாரெல்லாம் இரட்சிக்கப்படுவரென தேவனுக்குத் தெரியும்; எப்படியாவது அவர்களை அவர் இரட்சித்துவிடுவார்; நாம் அதில் ஒன்றும் செய்வதற்கில்லை என்பது முதல் விவாதம். ஆனால் "எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட.... தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்றும் "எல்லா" மனிதருக்காகவும் நாம் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்க வேண்டுமென்றும் நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம் (1 தீமோ 2:1-4). காலையில் விதைக்கவேண்டும், மாலையில் தளரக்கூடாது. ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். எது வாய்க்குமென்று நாமறியோமே! (பிர 11:1-6).

பூரண உபதேசவாதிகள் இவ்விதம் விவாதிப்பார்கள்: "நீயே பூரணமாகாதிருக்கையில் பிறருக்குப் பிரசங்கிக்கச் செல்லுவானேன்?" ஆனால், இவ்வுலகிலிருக்கையில் ஒருவரும் பூரணப்படுவதில்லை என்பதுதான் உண்மை. நடைமுறை வாழ்வை அழுத்திக்கூறும் அப்போஸ்தலன் யாக்கோபு கூறியுள்ளதைக் கேளுங்கள்: "**நாம் எல்லாரும் அநேக** காரியங்களில் தவறுகிறோம்!" (யாக் 3:2). உலகமெங்கும் பரவிச்சென்ற சீடர்களில் பூரணர் ஒருவருமில்லை. மேலை நாடுகளிலிருந்து இந்தியா வந்த ஒரு மிஷனரியும் பூரணரல்ல. அவர்கள் நாடுகளிலுமிருந்த பூரண உபதேசவாதிகளுக்கு செவிமடுக்காமல் இந்தியாவிற்கு வந்த மிஷனரிகளுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். மற்றபடி எனது பூட்டனார் விக்கிரகங்களை விட்டுத் திரும்பியிருக்கமாட்டார். நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறக்கும் சிலாக்கியம் பெற்றிருக்கமாட்டேன்!

"வேறே ஆடுகள்," "மற்ற பட்டணங்கள்," இதுவே இயேசுவின் இதயக் கதறலாயிருந்தது. கிறிஸ்துவின் இச்சிந்தையைத் தரித்து, பிற உபதேசங்களைத் தறிப்போம்! நற்செய்திப்பணியை ஊக்குவிக்காத எந்த உபதேசமும் வேண்டாம், வேண்டவே வேண்டாம்!

7. இவ்வுபதேசம் அல்லது ஊழியம் ஆவிக்குரிய ஒருமனப்பாட்டுக்குள் நடத்துகிறதா, அல்லது பிரிவினை உண்டாக்குகிறதா ?

சபையிலுள்ள அனைத்து ஊழியர்களின் நோக்கமும் விசுவாசிகளை "ஆவியின் ஒருமைக்குள்" காத்து "அறிவின் ஒருமைக்குள்" வழிநடத்துவதே (எபே 4:3,11). "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும்... அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க... வேண்டிக்கொள்கிறேன்" என்றார் இயேசு (யோ 17:20,21).

பிரிவினைகளெல்லாம் பொதுவாக நபர்களைச் சுற்றித்தான். "பவுலைச் சேர்ந்தவன்... அப்பொல்லோவைச் சேர்ந்தவன்... கேபாவைச் சேர்ந்தவன்!" இது தவிர்த்து நான்காவது குழு ஒன்றுமுண்டு— "கிறிஸ்துவைச் சேர்ந்தவன்"— சபைப்பிரிவு பாகுபாடற்றவன் ? சபைக்குப் பெயர் வைத்தது தேவன்; பெயர் பிரித்தது மனிதன்! (What God nominated, man has denominated!) பிரிவினை பாவம். சபைப்பிரிவு பாகுபாடுகளை முழுக்க முழுக்க எதிர்த்துப் பேசிவிட்டு முடிவில் பல சபைகளில் திருப்தியில்லாது வெளிவந்தோரையெல்லாம் சேர்த்து இன்னொரு சபைப்பிரிவு உண்டாக்கும் பிரசங்கிகள் பலருண்டு. இதற்கு முடிவேயில்லை!

ஒரு சில உபதேச வலியுறுத்தல்களினாலும் பிரிவினைகள் உண்டாகின்றன. தேவனது "முழு" ஆலோசனையில் ஒருசில "பகுதிகள்" மட்டும் அளவுக்கு மீறி அழுத்தப்பட்டு மற்றவை விட்டுவிடப்படுகின்றன. இது ஓரத்திற்கும் பிரிவினைக்கும்தான் வழிநடத்தும். சமநிலை இழக்கப்படுகிறது. "தேனைக் கண்டுபிடித்தாயானால் மட்டாய்ச் சாப்பிடு; மிதமிஞ்சிச் சாப்பிட்டால் வாந்திபண்ணுவாய்!" (நீதி 25:16). நல்லதோர் அறிவுரையல்லவா ?

பிரிவினைகளுக்கு வழிவகுத்த ஒருபுறச்சாய்வுக்கான எடுத்துக்காட்டுகள் சபைச் சரித்திரத்தில் ஏராளம். எப்பொழுது பார்த்தாலும் ஞானஸ்நானம், ஞானஸ்நானம் என்று பேசிக்கொண்டிருந்ததால் பாப்திஸ்து சபை! சபையில் பெண்கள் பேசுவதையே எப்பொழுது பார்த்தாலும் எதிர்த்துக் கொண்டிருந்ததால் பிரதரன் சபை! எப்பொழுதும் பாஷை, பாஷை என்றதால் பெந்தெகொஸ்தே சபை! ஓய்வுநாள் ஓய்வுநாள் என்றதால் ஏழாம்நாள் ஓய்வுக்காரர் சபை! இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்!

ஐந்து குருடர் ஒரு யானையைத் தடவிப்பார்த்து அது என்ன என்று சொல்லத் துவங்கினார்களாம். ஒருவன் அது ஒரு சுவர் என்றானாம். அடுத்தவன் அது ஒரு கயிறு என்றானாம்... மன்னிக்கவும், உங்களுக்குத் தான் கதை தெரியுமே! மறந்துவிட வேண்டாம்!

12

பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி?

செய்தித்தாள்களைப் படிக்கவே விருப்பமில்லை. தலைப்புகள் பெரும்பாலும் ஊழல்கள், போராட்டங்கள், மோதல்கள், ஏமாற்றுதல்கள், கலவரங்கள், சேதங்கள், யுத்தங்கள், இப்படித்தான். ஆதிக் கிறிஸ்தவரைவிட இறுதிக் காலத்தின் இறுதிக்குள் அதிகம் நெருங்கி வந்துவிட்டோம். பெந்தெகொஸ்தே தினத்தைப் பேதுரு "கடைசி நாட்கள்" எனக் குறிப்பிட்டால் நாமிருப்பது கடைசி நிமிடங்கள்தான். வரவர நிலைமை மோசமாகிக் கொண்டுதானிருக்கிறது. நம்பிக்கை குறைகிறது. உலகத் தலைவர்கள் தடுமாறுகின்றனர். நாளையை நினைத்தாலே நடுக்கம்.

ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தேவன் பக்கம் சேர்ந்துவிட்டவன் பதறான். புயலோ, பெருவெள்ளமோ கவலையில்லை, நங்கூரம் பாய்ச்சி விட்டான். உலகச் செய்திகள் அவனுக்கு ஆச்சரியமில்லை. அவன் காணுவதெல்லாம் வேதத்தின் நிறைவேறுதல்தானே. "கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும்" என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது (2 தீமோ 3:1).

எல்லாம் கடவுள் கையில்தான். அவரே சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவரே கர்த்தாதி கர்த்தர், மன்னாதி மன்னர். "தேவபக்தியுள்ளோரைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும்" அவர்

அறிந்திருக்கிறார் (2 பேதுரு 2:9). பொல்லாத இந்நாட்களில் பிழைக்கும் வழியை அவர் நமக்குப் போதிக்கிறார்.

1. எப்படியாவது பரிசுத்தமாய் இருந்துவிடுங்கள்.

உலகம் அசுத்தத்திலிருந்து அசுத்தத்திற்குச் செல்கையில் தேவன் தம் மக்கள் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடையக் கட்டளையிட்டுள்ளார் (வெளி 22:11). பரிசுத்த ஏணியில் ஒருபோதும் இறங்கிவிடக்கூடாது. "பாவியொருவன் எவ்வளவு பரிசுத்தமடையமுடியுமோ அவ்வளவு என்னைப் பரிசுத்தமாக்கும்" எனப் பக்தன் மச்செயின் ஜெபித்தார்!

எகிப்திலிருந்து புறப்பட்டோர் இச்சை, சிலை வணக்கம், வேசித்தனம், கடவுளைப் பரீட்சித்தல், முறுமுறுப்பு ஆகிய பாவங்களால் வனாந்தரத்தில் மடிந்தனர். "இவைகளெல்லாம் எடுத்துக்காட்டுகளாக அவர்களுக்குச் சம்ப வித்தன; உலகின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கின்றன" (1 கொரி 10:6-11).

சோதனைகள் பெருகுகின்றன. காற்றே பாவத்தால் நிறைந்திருக்கிறது. ஆனாலும் ஒவ்வொரு சோதனைக்கும் தப்பும் வழியை தேவன் தந்துள்ளார் (1 கொரி 10:13). எந்தச் சூழலுக்கும் அவர் கிருபை போதும். தேவன் நம்மில் செயலுக்கான விருப்பத்தை உண்டாக்குகிறார்; நாமும் அவருடன் செயல்படவேண்டும் (பிலி 2:12,13). சூழலையையோ சமுதாயத்தையோ பழிசாட்டவேண்டாம். எகிப்தில்தானே யோசேப்பு தூய்மையைக் காத்துக் கொண்டான்! பாபிலோனில்தானே தானியேல் பரிசுத்தமாயிருந்தான்! எதிர்நீச்சல் போடத் துணியுங்கள். அது இலகுவல்ல, இயலாததுமல்ல.

எல்லாரும் செய்கிறார்கள் என்பதே பொதுவான சாக்கு. ஆனால் நாம் அரச குருக்களின் கூட்டமன்றோ? (1 பேதுரு 2:9). "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவில் குற்றமற்றவர்களும்... மாசற்ற பிள்ளைகளுமாய்" சுடர்களைப் போல பிரகாசிக்கவே அழைக்கப்பட்டுள்ளோம் (பிலி 2:15).

நமது நகர்கள் சோதோம் கொமோரா போல் மாறுகின்றன. பாவமே நாகரீகமாகிவிட்டது. "பிற்காலத்தில் அவபக்தியாக நடப்பவர்களுக்கு" எடுத்துக்காட்டாயிருக்கவே இந்நகர்கள் மீது தேவ கோபம் இறங்கிற்று (2 பேதுரு 2:6). நாம் அப்படியானால் "எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்!" (2 பேதுரு 3:11). இதுவே சவால்.

தூய வாழ்வின் இரகசியம் மனதில்தானிருக்கிறது. உலகம் போகும் போக்கில் போக மறுரூப மனது மறுக்கும் (ரோ 12:2). உங்கள் மனதை எப்பொழுதும் கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழ் வைத்துக்கொள்ளுங்கள். சோதனைக்காரனின் ஏவுதல்களுக்கு இசையாதீர்கள். உன்னதமானவரின் உயர் மறைவில் அடைக்கலம் புகுங்கள். அவர் நாமத்திற்குள் ஓடி ஒளித்துக் கொள்ளுங்கள்.

"தூய்மை பெற நாடு" என்று பக்தன் பாடினான். 18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இப்பாடல் ஆங்கிலத்தில் *"தூய்மை பெற நேரமெடு"* என்றுள்ளது. இதயத்தை ஆராயவும், சுத்திகரிப்பும் வல்லமையும் பெறவும் தினமும் சில நிமிடங்களாவது ஒதுக்கிவையுங்கள்.

2. ஜெபத்திற்கென திட்டமான நேரம் ஒதுக்குங்கள்.

கடைசிக்காலத்தைக் குறித்துப் பேசும்போதெல்லாம் இயேசு ஜெபத்தில் விழித்திருப்பதை வற்புறுத்தினார். "அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" (மாற் 13:33; மத் 25:13).

என்றுமேயில்லாத வேகத்தில் உலகம் சென்றுகொண்டிருக்கிறது. வேலைகளைத் துரிதமாய்ச் செய்து முடிக்க எவ்வளவு நவீன சாதனங் களிருப்பினும் நமது முன்னோர்களுக்கு இருந்த அளவு நமக்கு நேரமில்லை. எல்லா நாளும் அப்படித்தானிருக்கிறது. இதில் பலியாவது ஜெப நேரம்தான். சுருக்க ஜெபத்திலேயே சமாளிக்கப் பார்க்கிறோம். ஜெபிக்க முடியாத அளவு வேலையிருக்குமானால் நிலைமை கவலைக்கிடம்!

"தினம் காலை இரு மணிநேரமாவது ஜெபிக்காவிடில் அந்நாளில் பிசாசு ஜெயமெடுத்து விடுகிறான்" என்றார் மார்ட்டின் லூத்தர். வேலை கூடக்கூட ஜெபமும் கூடவேண்டும். ஏனெனில், கூடுதல் வல்லமையும், பலமும், ஞானமும் பெறுவது கூடுதல் ஜெபத்தினாலேயே. ஊழியமோ, வேறு வேலையோ, அதற்காக ஜெபத்தைப் பலியாக்குவது மடமை. தேவப்பாணியில் செயல்படக் கற்பது ஜெபத்தில்தான்.

தேவப் பிள்ளைகளே பிசாசின் குறி. அனைத்து ஆயுதமணிந்திருந்தாலும் "எந்தச் சமயத்திலும் ஜெபம்பண்ணி" விழித்திராவிடில் உறுதியாய் "நிற்க" முடியாது (எபே 6:11-18). "தீங்கு நாளின்" அம்புகளுக்குத் தப்ப வேறு வழியில்லை.

நேரம் "எடுத்து" வைக்காவிடில் ஜெபிக்க நேரம் "கிடைக்காது." தாவீத ரசனைவிட அவன் காலத்தில் யாருக்கு வேலை அதிகம்? அவனே ஜெபத்திற்கென வேளைகளைக் குறித்து வைத்திருந்தான் (சங் 55:17). நேபுகாத்நேச்சார் மன்னனுக்குப் பணி செய்வதில் தானியேலுக்கு வேலை அதிகம்தான். ஆனாலும் தினம் மூன்றுவேளை ஜெபத்தில் அவன் தவறவேயில்லை (தானி 6:10). இவ்வித ஜெபப் பழக்கங்களுக்கு அடிமை யாவோம்!

வேலை மிகுந்த இந்நாட்களில் பகல் வேளையில் ஜெபத்திற்கென ஒரு மணி நேரமாவது கிடைப்பது அரிதாகையால், அதிகாலையை ஜெபத்திற் கென ஒதுக்கிவிடவேண்டும். காலை முதல் மாலை வரை மக்கள் அவரை நெருக்கிக்கொண்டிருந்ததால் இயேசு இம்முறையையே கையாடினார் (மாற் 1:35).

நம்மை விசுவாசத்தில் அசைத்து அசுத்தத்தில் அமிழ்த்த புதுப்புதுத் திட்டங்களைப் பிசாசு தீட்டியவண்ணமிருக்கிறான். தப்புவதற்கு ஜெப மொன்றே வழி. முழங்காலில் பலவீனமாயிருந்தால் அவனது தாக்கு தல்களுக்குப் பலியாவது நிச்சயம். "தீமையினின்று எங்களை இரட்சியும்" என்று இயேசு ஜெபிக்கக் கற்பித்தார்.

3. தேவ வசனத்தில் ஊறியிருங்கள்.

முடிவு நெருங்க நெருங்க போர் வலுக்கிறது. "பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலம் மட்டும் உண்டென்று அறிந்து மிகுந்த கோபங்கொண்டி ருக்கிறான்" என்று வாசிக்கிறோம் (வெளி 12:12). கிறிஸ்தவனின் போராயு தங்களில் "தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்" ஒன்றே தாக்கும் ஆயுதமாகும்.

தேவ மக்களை அவரது வார்த்தையைச் சந்தேகிக்கச் செய்வதே ஆதிமுதல் பிசாசின் சதியாகும் (ஆதி 3:1). அறிவு பெருகிய இக்காலத்தில் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் கொண்டு கிறிஸ்தவர்க்கு வேதத்தின் மீதுள்ள எளிய விசுவாசத்தை அசைக்க அவன் முயல்கிறான். வேதம் ஒரு விஞ்ஞானப் புத்தகம் அல்ல; ஆனால் சரியான விஞ்ஞானம் அதற்கு ஒத்தேயிருக்கும். மனித அறிவு அழியும்; தேவ வசனமோ என்றும் நிற்கும் (1 பேது 1:24,25).

எங்கும் இளைஞரும் முதியோரும் "ஒரே tension" என்கின்றனர். வாழ்க்கை எளிமையாயிருந்த முற்காலத்தில் இதைக் கேள்விப்பட்டது யார்?

தேவ வசனம் மட்டுமே அமைதி மற்றும் சமாதானம் நல்கும். ஏனெனில் வசனமே உண்மையுள்ளது, ஒழுக்கமுள்ளது, நீதியுள்ளது, கற்புள்ளது, அன்புள்ளது, நற்கீர்த்தியுள்ளது, புண்ணியமானது, புகழுடையது. நமது மனது அதைச் சிந்தித்துக்கொண்டேயிருக்கும்போதுதான் "தேவ சமாதானம்" நம்மோடிருக்கும்; "சமாதானத்தின் தேவன்" நம்மோடிருப்பார்! (பிலி 4:7-9).

வாழ்வின் எத்துறையிலும் பிரச்னைகளும் கவலைகளும் அத்துமீறிய வண்ணமிருக்கின்றன. நாளாக ஆக இருள்தான் அதிகரிக்கிறது. "சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும்" மாறுமுன்னே இப்படி! (அப் 2:20). நமது நோய்க்கு தாவீது தரும் கைமருந்து இதோ: "உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்... நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின" (சங் 119:92,54).

வெள்ளம் வருகிறது, புயல் வீசுகிறது. "அசையாதவைகள் நிலைத்திருக் கத்தக்கதாக" கடவுள் பூமியையும் வானத்தையும் இன்னும் ஒருதரம் அசைத்துக்கொண்டிருக்கிறார். வசனமாம் கற்பாறையில் நமது வாழ்வும் ஊழியமும் அடித்தளமிடப்படாவிடில் அழிவை அளவிடமுடியாது (மத் 7:24-27; எபி 12:25-27).

சர்ப்பமானது பூமி மீது துர்வுபதேசங்களை வெள்ளமாய் ஊற்றிக் கொண்டேயிருக்கிறது. "தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும்" மட்டுமே எதிர்த்து வெல்ல முடியும் (1 தீமோ 4:1-5). மக்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விரும்பாது, சத்தியத்திற்குப் பதிலாகக் கதை விரும்பும் காலம் வந்துவிட்டது (2 தீமோ 4:1-4). நாமோ வசனத்தைப் பயிற்சித்துக் கொண்டே, பறை சாற்றிக்கொண்டே இருக்கவேண்டும்.

ஆன்மீக, அரசியல், சமுதாய, இப்படி எத்துறையின் பிரச்னைக்கும் பதில் வேதத்தில் உண்டு. வேதம் பழைமையாய்ப் போவதில்லை. மனிதருக்குள் கிறிஸ்து எப்படியோ அப்படியே புத்தகங்களுக்குள் பைபிளும்! நமது வேதமானது தேவனது புத்தகம் மட்டுமல்ல; அது புத்தகங்களுக்கெல்லாம் தேவனாம்!

4. உங்கள் குடும்பத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.

குடும்பம் தேவனது நித்திய எண்ணம். படைப்பின் அடிப்படைக் கூட்டே குடும்பம்தான். அதைச் சீரழிக்க சத்துரு தன்னாலியன்ற அத்தனையையும் செய்கிறான். குடும்பங்கள் பெருவாரியாக உடைந்துகொண்டிருக்கின்றன.

திருமண உடன்பாடுகள் உருக்குலைகின்றன. கணவன் மனைவி ஒருவரோடொருவர் பொறுமையிழந்து, கசந்துகொள்கின்றனர். பிள்ளைகளுக்குப் பெற்றோர் மீது வெறுப்பு. இவையெல்லாம் முடிவுக்கு அடையாளங்களெனக் கீழ்வரும் பகுதிகள் அறிவிக்கின்றன.

"இதோ கர்த்தரின் பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன் நான் உங்களிடம் எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடி, அவன் பிதாக்களின் இருதயத்தைப் பிள்ளைகளிடமும், பிள்ளைகளின் இருதயத்தை அவர்கள் பிதாக்களிடமும் திருப்புவான்" (மல் 4:5,6). பழைய ஏற்பாட்டில் இவ்விரு இறுதி வசனங்கள் ஆவியானவரின் இறுதிக்கால ஊழியத்தைக் குறிப்பிடுகின்றன.

"கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில் மனிதர் தற்பிரியராயும்... தாய் தகப்பன்மார்க்குக் கீழ்ப்படியாதவர்களாயும்... சுபாவ அன்பில்லாதவர்களாயும்... இருப்பார்கள்" (2 தீமோ 3:1-3).

குடும்பம் காக்கப்பட கீழுள்ள எளிய வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்—

நிதானமாக ஒருவரோடொருவர் நேரம் செலவழித்து கணவனும் மனைவியும் அன்பிலும் கண்ணியத்திலும் நெடுகவே வளரவேண்டும். சேர்ந்து ஜெபியுங்கள், தியானியுங்கள், நன்மைகளை அனுபவியுங்கள். உண்மை, மன்னிப்பு, சகிப்பு இவையே அன்பின் அடையாளங்கள். 1 கொரிந்தியர் 13:4-7ஐ அடிக்கடி வாசித்துக் காரியங்களைச் சரிசெய்து கொள்ளுங்கள்.

பெற்றோர் பிள்ளைகளுக்கு எஜமான்களாயல்ல, எடுத்துக்காட்டுகளாயிருக்கவேண்டும். பிள்ளைகளைப் பயமுறுத்தவோ, அளவுக்குமீறி திருத்தவோ கூடாது. வசனத்தின்படி, தந்தையர்தான் அதிகப் பொறுப்பெடுக்க வேண்டும் (எபே 6:4). இக்காலங்களில் பெற்றோர் பிள்ளைகளுக்குத் தங்களைக் கொடுப்பதைவிட மற்ற அத்தனையையும் கொடுத்துவிடுகின்றனர். இதுதான் சரிவுக்குக் காரணம்.

எதற்கும் குடும்ப ஜெபம் பலியாகக்கூடாது. தொலைக்காட்சிப் பெட்டியோ, குடும்ப ஜெப நேரத்தைக் கொள்ளையாடும் வேறு எந்த பொழுதுபோக்கோ அது தூக்கியெறியப்படவேண்டும். குடும்ப ஜெபமே குடும்ப ஜெயம்! இங்கிலாந்தின் அத்தனை இறையியல் நிபுணர்களிடமும் கற்றதைவிட தனது தாயிடமிருந்தே அதிகம் கற்றதாக ஜான் வெஸ்லி சாட்சியிட்டார்.

பெற்றோராகிய நாம் இந்த இறுதிக்கால இறைவாக்கை நமது பிள்ளைகளுக்காக உரிமை பாராட்டுவோம்: "கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்" (அப் 2:17).

மகிழ்ச்சியான குடும்பம் முன்னதாக அடைந்த பரலோகமாம்!

5. ஒருவருக்கொருவர் ஆதரவாயிருங்கள்.

"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகரின் அன்பு தணிந்துபோகும்" (மத் 24:12).

நம்பிக்கையின்மை, ஒருமனமின்மை, ஏமாற்றுதல், பிரிந்துபோதல் இதுவே இன்று வாடிக்கை. உறவுகளின் ஆழத்தில் சுயநலமும் தந்திரமும் தான். நேர்மைக்குப் பதிலாக மாய்மாலம். வெளிப்படைக்குப் பதிலாக சதி. ஒருவரையொருவர் நம்புவதில்லை. எதிலும் சந்தேகம். இது உலகைப் பற்றிய விபரம் மட்டுமல்ல, சபையும் அப்படித்தான். இங்கு நாம் சபையைக் குறித்துப் பேசுகிறோம்.

சபையானது ஓர் இராஜ்யமாம். "தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அந்த இராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே." சபையானது ஒரு வீடாம். "தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே" (மாற் 3:24,25). நாம் எப்படி? துண்டுபட்டும் வாழ்வுண்டோ?

"நீங்கள் கவனமாய் நடந்து... **நாட்கள்** பொல்லாதவைகளானதால்... தெய்வ பயத்தோடே **ஒருவருக்கொருவர்** கீழ்ப்படிந்திருங்கள்" (எபே 5:15,16,21).

"**ஒருவருக்கொருவர்** விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ **நியாயாதிபதி** வாசற்படியில் நிற்கிறார்" (யாக் 5:9).

"**ஒருவரையொருவர்** கவனித்து... **நாளானது** சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும்" (எபி 10:24,25).

வேறு வழியின்றி உலகம் சபையை நோக்கிப் பதிலுக்காக— இன்று— பார்த்துக்கொண்டிருக்கையில் ஆயிரவருட ஆட்சியைக் குறித்துப் பேசிப் பயனென்ன? மாளும் உலகில் துவளும் சபை என்று ஒருவர் விமர்சித்தார்!

பூமிக்கு உப்பு நாம்தானே ? "உங்களுக்குள் உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் **சமாதானம்** உள்ளவர்களாயுமிருங்கள்" (மாற் 9:50).

உள்ளூர் விசுவாசிகளோடு அடிக்கடி கூடுங்கள். ஐக்கியம் உண்மையானதாயிருக்கட்டும். கரிசனையோடு ஒருவருக்காயொருவர் ஜெபியுங்கள். உதட்டளவு பாசம் வேண்டாம். விசுவாசம் செயலாகட்டும். பிறர் பாரத்தைச் சுமந்திடுங்கள். மகிழ்வோரோடு மகிழுங்கள். அழுவோரோடு அழுங்கள். ஆன்மீக மற்றும் பொருளாதார ஆசிகளைப் பகிருங்கள். ஒருவரையொருவர் மன்னியுங்கள். புறங்கூறுதல் வேண்டாம். கதை திரித்தல் ஒழியட்டும். பிறர் குற்றங்களை வெளிப்படுத்தாதிருங்கள். நமது அன்பினால் உலகம் நம்மைக் கிறிஸ்தவரென அடையாளங்காணட்டும். *அன்பே பிரதானம்* எனப் பாடுவது நல்லது; அன்பே பிரயாசமாகவும் இருக்கவேண்டும். பிறர் குறைகளைச் சகியுங்கள். குறைவற்றோர் யார் ? தலைமைப் பொறுப்பிலிருந்தால் உடன் பணியாளரை ஆட்டிப்படைக்காதீர்கள், ஆசீர்வதியுங்கள்.

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று... எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்" (1 பேது 4:7-9).

6. உங்கள் மனதை மேலுலகில் வையுங்கள்.

பூவுலகுக்குப் பயனில்லாது போகுமளவு பரலோகச் சிந்தையா, அல்லது பரலோகுக்குப் பயனில்லாது போகுமளவு பூவுலகச் சிந்தையா ? நம்மைப் பொறுத்தவரை இரண்டாவதுதான் உண்மை.

பஞ்சத்தின் பரிதாபம் என முன்பு சொல்வதுண்டு. இப்போது அது பணத்தின் பரிதாபம் என்றாகிவிட்டது. செல்வந்தர் மகிழ்ச்சியாயில்லை. பணம் கடல்நீர் போன்றது. குடிக்கக் குடிக்கத் தாகம்தான். ஆனாலும் இந்தக் காற்றைப் பிடிக்க ஒடும் ஓட்டத்தை நிறுத்த மனிதருக்கு அறிவு வரவில்லை. "போதுமென்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" என்கிறது வேதம் (1 தீமோ 6:6).

"பணக்காரனாகவேண்டுமென்று முயற்சியாதே... இல்லாமற் போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன் ? அது கழுகைப் போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு... பறந்துபோகும்" (நீதி 23:4,5).

இவ்வுலகில் சிக்கியவன் அடுத்தவுலகைக் குறித்துச் சிந்தியான். கர்த்தரின் வருகை நெருங்கிற்று. எதைத் திட்டமிட்டாலும் இதை நினை

விற்கொள்வோம். இந்த நினைவில்லாதவர்கள் "கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்... அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து... இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்" (பிலி 3:18-20).

தேவைக்கும் அதிகமாய்த் தேவன் நமக்குக் கொடுத்திருப்பாரானால், அது தேவையில் அங்கலாய்ப்போருக்குக் கொடுத்துவிடவே. "நன்மை செய்யவும், நற்செயல்களில் நிறைவானவர்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும்... வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும்" செல்வந்தருக்குக் "கட்டளை" வருகிறது (1 தீமோ 6:17-19). அந்திக் கிறிஸ்து வசம் விட்டுச் செல்வதற்காகவா நமது சம்பத்து ?

7. சந்திக்கப்படாதோரைத் தீவிரமாய்ச் சந்தியுங்கள்.

கிறிஸ்துவின் சுவிசேஷமே முடிவான பதில். சமாதானப் பிரபுவின் செய்தி எங்கும் பறைசாற்றப்பட வேண்டும். அது மார்க்கபக்தியான எருசலேமோ, அரசியலில் தேர்ந்த ரோம் நகரோ, அறிவுபடைத்த கொரிந்துவோ எங்கும் அப்போஸ்தலன் பவுல் துணிந்து வசனத்தைப் பிரசங்கித்தான். நாமும் நமது நாடெங்கும், நானிலமெங்கும் அப்படியே செய்யவேண்டும்.

எல்லாருக்கும் சுவிசேஷத்தைக் கேட்க வாய்ப்பு கொடுக்கவே கர்த்தரின் வருகை தாமதித்துக்கொண்டிருக்கிறது (2 பேது 3:9). உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டபின் முடிவு வரும் (மத் 24:14).

எங்கிருந்தாலும், எப்பணி செய்தாலும் கிறிஸ்துவுக்காய் சாட்சிபகருங்கள். மக்களின் தேவைகள் மற்றும் பிரச்னைகளில் ஈடுபடுங்கள். கிறிஸ்துவே பதிலென அறிவியுங்கள். நற்செய்தி கூறுவதில் வெட்கம் வேண்டாம். நற்செய்தி ஒன்றே வழி. பாவமும் பாரமும் நிறைந்த பாழுலகுக்குச் சிலுவையே தேவன் தந்த கூட்டல் அடையாளம். உலக முழுவதையும் கிறிஸ்துவிடம் கொண்டுவர முடியாமலிருக்கலாம்; ஆனால் உலக முழுவதுக்கும் கிறிஸ்துவைக் கொண்டு செல்லலாமே!

நற்செய்தி ஊழியங்களிலும், மிஷனரிப் பணிகளிலும் தீவிர ஈடுபாடு கொள்ளுங்கள். உங்கள் ஜெபத்தால் இவைகளைத் தாங்குங்கள். தாராளமாய்ப் பொருளுதவி செய்யுங்கள். இதற்குமேல் முடியாது எனுமளவு செய்துவிடுங்கள்.

உங்கள் வாழ்வு முழுவதையுமே மிஷனரிப்பணியில் ஊற்றிவிடுவது குறித்தும் சிந்தியுங்கள். "எங்கு, எங்ஙனம் வாழ்கிறேன் என்பது எனக்குக் கவலையில்லை; ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணினால் அதுவே போதும்" என்று மொழிந்தார் டேவிட் பிரெய்னார்டு.

சமுதாயம் கெட்டழிகிறது; நாம்தான் உப்பு. உலகம் இருளடைகிறது; நாம்தான் வெளிச்சம் (மத் 5:13,14).

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

ஆசிரியரது பிற நூல்கள்—

- ❒ அறிவூட்டும் அகவுணர்வுகள்
- ❒ அழகிய பாதங்கள்
- ❒ ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி ?
- ❒ இரட்சிக்கப்படுவது எப்படி ?
- ❒ ஊழியரும் மக்களும்
- ❒ ஐந்தப்பம் இரு மீன்
- ❒ கண் திறக்கும் கட்டுரைகள்
- ❒ காட்டுத் தேன்
- ❒ சமநிலைக் கிறிஸ்தவன்
- ❒ சிறு நரிகள்
- ❒ திறந்த வானம்
- ❒ திரும்பிய மனிதன்
- ❒ தெளிவான பதில்கள்
- ❒ பொற்பழங்கள்
- ❒ நெஞ்சில் நெருப்பு
- ❒ மாணவ மணிகளுக்கு...

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006
India

௮௦

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

- ❒ எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத ஓர் ஊழியம்.
- ❒ எழுப்புதல் முகாம்கள், வேத பாடங்கள், பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.
- ❒ பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு ஜெபக் குழுக்கள் உருவாக்குதல்.
- ❒ முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின் குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள், மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.
- ❒ ஏறத்தாழ 250 முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம், ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத், கேரளம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.
- ❒ அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, தமிழ், தெலுங்கு, மராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை மற்றும் புத்தகங்கள், பிரதிகள் வெளியிடுதல்.
- ❒ மருத்துவப் பணி, நிவாரணப் பணி, எழுத்தறிவு கற்பித்தல் போன்றவை மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

இவ்வியக்கத்திற்காய் ஜெபியுங்கள்!
இயக்கத்தின் ஊழியங்களில் பங்குபெறுங்கள்!
பொருளுதவி கொடுத்து ஆதரியுங்கள்!

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 0416-242943, 248943
E-Mail: bym@vsnl.com

பரிசுத்த வேதத்திலிருந்து
கலப்படமற்ற போதனை...

சோதனையில் வெற்றி பெறுவது எப்படி ?

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி ?

எழுப்புதல் என்றால் என்ன ?

தேவனைத் தொழுவதென்றால் என்ன ?

எனக்காக ஜெபிப்பது எப்படி ?

மிஷனரிப் பணிக்காக ஜெபிப்பது எப்படி ?

இக்காலத்துக்கு உபவாசம் தேவையா ?

இயேசு போல் ஊழியம் செய்வது எப்படி ?

இன்று அற்புதங்கள் அவசியந்தானா ?

எழுப்புதல் அணைவது ஏன் ?

உபதேசங்களைச் சோதித்துப் பார்ப்பது எப்படி ?

பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி ?